

1 — 30-1



நல்ல ஆரோக்கியம்

குடும்பத்தில் அனைவருக்கும்!





குடும்பத்தில் அனைவரும் தேக சுகத்துக்காக சுவையுள்ள மணம் நிறைந்த "ஓவல்டின்" அருந்த வேண்டும். தேகம், நரம்புகளுக்கு வலிமையூட்டுவது அது. அதில் பார்லி மால்ட், பால், கொக்கோ, இயற்கை சத்துக்கள் வைட்டமின்கள் உண்டு. அதனால்தான் லீலா இல்லாள், தினசரி உழைப்புக்கு வேண்டிய சக்திக்காகவும் இரவில் நன்கு தூங்கவும் காலையிலும் மாலையிலும் "ஓவல்டின்" கொடுக்கிறாள். போலிகள் விஷயத்தில ஜாக்கிரதை!





'OVALTINE'

'ஓவல்ட்டின்' குடும்பத்துக்கு சிறந்த பானம்

டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிமிடெட்., தபால் பெட்டி நெ. 1205, மதராஸ். மற்றும் பம்பாய், கராச்சி, கல்கத்தாவிலும். தி இங்கிலீஷ் & ஸ்காட்டிஷ் ஜாயிண்ட் கோஆபரேடிவ் ஹோல்சேல் சொஸைட்டி லிமிடெட்., கள்ளிக்கோட்டை (மலபார் கோஸ்டுக்கு)



தைக்கும் இந்த மோவாய்க் கட்டையினால் அதிகச் செலவு ஏற்படுகிறது

அநேக மனிதர்கள் ஏழு நாட்களில் நான்கு நாட்கள் க்ஷவரம் செய்துகொள்ளுவதில்லை. அவர்களுக்கு ஒரு வாரத்தில் மூன்று தடவைகளுக்கு மேல் நாவிதனை அழைப்பது சாத்தியமில்லை. இதற்கே குறைந்தது ஆறு அணுக்கள் செலவாகும். ஆறு அணுக்கள் செலவுசெய்வதே அதிகம் தான். அவ்வாறு செலவுசெய்தாலும் க்ஷவரம் செய்துகொள்ளாத நாட்களில் தைக்கும் மோவாய்க்கட்டை போயிருக்க வேண்டியதுதான்.




இந்த மிருதுவான மோவாய்க் கட்டைக்கு குறைந்த செலவு!

நீங்கள் 7 ஓ' க்ளாக் பிளேடுகளால் க்ஷவரம் செய்துகொள்ளுவீர்களேயானால், வாரத்தில் ஒவ்வொரு நாளும் மிருதுவான மோவாய்க் கட்டையை உடைத்தாயிருப்பதுடன் பணத்தையும் மிச்சப்படுத்துவீர்கள். ஐந்து பிளேடுகளடங்கிய ஒரு பாக்கெட்டின் விலை அணு 6—நாவிதன் செய்யும் மூன்று க்ஷவரங்களின் கிரயத்துக்குச் சரியானது--ஒரே பாக்கெட்டிலுள்ள உண்மையாகவே கூருள்ள பிளேடுகளால் நீங்கள் பல வாரங்கள் க்ஷவரம் செய்துகொள்ளலாம்.

மார்க்கெட்டில் 7 ஓ. க்ளாக் பிளேடுகள்தான் மிகச் சிறந்தவை. நன்கு கூருள்ளவை—உயர்ந்த எஃகினால் மும்முறை சாணை தீட்டப்பெற்றவை. பணம் கொடுத்து வாங்குவதற்குத் தகுதியான மிகச்சிறந்த பிளேடுகள்.

●

தினந்தோறும் 7 ஓ க்ளாக் பிளேடுகளால் க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்.



குறைந்த செலவில் அதிக க்ஷவரங்கள் அளிக்கும் பிளேடுகள்

5 பிளேடுகளடங்கிய ஒரு பாக்கெட்டுக்கு அணு 6

எக்ஸிமா

"உடனேயே நிவாரணமடைகிறது"

என்கிறார் கெமிஸ்டு



"கால்களில் எரிச்சலளித்து வந்த எக்ஸிமாவை உங்கள் அற்புதமான தயாரிப்புதான் உடனே நிவாரணமளித்தது என்று கூற முன் வருகிறேன். தடிப்பான தோலை மென்மையாக்கவும், ஏற்பட்ட எரிச்சலைப் போக்கவும் ஒரே ஒரு பாட்டில் வெல்டர்மா சரியாக இருந்தது. இந்த சரும நோயினாலோ அல்லது இதைப்போல வேறுவித சருமநோயினாலோ அல்லல் படுகிறவர்களுக்கு வெல்டர்மாவைத்தான் சிபாரிசு செய்ய வேண்டும் என்று கூறத் தேவையில்லை."—CL.

வைத்தியர்களும் வற்புறுத்துவது:

எக்ஸிமா, கொப்புளங்கள், சிராய்ப்பு, பருக்கள் முதலிய சகல சரும நோய்களும் வெல்டர்மாவிலுள்ள 'கிருமி நாசன சக்தி'களிரண்டுக்கும், அடங்கி குணமாகி விடுகின்றன. இந்த நவீன மருந்து முற்றிலும் விநோதமானது. 'நீரில் எண்ணெய் சேர்க்கை' என்னும் ஆதாரம் வைத்திய ஆராய்ச்சியிலேயே மிகவும் அபூர்வம். முதலாவதாக நோய்ப்பட்ட இடத்திலுள்ள விஷத்தை வெளியேற்ற உதவுகிறது. நோய் தொத்தி விடுமென்ற அபாயமே இல்லை. இரண்டாவதாக வெல்டர்மாவின் இருவித கிருமி நாசன சக்திகளும் (ஒவ்வொன்றும் வெவ்வேறு வித விஷக்கிருமிகளுக்குச் சத்துரு) போட்ட மாத்திரத்திலேயே வியாதி தொத்தியிருக்கும் மூலஸ்தானத்திற்கு சென்று விடும். எரிச்சல் அடங்கி விச்ராந்தி ஏற்படுகிறது. ஆனால், வெல்டர்மாவை முதல் தடவையாக உபயோகிக்கும் போது சற்று விருவிருப்பை உண்டாக்கும். வெல்டர்மாவிலுள்ள இருவித கிருமிநாசன சக்திகளும் வேலை செய்யத் தொடங்கி விட்டன என்பதற்கு இதுதான் அறிகுறி.

கிருமிகளைக் கொல்ல கார்பாலிக் களிம்பை விட பத்து மடங்கு அதிக சக்திவாய்ந்தது. இருந்தாலும் ஆறுதல் தரும். வெகு மோசமான சரும நோய்களுக்கெல்லாம் வெல்டர்மாவைத்தான் சரும வைத்திய நிபுணர்கள் வற்புறுத்துகிறார்கள். வைத்தியசாலைகளிலும் ஆராய்ச்சி சாலைகளிலும் பரிசீலனை செய்யப்பட்டது. தூய வெண்மையானது. கறை படாது. வழ வழப்பானது, ஆனாலும் பிசுக்கற்றது. உபயோகிக்கத் தகுந்தது. வெட்டுக்காயங்களையும் சிராய்ப்புகளையும் விரைவில் ஆற்றி விடுகிறது.



விளையாடும் கைகளில் அழுக்குப்படிகின்றது…
எங்கு அழுக்கிருக்கிறதோ அங்கு கிருமிகளாலான
அபாயம் ஏற்படும்!
LIFEBUOY
LIFEBUOY SOAP
அடிக்கடி லைப்பாயினால் சுத்தம்
செய்துகொள்ளுங்கள்!
லைப்பாய்
சோப்
அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து உங்களைக்காப்பாற்றுகிறது
L. 106-172 TM

இண்டோ - கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம்

செண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்:	ரூ. 25,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்:	ரூ. 21,25,000
செலுத்தப்பட்ட மூலதனம்:	ரூ. 18,75,000
ரிஸர்வ் நிதி:	ரூ. 10,00,000

●

மதராஸில் ஆபீஸ்கள்:

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, தியாகராயநகர், பெரியமேட், மைலாப்பூர், திருவல்லிக்கேணி

தென்னிந்தியாவின் எல்லா முக்கிய நகரங்களிலும் பிராஞ்சுகளும், சப் - ஆபீஸ்களும் உள்ளன.

●

முன்னேற்றமான திட்டங்கள்

ரேகரிங் டெபாஸிட்டுகள்:

ஒவ்வொரு மாதம் ரூபாய் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டுள்ள பெருக்குத் தொகைகளோ செலுத்தி வரலாம். இந்த டிபாஸிட்டுகள் 47 அல்லது 90 மாதங்களுக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

ரூ. ஒன்று விதம் 47, 90 மாதங்களுக்கு செலுத்தி வந்தால் முறையே 48, 91 - வது மாதக் கடைசியில் ரூ. 50, 100 விதம் திரும்பப் பெறலாம்.

காஷ் சர்டிபிகேட்டுகள்:

மூன்று வருஷ காஷ் சர்டிபிகேட்டுகள்: ரூ. 50 - ம் அதன் பெருக்குத் தொகைகளுக்கும் பெற்றுக் கொள்ளலாம்.

50 ரூ. காஷ் சர்டிபிகேட்டுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ. 46/-

ஐந்து வருஷ காஷ் சர்டிபிகேட்டுகள்: ரூ. 10 - க்கும் அதன் பெருக்குத் தொகைகளுக்கும் பெற்றுக் கொள்ளலாம்.


10 ரூ. காஷ் சர்டிபிகேட்டுக்கு செலுத்த வேண்டிய தொகை 8—10—0.

மேற்படி திட்டங்களின் வசதிகளை எங்கள் எல்லா ஆபீஸ்களிலும் எவ்வித தொகைகளுக்கும் பெறலாம்.

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்.

S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரெக்டர்

அசைவிலொரு அதிசயம்!



பஞ்சணையில் படுத்துறங்கும் சுகத்துக்கு ஈடானது 1948 ப்யூக் சவாரி. எந்த ரஸ்தா வானாலும் சரி, காற்றில் மிதப்பது போன்ற சுகமான ஓட்டம். துளி ஆட்டம் அசைவு இருக்க வேண்டுமே? ஊஹூம், இடையிலே கிடையாது. புதுக் கார் வாங்கு முன் ஒரு தடவை இந்த 1948 ப்யூக்கில் ஏறிச் சென்று பாருங்கள். அதன் சுகம் அப்பொழுது தெரியும்.

1948 ப்யூக் ஸூபர்

Buick

SUPER

சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடெட்

மவுண்ட்ரோடு :: சென்னை

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், லிமிடெட்

மதுரை : திருச்சி : திருநெல்வேலி : புதுக்கோட்டை

சென்னை பாரகன் & பிராட்வேயிலும்



டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:

சென்னை நகர உரிமைகள்: ஸ்ரீ ரத்னா பிக்சர்ஸ், 83, பூந்தமல்லி ஹைரோட், மதராஸ் - 10
திருவாங்கூருக்கு: தி பிலிம் டிஸ்ட்ரிப்யூடிங் கம்பெனி, எர்ணாகுளம்
கொச்சின் மலபாருக்கு: அசோஸியேடட் பிக்சர்ஸ் லிமிடெட், எர்ணாகுளம்
மைசூர் பிராந்தியத்திற்கு: ஸ்ரீ எஸ். எஸ். அய்யர், சாரதா பிலிம்ஸ், 174, காந்தி நகர், பெங்களூர் - 2
கோயமுத்தூர் நீலகிரிக்கு: கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட், கோயமுத்தூர்
தென் ஆற்காடு, வட ஆற்காடு செங்கற்பட்டு சித்தூர் ஆகிய ஜில்லாக்களுக்கு:
ஸ்ரீ எ. கிருஷ்ணஸ்வாமி, பிலிம் டிஸ்ட்ரிப்யூட்டர், 14, பெங்களூர் ரோடு, வேலூர்
இலங்கைக்கு: வெல்லிங்டன் டாக்கி சர்க்யூட், 117, புது செட்டி வீதி, கொழும்பு
சேலத்திற்கு: அசோகா பிக்சர்ஸ், குகை, சேலம்
ஆந்திரா ஸ்டேட் ஜில்லாக்களுக்கும், ஹைதராபாத் சமஸ்தானத்திற்கும்: சரஸ்வதி டாக்கீஸ் லிமிடெட், விஜயவாடா
திருச்சி, தஞ்சாவூர் ஜில்லாக்களுக்கு: முத்து மாணிக்கம் கம்பெனி, சிதம்பரம்

கல்கி
பொருளடக்கம்
காந்திஜி நினைவு மலர்

மலர் 9 | இதழ் 27 — ஜனவரி 30 — சர்வதாரி ௵ தை 17

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 27.

என்ன செய்தி?

ஆசிய மகாநாடு

மகாத்மா காந்தி தலைவர் பதவியை நாடவில்லை. ஆனால், அந்த மகானை அடைவதற்காகத் தலைவர் பதவி தவம் கிடந்தது! அது போலவே காந்திஜி அவதரித்த இந்தியாவும் ஆசியாவுக்கோ அல்லது உலகத்துக்கோ தலைமை வகிக்க விரும்பவில்லை. எனினும், இந்தியா விரும்பினாலும் விரும்பா விட்டாலும் ஆசிய நாடுகள் இந்தியாவின் தலைமையையே நாடுகின்றன. இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேருவின் தலைமையில் டில்லியில் நடந்த ஆசிய நாடுகள் மகாநாடே அதற்குச் சான்றாகும்.


இந்தியாவின் அழைப்புக்கு இணங்க ஆசிய மகாநாட்டில் பத்தொன்பது நாடுகளின் சர்க்கார் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். அவர்கள் உலகத்தின் ஜனத்தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்களின் பிரதிநிதிகள் என்பதிலிருந்தே அந்த மகாநாடு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அவர்கள் சிறிதும் அபிப்பிராய பேதமின்றி ஏகமனதாகச் செய்திருக்கும் தீர்மானங்கள் அதைக் காட்டிலும் விசேஷமானவை. சுதந்திர ஆசிய நாடுகளின் சர்க்கார் பிரதிநிதிகள் இத்தகைய ஒரு மகாநாட்டில் கலந்து கொண்டது சரித்திரத்திலே இதுதான் முதல் தடவை. இவ்வளவு பெரிய மகாநாடு மூன்றே நாளில் வெற்றிகரமாக முடிந்ததும் சரித்திரத்திலே ஒரு புதுமை என்று கூறுவது மிகையாகாது. சந்தேகத்துக்கு இடமில்லாத சிறிய பிரச்னைகளையும் மாதக்கணக்கில் குழப்பும் ஐக்கிய நாடுகளின் சபைக்கு ஆசிய மகாநாடு அவ்வாறாக வழிகாட்டியிருப்பதுடன், சில தீர்மானங்களை நிறைவேற்றி, அவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்தோனேஷ்யப் பிரச்னையைத் தீர்க்கும்படியும் சிபார்சு செய்திருக்கிறது.

"டச்சு சர்க்கார் அதிகாரிகள் இந்தோனேஷ்யக் குடியரசுத் தலைவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும். இந்தோனேஷ்யாவில் இடைக்கால சர்க்காரை அமைக்க வேண்டும். 1949 அக்டோபர் மாதம் முதல் தேதிக்குள் அங்கு அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்கள் பூர்த்தியாகி விடவேண்டும். 1950-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதிக்குள் டச்சுக்காரர்கள் தங்களுடைய அதிகாரம் முழுவதையும் இந்தோனேஷ்யர்களிடம் ஒப்புவித்து விடவேண்டும்." இது தான் ஆசிய மகாநாட்டில் நிறைவேறிய முக்கிய தீர்மானமாகும்.


இந்தோனேஷ்யாவுக்கு நீதி வழங்க ஐக்கிய நாடுகள் சபை தவறி விட்டாலும், ஆசிய நாடுகள் அந்தத் தேசத்தைக் கைவிடாது என்பதையே டில்லியில் நடந்த மகாநாடு அந்தச் சபைக்கும் உலகத்துக்கும் காட்டியிருக்கிறது.

சட்ட நிபுணர் சாப்ரு

தீவிர வாதிகளுக்கு மிதவாதியாகவும் மிதவாதிகளுக்குத் தீவிர வாதியாகவும் இருந்த சர் தேஜ்பகதூர் சாப்ரு காலமானதைக் குறித்து வருந்துகிறோம். சர் சாப்ரு சிறந்த தேச பக்தர். சட்ட வரம்புக்கு உட்பட்டு அவர் நம் தேசத்துக்குச் செய்த அரிய சேவைகளை யாரும் மறக்க முடியாது. அரசாங்கம் அடக்குமுறை வெறி பிடித்துக் காங்கிரஸ் தலைவர்களை யெல்லாம் சிறையில் அடைத்தபோது, சர்க்கார் சீற்றம் தணிந்து சமாதான முறையை நாடும்படி




சர் தேஜ்பகதூர் சாப்ரு



செய்த பெருமை சாப்ருவுக்கே உரியது. அவருடைய முயற்சியின் பயனாகவே சரித்திரப் பிரசித்தி பெற்ற காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டு, காந்திஜி லண்டனில் நடந்த வட்ட மேஜை மகாநாட்டுக்குச் செல்வதும் சாத்தியமாயிற்று. லண்டனில் நடந்த மூன்று வட்ட மேஜை மகாநாடுகளிலும் சாப்ரு கலந்து கொண்டு பிரிட்டிஷ் சர்க்கார் பிரதிநிதிகளுக்கு அரிய ஆலோசனைகளைக் கூறினார். தங்களுடைய சார்பில் வழக்குகளை நடத்தும்படி பல மகாராஜாக்களால் வருந்தி அழைக்கப் பட்டுவந்த சாப்ரு, இலவசமாக ஏழைகளின் சார்பிலும் எத்தனையோ வழக்குகளில் ஆஜரானார் என்பதே அவருடைய உதார குணத்துக்கும் பெருந்தன்மைக்கும் எடுத்துக்காட்டாகும். செங்கோட்டையில் நடந்த இந்திய தேசிய இராணுவ (ஐ. என். ஏ.) வழக்கு விசாரணையின் போதும் அவர் ஸ்ரீ புலாபாய் தேசாய்க்கு உதவியாக இருந்துவந்தார். அப்படிப்பட்ட சட்ட நிபுணரும் அரசியல் அறிஞரும் தேச பக்தருமான சர் சாப்ரு இந்திய அரசியல் திட்டம் உருவாகி வரும் இச் சமயத்தில் நம்மை விட்டுப் பிரிந்தது தேசத்துக்கு ஒரு பெரிய கஷ்டமாகும்.

திருப்தியடைகிறோம்

மாசற்ற இரத்தினங்களுக்கு இமிடேஷன்கள் இருப்பதுபோல், மாசற்ற கொள்கைகளுக்கும் இமிடேஷன்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றில் இமிடேஷன் சத்தியாக்கிரகமும் ஒன்று. இந்த ரகத்தைச் சேர்ந்த ராஷ்டிரீய சேவா சங்கத்தின் கிளர்ச்சியை அதன் தலைவர் யாதொரு நிபந்தனையுமின்றி நிறுத்திவிட்டதைக் குறித்துத் திருப்தியடைகிறோம். இப்போது இந்தியாவில் ஜனங்களுக்காக ஜனப்பிரதிநிதிகளால் நடத்தப்படும் ஜனங்களுடைய சர்க்கார் நடக்கிறது. எனவே இந்தச் சர்க்காருக்குத் தொல்லையைக் கொடுக்கும் எந்த இயக்கத்தையும் பெரும்பாலான ஜனங்கள் ஆதரிக்கமாட்டார்கள். அத்தகைய இயக்கத்துக்கு எவ்விதப் புனிதமான வார்த்தை போர்வையாக இருப்பினும், அதைக் கண்டு ஏமாந்து போக மாட்டார்கள். அவ்வித இயக்கத்தில் கலந்துகொள்வோர் மீது சர்க்கார் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டால், "ஜனநாயக சர்க்கார் இப்படியும் செய்யலாமா?" என்று சிலர் கேட்கிறார்கள். "ஜனநாயக சர்க்காருக்கு விரோதமாக வீண் கிளர்ச்சி செய்யலாமா?" என்று அவர்கள் முதலில் தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டால், மேலே குறிப்பிட்ட கேள்விக்கு இடமிராது.



நினையாத நெஞ்சு உண்டோ?

வருஷம் ஒன்று ஆகிவிட்டது! மாதங்கள் பன்னிரண்டு சென்று விட்டன! நாட்கள் முந்நூற்று அறுபத்தைந்து ஓடிப்போய்விட்டன! எனினும் சென்ற வருஷம் ஜனவரி மீ 30உ நம் நெஞ்சிலே சுட்டபுண் இன்னும் ஆறவில்லை; அன்று நம் அறிவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி இன்னும் மாறவில்லை; அன்றைக்கு நம் இதயத்தில் உண்டான துயரம் இன்னும் தீரவில்லை.

ஓர் ஆண்டு முழுமையாகச் சென்று விட்டது. ஆயினும் சென்ற ஜனவரி மாதம் 30உ புது டில்லியில் நிகழ்ந்த அந்தப் பயங்கர சம்பவத்தைப் பற்றி நேற்று நடந்தது போல் நினையாத நெஞ்சு உண்டோ? நினைந்து நினைந்து உருகாத உள்ளம் உண்டோ?

• • •

உலக சரித்திரத்தில் பிரதான புருஷர்கள் விஷயத்திலும் உலக மகா காவியங்களின் கதாநாயகர்கள் விஷயத்திலும் சிற்சில முக்கியமான ஒற்றுமைகளைக் காணலாம். மனித குலத்துக்கு வாழ்வு அளிக்க வந்தவர்கள் எப்போதும் தங்கள் வாழ்க்கையில் பெரும் கஷ்டங்களை அநுபவித்திருக்கிறார்கள். இராமர் காட்டுக்குச் சென்று சீதையைப் பறிகொடுத்துத் துன்பமுற்றார். கிருஷ்ணன் பிறந்த உடனேயே வேறிடம் சென்று மறைந்து வாழ்ந்தான். பஞ்சபாண்டவர்கள் வனவாசமும் அஞ்ஞாதவாசமும் செய்தார்கள். பாலன் பிரஹ்லாதன் சொல்ல முடியாத கொடுமைகளுக்கு உள்ளானான். கௌதம புத்தர் தாமே தேடிச் சென்று கடுமையான தவ வாழ்க்கையை மேற்கொண்டு அநுபவித்த கஷ்டங்களை அறியாதவர் யார்? முகம்மது நபி ஒரு சமயம் அவருடைய சொந்த ஊராகிய மக்காவை விட்டு மதீனாவுக்கு ஓடும்படி நேர்ந்தது.

உலகம் உய்யப் பிறந்த மகான்கள் சிலருடைய வாழ்க்கை முடிவு நெஞ்சு பதைக்கக்கூடிய சோக சம்பவமாக நேர்ந்திருக்கிறது.

அன்பு வழியைப் போதித்தருளிய ஏசுநாதர் தாம் பிறந்த நாட்டு மக்களின் தூண்டுதலினால் சிலுவையில் அறையப்பட்டார்.

அடிமைப்பட்டிருந்த பிரஞ்சு தேசத்துக்கு விடுதலை அளித்த ஜோன் ஆப் ஆர்க் என்னும் வீரப் பெண்மணியைக் கிறிஸ்துவ சிரேஷ்டர்கள் சூனியக்காரி என்று கூறி உயிரோடு வைத்துக் கொளுத்தினார்கள்.

உலகத்திலிருந்து அடிமைத்தனம் என்னும் பயங்கர இழிவைப் போக்கிய உத்தமர் ஆப்ரஹாம் லிங்கன் அவருடைய சொந்த நாட்டுப் பாதகன் ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

உலகத்தின் உத்தமபுருஷர்கள் ஒன்று வாழ்க்கையில் பெரும் கஷ்டங்களை அநுபவித்திருக்கிறார்கள்; அல்லது அவர்களுடைய வாழ்க்கையின் முடிவு சோகத்துக்குரியதாகி யிருக்கிறது.

• • •

ருஷ்யா தேசத்து மகானாகிய டால்ஸ்டாயைப் போலப் பிரான்ஸ் தேசத்தில் ஒரு மகான் பிறந்து நம் காலத்தில் வாழ்ந்திருந்தார். அவர் பெயர் ரோமேன் ரோலண்டு. தென்னாப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் காந்தி மகாத்மா நடத்திய அஹிம்சைப் போரைக் குறித்து அவர் கேள்விப்பட்டார். மகாத்மாவின் வாழ்க்கை வரலாற்றை நன்கு தெரிந்து கொண்டார். தெரிந்துகொண்டு மகாத்மா காந்தியைக் குறித்து 1923-ம் வருஷத்தில் பிரஞ்சு பாஷையில் ஒரு நூல் எழுதினார். அது ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்துப் பிரசுரிக்கப்பட்டது.

அந்த அருமையான புத்தகத்தை முடிக்கும்போது, கடைசிப் பாராவுக்கு முதல் பாராவில் ஸ்ரீ ரோமேன் ரோலண்டு எழுதி யிருக்கிறார்:—"This is Gandhi's message. The only thing lacking is the Cross" ("இதுவே காந்தியின் போதனை. குறைவு படும் ஒரே ஒரு விஷயம் சிலுவைதான்!")

ஸ்ரீ ரோமேன் ரோலண்டு 1923-ம் ஆண்டில் மேற் கண்டவாறு எழுதினார்.

"இவ்வளவு பெரிய மகா புருஷரா யிருக்கிறாரே காந்திஜி! இத்தகைய அருமையான உபதேசத்தை மனித குலத்துக்கு அளித்திருக்கிறாரே! இப்படிப் பட்ட உத்தம புருஷரை இந்த உலகம் சும்மா விட்டு விடுமா? மனிதர்கள்தான் சும்மா விட்டு விடுவார்களா? ஏசுவைச் சிலுவையில் அறைந்தது போல் இவரையும் கொல்லாமல் விட்டு விடுவார்களா?" என்று ஸ்ரீ ரோமேன் ரோலண்டு அதிசயப்பட்டு அம்மாதிரி எழுதினார்.

உருகாத உள்ளம் உண்டோ?

அவர் அதிசயப்பட்டிருக்க வேண்டியது இல்லை யென்று இப்போது தீர்ந்து போய் விட்டது! அவர் எழுதி இருபத்தைந்து வருஷத்துக்குப் பின்னால், அவர் குறிப்பிட்ட ஒரே ஒரு குறையும் நிவர்த்தியாகி விட்டது! மனித சமூகத்தின் கொடுமைப் பரம்பரை இன்னமும் மாற வில்லை யென்று தெளிவாகி விட்டது! மனித குலத்தில் பிறந்த சண்டாளப் பாதகன் ஒருவன் மகாத்மாவைச் சுட்டுக் கொன்று விட்டான்!

* * *

உலகம் உய்யப் பிறந்த உத்தமரைக் கொன்ற பெரும் பழி நம்முடைய காலத்தில் மனித குலத்துக்கு மறுபடியும் வந்து விட்டது.

ஆனாலும் மனித குலத்தைப் பற்றி நமக்கு அடியோடு நம்பிக்கையில்லாமல் போய்விடவில்லை.

மனித சமூகம் அபிவிருத்தியடைந்து கொண்டுதான் வருகிறது.

ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டபோது அவருடன் இரவைக் கழிப்பதற்கு முன்வந்தவர்கள் ஒரு சில பெண்மணிகள் தான்.

ஆனால் மகாத்மாவை ஒரு பாதகன் சுட்டுக் கொன்ற மறுநாள் அவருடைய உடலைத் தகனம் செய்த இடத்துக்கு இருபது லட்சம் ஜனங்கள் கதறிக் கொண்டு சென்றார்கள்.

அவருடைய புனித அஸ்தியைக் கரைத்த இடத்திற்கு நாற்பது லட்சம் ஜனங்கள் சென்று கண்ணீரும் கம்பலையுமாக நின்றார்கள்.

மகாத்மா கொல்லப்பட்டார் என்னும் செய்தியைக் கேட்டவுடன் நாவிலத்து மக்கள் எல்லாம் நெக்குருகினார்கள்.

வருஷம் ஒன்று ஆகி விட்டது. இன்றைக்கு மறுபடியும் பாரத நாடெங்கும், பூவுலகமெங்கும், மக்கள் மகாத்மாவின் வாழ்வையும் முடிவையும் நினைந்து உள்ள முருகி நிற்கிறார்கள்.

மனித சமூகம் அன்பு வழியில் — அஹிம்சா மார்க்கத்தில் முன்னேற்றமடைந்து வருகிறது; சந்தேகமில்லை.

* * *

ஸ்ரீ ரோமேன் ரோலண்டு, அவருடைய புத்தகத்தின் கடைசிப் பாராவில் சொல்லுகிறார்:—"இரண்டில் ஒன்று நேர்வது நிச்சயம். ஒன்று மகாத்மா காந்தியின் ஆத்ம சக்தி இந்த நாளிலேயே வெற்றியடையும்; அல்லது அந்த ஆத்ம சக்தி பல நூறு வருஷங்களுக்கு முன்னால் புத்தராகவும் ஏசுவாகவும் தோன்றியது போல், மறுபடியும் இப்பூவுலகில் மனித உருக் கொண்டு அவதரிக்கும். தெய்வ அம்சம் பொருந்திய அந்த அவதாரத்தின் சக்தியானது மனித குலத்தை அன்பு வழியில் கொண்டு சேர்க்கும்."

காந்தி மகானின் ஆத்ம சக்தி இந்த நாளிலேயே வெற்றியடைந்திருக்கிறது என்றே நாம் கருதுகிறோம். நம் கண்ணுக்கும் அறிவுக்கும் புலனாகாத முறைகளில் அந்த ஆத்ம சக்தி மனித குலத்தை அன்பு வழியில் சேர்ப்பித்துக் கொண்டு வருவதாகவே நம்புகிறோம்.

* * *

தற்காலத்தில் உலகத்தில் வாழும் தலைசிறந்த தத்துவ ஞானிகளில் ஐன்ஸ்டீன் என்பவர் ஒருவர். அவர் காந்தியடிகளைப் பற்றிக் கூறியிருக்கிறார்:—

"இத்தகைய ஒருவர் மானிட வடிவத்திலே வந்தார் என்றும் இந்தப் பூவுலகத்தில் அவர் நடந்தார் என்றும் இனிமேல் வரப்போகும் மானிட சந்ததிகள் நம்புவதே கஷ்டந்தான்!"

இவ்விதமாக வருங்கால சந்ததிகள் நம்புவதற்கரிய மகிமை பொருந்திய மகா புருஷர் பிறந்த நாட்டில் நாமும் பிறந்தோம். அவர் பாதம் பட்ட புண்ணிய பூமியில் நாமும் நடந்தோம். அவர் உயிர் வாழ்ந்த காலத்திலேயே நாமும் வாழ்ந்தோம்; அவரைக் கண் குளிரத் தரிசித்தோம்; அவருடைய உபதேசங்களைச் செவி குளிரக் கேட்டோம். இந்த பாக்கியங்களுக்கெல்லாம் தகுதியுடையவர்கள் நாம் என்று நமது நடத்தையினால் நிரூபிப்போமாக.

புனித தினமான ஜனவரி 30உ ஒவ்வொருவரும் ஆத்மபரிசோதனை செய்து கொள்வோமாக. கோபதாபங்களையும் மதமாற்சரியங்களையும் போக்கிக் காந்தி மகான் காட்டிய அன்பு நெறியைக் கடைப்பிடிப்போமாக!

அன்பு என்னும



பெரியோர்களின் சிராத்த நாளில் துக்கம் காட்டலாகாது. தைரியமும் உண்மை அறிவும் செலுத்தி, மறைந்து போனவர்களின் மனோரதத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். சிரத்தையோடு பூர்த்தி செய்ய வேண்டும். இதுவே உண்மையான சிராத்த முறை.

கைராட்டை, கைத்தறி, கிராமக் கைத்தொழில், தீண்டாமையொழித்தல் முதலிய இயக்கங்களெல்லாம் காந்தியமானாலும், இவற்றுக்கெல்லாம் அடிப்படையான தத்துவம் எதுவென்றால் **கைம்மாறு வேண்டா ஒருதலை அன்பு** என்று முடிவு செய்து கொள்ளலாம். இதுவே காந்தி மகானின் பேருபதேசம். நம்முடைய எண்ணம், பேச்சு, செயல் அனைத்தும் கைம்மாறு வேண்டா அன்பினில் தோய்ந்தனவாக இருக்க வேண்டும். இந்தக் காந்திய அன்பு முறையைக் கையாண்டோமானால் எல்லா நல்ல முயற்சிகளிலும் நிச்சயமாக வெற்றி காண்போம்.

நல்ல காற்று வியாதிகளைச் சொஸ்தப்படுத்தும் என்றும் சுத்தமான காற்று விஷக் கிருமிகளை அழித்துவிடும் என்றும் வைத்தியர்கள் சொன்னால் பாமரர்கள் அதை நம்பமாட்டார்கள் அதைப் போலவே, துயரத்திலும் துவேஷத்திலும் சிக்கி அலையும் மக்கள் அன்பின் சக்தியை எளிதில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். காந்தி மகாத்மாவின்

அன்பு

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

அந்நிய நாட்களில் அவர் பரவசமடைந்து போதித்த போதம் கைம்மாறு வேண்டாத அன்பின் சக்தியே.

அன்பே ஈசன் திருவுருவம். தாயின் அன்பிலும், மக்களின் ஒப்புரவு, நட்பு, காதல் ஆகியவற்றிலும் ஈசன் திருவொளியைக் காண்கிறோம். பிராணியும் பறவையும் பூச்சியும் தத்தம் குஞ்சுகளின் மீது காட்டும் அன்பு வெறும் விநோதமோ, இயற்கை விசித்திரமோ அல்ல: உலகம் முழுவதும் பரந்து நிற்கும் கடவுளின் திரு அவதாரமே ஆகும். அன்பின் மகிமையை அவ்விதம் அறிந்து போற்ற வேண்டும். அன்பே எல்லாச் சங்கடங்களையும் தீர்க்கும். கைம்மாறு வேண்டாமல் ஒருதலை முயற்சியோடு செலுத்தப்படும் அன்பு எல்லா வெறுப்புகளையும் துவேஷங்களையும் வென்று இன்பம் பரப்பும்.

ஒருவன் படுத்துத் தூங்குகிறான். அவனைத் தட்டி எழுப்பினோமானால் அவன் உயிருள்ள மனிதன் என்பதை உடனே அறிகிறோம். உடலின் செயல்களினால் உடலினுள் அமைந்து நிற்கும் உயிர் நமக்குக் கோசரமாகிறது. பாலில் நெய்போல் ஆன்மா உடலில் மறைந்து நிற்கிறது என்பது முன்னோர்களின் விளக்கம். ஆச்சாரிய புருஷர்கள் மேலும் விளக்கியிருப்பது என்னவென்றால், உடலில் உயிர் அமர்ந்திருப்பதைப் போலவே உயிர்களில் பரம்பொருள் மறைந்து நிற்கிறது. உடலினுள் ஆன்மா மறைந்து நின்று அந்த உடலுக்கு உயிர் தருவது போல் உயிர்களை உடலாகக் கொண்டு அவற்றினுள் உயிருக்குயிராய்ப் பரம் பொருள் மறைந்து நின்று இயங்குகிறது.

ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம்
யத்கிஞ்ச்ச ஜகத்யாம் ஜகத்

உடலில் தங்கும் உயிர் நேராகக் கோசரமாகாமல் உடலின் வினைகளில் காணப்படுகிறதல்லவா? அதைப் போலவே உயிரில் தங்கும் கடவுள் உயிர்களுடைய அன்பின் வழி காட்சி அளிக்கிறார். வாசலும் சாளரமும் காட்டும் வீட்டு விளக்கின் ஒளிபோல் மக்கள் உள்ளங்களில் உதித்து வீசும் நட்பும் அன்பும் உயிர்களுக்கு உள்ளிருக்கும் பரம் பொருளின் பிரகாசத்தைக் காட்டுகிறது. அன்பும், அன்பின் ஆனந்தமும் சகல ஜீவன்களிலும் வீற்றிருக்கும் பரம்பொருளின் பிரகாசம். உடலின் செயல்கள் உயிரின் இலக்கணமாவது போல் எல்லா உயிர்களிலும் பரந்து நிற்கும் கடவுளின் இலக்கணம் அன்பு.

அன்பே உய்யும் வழி என்று போதிக்க வந்து மறைந்து போன காந்திமகானுடைய இலட்சியத்தைப் பூர்த்தி செய்வோமாக. எவனும் நமக்கு விரோதியல்ல. துவேஷம் பயனற்ற வேலை. எதிராளி எவ்வாறு நடந்து கொண்டாலும் அன்பென்னும் நோன்பைக் காத்தோமானால் தெய்வம் நம்மோடு சேர்ந்து வேலை செய்யும். இது சத்தியம்.

வாழ்க்கைக்கு ஒரு உண்மை ஒளி

டி.கே.சி.

தாமரைப் புஷ்பத்தின் அழகை எல்லாரும் அனுபவித்து விடுகிறார்கள். தாமரைப்பூவின் இதழ்களையும் நிறத்தையும் பார்த்த மாத்திரத்தில் மக்களாய்ப் பிறந்தவர்களுடைய மனம் அதனிடம் ஓடி விடுகிறது.

கொடி செடி மரங்கள் என்று எண்ணிறந்த பூண்டுகள் இருக்கின்றன. அவற்றின் உற்பத்தி, வளர்ச்சி, அவற்றின் உறவு, ஒரு அற்பப் பூண்டுக்கும் ஒரு பெரிய மரத்துக்கும் உள்ள நெருங்கிய பந்துத்துவம் ஆகியவை பற்றி நுணுகி ஆராயும் கலை ஒன்று இருக்கிறது. அதற்கு 'பாட்டனி' என்று பெயர். அந்தக் கலையில் திளைத்தவர்களுடைய கண்ணுக்குத் தாமரைப் புஷ்பம் எவ்வளவோ அழகைக் கொடுத்துக் கொண்டிருக்கும்!

தாமரைப் புஷ்பத்தை அனுபவிக்க வேறொரு முறையும் இருக்கிறது.

தாமரைப் புஷ்பத்தில் காண்கிற ஒழுங்கோ, அழகுபட்ட உருவமோ, நிறமோ, வாசனையோ, புஷ்பத்தில் அடங்கிக் கிடக்கும் எண்ணிறந்த அற்புதங்களோ,—இவற்றுக்கெல்லாம் தாமரைக் கொடி அல்ல பொறுப்பு. தாமரைக் கிழங்கும் கொடியும் இலையும் கல்வி கற்று அந்த அற்புதங்களைச் செய்து சாதித்தன என்று சொல்ல முடியாது.

எங்கும் நிறைந்ததாய் எல்லா உயிர்களுக்குள்ளும் நின்று தொழிற்படுவதாய் உள்ள அநாதியான நியதி தத்துவமே தாமரை மலர் என்னும் அற்புதத்தைச் சாதித்தது என்று சொல்லவேண்டும்.

நம் முன்னோர்கள் இப்படியெல்லாம் தாமரைப்பூவை அனுபவித்திருக்கிறார்கள்.

∴

புஷ்பத்தைப் போலவே குழந்தைகளின் செயல்களையும் விளையாட்டுகளையும் சேஷ்டைகளையும் பார்த்துப் பார்த்து அனுபவித்திருக்கிறார்கள்.

பெரியாழ்வார் இந்த அனுபவங்களை அழகிய பாடல்களாகப் பாடியிருக்கிறார்.

மூவடியால் திருமால் பூமியையும் வானத்தையும் அளந்தான். ஒரு பாதத்தைக் கீழே வைத்தான். அடுத்த பாதத்தை மெள்ள உயர்த்தி உயர்த்தி வானத்துக்கே கொண்டு போய் விட்டான்.

இந்தக் கதையைக் குழந்தையிடம் அபிநயங்களோடு சொல்லி விளையாடுவார்கள், பெற்றோரும் உற்றோரும்.

குழந்தை என்ன செய்யும்! ஒரு காலைக் கீழே வைத்து அடுத்த காலைக் கொஞ்சம் உயரமாகத் தூக்கப் பார்க்கும்.

இப்படியாக விளையாட்டுக் காட்டிக் கொண்டே இருக்கும் குழந்தை.

> மாவலி வேள்வியில்
> மாணுருவாய்ச் சென்று,
> மூவடிதா என்று
> இரந்த இம் மண்ணினை,—
> ஓர் அடி யிட்(டு) இரண்
> டாம் அடி தன்னிலே
> தாவடி யிட்டானால்
> இன்றுமுற் றும்!
> தரணி அளந்தானால்
> இன்றுமுற் றும்!

[மாவலி வேள்வியில்: மகாபலி நடத்திய வேள்வியில்; மாணுருவாய்ச் சென்று: அற்புதமான ஒரு சிறு உருவத்தோடு சென்று; இரந்த: யாசித்த; தாவடி யிட்டானால் இன்று முற்றும்: உயரத் தூக்கித் தூக்கி விளையாடினான் இன்று முழுதும்]

குழந்தையை அனுபவித்த அனுபவம், இறைவனுடனேயே ஒட்டிக் கொள்ளுகிற பக்தி பாவமாய்த் துலங்குகிறது.

இப்படியெல்லாம் இறைவனோடு ஒட்டுவதனால் பெரியாழ்வாருடைய உள்ளத்தில் ஆனந்தம் பெருகி நிற்கிறது.

இந்த ஆனந்தத்தை அனுபவிக்கக் கூடிய அறிவும் உணர்ச்சியும் கடைசி வரை இருக்கவேண்டுமே என்று எண்ணுகிறார் ஆழ்வார்.

கடைசிக் காலத்தில் அறிவும் உணர்ச்சியும் பழுது படாமல் இருக்க வேண்டும் என்பதாக இறைவனைப் பிரார்த்திக்கிறார்.

"பெரிய சம்பத்துள்ளவர்களைப் போய் அடைவதெல்லாம் ஏதோ கஷ்டம் வந்த காலத்தில் துணையாக நிற்பார்கள் என்ற நோக்கத்துடனே தான்.

> துப்புடை யாரை
> அடைவதெல் லாம்
> சோர்விடத் துத்துணை
> யாவரென் றே;—
> ஒப்பிலேன் ஆகிலும்
> நின்அடைந் தேன்;
> ஆனைக்கு நீஅருள்
> செய்தமை யால்,

எய்ப் (பு) என்னை வந்து
நலியும்போ (து) அங் (கு)

ஏதும் நான் உன்னை
நினைக்கமாட் டேன்;

அப்போதைக் கிப்போதே
சொல்லிவைத் தேன்

அரங்கத் (து) அரவணைப்
பள்ளியா னே.

[துப்பு உடையாரை: பெரிய அநுபவ சம்பத்து உடையவர்களை; ஒப்பிலேன் ஆகிலும்: அருகன் அல்லன் ஆயினும்; நின் அடைந்தேன்: உன்னை வந்து அடைந்தேன் நான்; ஏன்? ஆனைக்கு நீ அருள் செய்தமையால்: மிருகமாகிய கஜேந்திரனை நீ சிரமப்பட்டு வந்து காப்பாற்றிய காரியந்தான் இருக்கிறதே; எய்ப்பு என்னை வந்து நலியும்போது அங்கு: மரணவன்மைக்குக் கடைசி காலத்தில் உட்பட்டு அறிவிழந்தவனாய்க் கஷ்டப்படும் போது; ஏதும் நான் உன்னை நினைக்க மாட்டேன்: கொஞ்சம் கூட உன்னை நினைப்பது முடியாத காரியந்தானே; ஆகையால் அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்: அந்தக் கடைசிக் காலத்தை உத்தேசித்து அறிவுணர்ச்சியோடு கூடிய இந்தத் தருணத்திலேயே உனக்குத் தகவல் கொடுத்து விட்டேன்.]

பெரியாழ்வார் மாதிரி எத்தனையோ மகான்கள் கடைசி காலத்திலும் கடவுளை தியானிக்கும் இன்பம் கொடுத்து வைக்க வேண்டுமே என்று ஏங்கி இருக்கிறார்கள்.

*
* *

காந்தி அடிகளின் வாழ்க்கை கடவுள் தியானத்தில் அழுந்தி அனுபவித்துக் கொண்டிருந்த வாழ்க்கை. அந்த அனுபவம் குழந்தைகளிடத்திலுள்ள பிரீதியாலும், உல்லாசமான பேச்சாலும் உலகத்துக்குத் தெரியவந்தது.


எவ்வளவோ கஷ்டங்களுக்கு உள்ளாயிருந்தும் வாழ்க்கையில் ஒரு ஆனந்த ஒளி விட்டுக் கொண்டிருந்தது அடிகளுக்கு. காரணம்: இறைவனுடைய நாமத்திலும் தியானத்திலும் அவரது உள்ளம் தோய்ந்திருந்ததுதான்.

ராமநாம பஜனை காந்தி அடிகளின் உள்ளத்துக்கு ஒளியைக் கொடுத்துச் சாந்தி அளித்தது.

உயிர் போகிறது என்று தெரிந்த அந்தக் கடைசித் தருணத்திலும் 'ஹே ராம்' என்று சொல்லி இறைவனோடு ஐக்கியமாக முடிந்தது.

பெரியாழ்வார், பட்டினத்தடிகள் முதலிய ஞானிகளுடைய வாழ்க்கை லக்ஷியம் காந்தி அடிகளுக்குக் கிட்டியது. நம்முடைய வாழ்க்கைக்கு ஒளி தர ஓர் அரிய உண்மை கிடைத்தது.

காந்திஜியின் திரு லிகிதம்


11-8-47

My dear Amiya,

I am sorry for your loss which in reality is no loss. "Death is but a sleep and a forgetting." This is such a sweet sleep that the body has not to wake again & the dead load of memory is thrown overboard. So far as I know, happily there is no meeting in the beyond as we have it today. When the isolated drops melt, they share the majesty of the ocean to which they belong. In isolation they die but to meet the ocean again. I don't know whether I have been clear enough to give you any comfort.

Love
Bapu

காந்தியடிகள் கண்ட கனவு

கனம் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்

தைப்பொங்கலுக்கும் காந்தியடிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது; மிகுந்த பொருத்தம் இருக்கிறது.

தொடர்பு என்ன? பொருத்தம் என்ன? மகாத்மா காந்தி குஜராத் தேசத்தில் பிறந்தவராயிற்றே; பொங்கல் தென்னாட்டு விழா ஆயிற்றே என்று கேட்கலாம். பொங்கல் விழாவினுடைய வரலாற்று உண்மையையும், காந்தியடிகளின் வாழ்வின் அடிப்படையான உண்மையையும் தெரிந்தால் இந்தத் தொடர்பும் பொருத்தமும் தெளிவாகும்.

"ஆவின மழை பொழிய இல்லம் வீழ,
அகத்தினள் நோயால் நலிய அடிமைசாவ,
மாவீரம் போகுதென் றொருவன் விதைகொண்டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ள,
சாவோலை கொண்டொருவன் எதிரே நிற்க,
தள்ளாத விருந்து வரச் சர்ப்பம் தீண்ட,
கோவேந்தர் பகுதி உரிமை கடமை கேட்க,
குருக்கள் வந்து தக்ஷிணைக்குக் குறுக்கே நிற்க;
பாவாணர் கவிபாடிப் பரிசு கேட்க,
பாவிமகன் படுந்துயரம் பார்க்கொணாதே!"

இதுதான் இன்றைக்கும் நம் நாட்டிலுள்ள உழவரின் நிலைமை.

ஓய்வின்றி, ஒழிவு இன்றி, கண்ணினைக் காக்கும் இமைபோல் பயிரைப் பல தினங்களாகக் காத்து வந்து, இறுதியில் அதன் பலனை அடையும் உழவர்களுடைய அறுவடை விழா தைப்பொங்கல். அந்த உழவர்கள் நலனே உலகோர் நலன் என்று எடுத்தோதி அவர்களுக்காகத் தம் வாழ்நாளை அர்ப்பணம் செய்தவர் காந்தியடிகள். இதைவிட வேறு என்ன பொருத்தம் வேண்டும்?

தைப் பொங்கல் விழா தென்னாட்டுக்கு மட்டும் உரியதன்று. எங்கெங்கு விவசாய சமூகங்களிருக்கின்றனவோ, அங்கெல்லாம் அறுவடை முடிந்ததும் களியாட்டு நடைபெறுகிறது. வடநாட்டிலும் உண்டு; மேலைநாடுகளிலுமுண்டு. காலத்துக்கேற்ப, சமூகப் பண்புகளுக்கேற்ப விழா வேறு வேறு உருவம் பெறலாம். ஆனால், எங்கும் கல்லுழைப்பினால் வரும் பயனில் பொங்கலுண்டு.

எங்கெங்கு விவசாய சமூகங்கள் இருந்தனவோ, அங்கெல்லாம் மகாத்மா காந்தியின் அன்பும் சென்றது. எங்கெல்லாம் நல்லுழைப்பு இருந்ததுவோ அங்கெல்லாம் அவர் ஆசியும் நிறைந்தது. மேல்நாடு, கீழ்நாடு என்ற வேற்றுமை அம்மகானுக்கு இல்லை. தென்னாடு, வடநாடு என்ற வித்தியாசமும் அவருக்கு இல்லை. உழைப்பு எங்கும் உவகையை நட்ட வேண்டும். நாட்டுமிடமெல்லாம் அவர் கருணை விழி சென்றது; நக்கமில்லாத இடமெல்லாம் நக்கநாட்ட அவர் உயிர் துடித்தது; உடலும் அர்ப்பணமாயிற்று.

"காற்றுபோல் வருகின்ற கார்விடினும் கடல்சுவரி
ஆற்றுநீர் வெள்ளி அரசனும் தெற்காயிடினும்
ஏற்றமே கொடுநாடு பிறைந்துலகம் விளைவித்துக்
காத்துமே உயிர்வளர்த்தல் காராளர் தங்கடனே"

உழவர்கள் எங்கும் எப்பொழுதும் ஏழைகளாக இருக்கிறார்கள். உழவோ உலகத்துக்கு அச்சாணி போன்ற தொழில். காராளர் அணிவயலில் கட்ட முடி திருந்தினலன்றோ இந்தப் பாராளும் குடிமக்கள் வாழ்வு திருந்தும்? உழவு செழிக்க, உழவர் வறுமை நீங்க வேண்டும். உழைப்பவர் ஊதியம் பெறவேண்டும். உழைப்பில் இன்பம் பெருக வேண்டும். இன்பம் பெருக வேண்டுமென்றால் கிராமத்துக் கழி பொருள்களை வீணாக்காமல் பாதுகாத்து உரமாக்கினால், கிராம சுகாதாரம் முன்னேற்ற மடைவதுடன் அதிக உணவு உற்பத்தி செய்ய அடிகோலியதாகிறது. இதுவே காந்தி அடிகள் அல்லும் பகலும் கண்ட கனவு; இதுவே அவர் தியான மந்திரம். இதுவே அவர் எல்லோர்க்கும் சொல்லிவந்த உபதேசம். இதுவே அவர் வாழ்வின் இலட்சியம்.

"மடியை மடியா வொழுகல்
குடியைக் குடியாக வேண்டுபவர்"

சரித்திர பூர்வமாகப் பார்த்தால், மிகப் புரட்சிகரமானதோர் நிகழ்ச்சி இது என்பது தெரியவரும். அடிகள் செய்தது செயற்கருஞ் செயல் என்பது புலனாகும். அடிகள் அரசியல் வானத்தில் தோன்றின அன்று, இயந்திரப் பொருளாதாரமும் மேல்நாட்டு நாகரிகமும் அதிவேகத்தில் வந்து கொண்டிருந்தன. புதுமை மோகத்தில் மக்கள் நிறை அழிந்தனர். விவசாய நாடுகள், இயந்திரத் தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கு அடிமையாகி ஊழ்மையாவதை அவர்கள் அறியவில்லை. பொருளாதாரத்

துறையில் மட்டுமன்றி, அரசியல் துறையிலும், சமய கலாச்சாரத் துறைகளிலும் மேல் நாடுகளுக்கு அடிமையாய் வறியராவதை உணரவில்லை. அறிவு ஆற்றலைக் கொண்டு தடுக்கரிய வெள்ளம் போல் புதுமைச் சக்திகள் பாய்ந்தன.

தடுக்கரிய வெள்ளம் போல் வந்த புதிய இயந்திர அறிவுச் சக்திகளுக்கு ஆத்ம சக்தியால் ஒரு அணை போட்டார் அடிகள். நகரங்களி லிருந்து அறிஞர் நாட்டம், நாட்டுப் புறத்துக்குச் சென்றது. பெரிய ஆலைகளிலிருந்து சிறு கைத் தொழில்களில் சென்றது. இராட்டினமும் கலப்பையும் நடுநாயகம் பெற்றன. வாழ்வின் மையம் மாறுபட்டது.

புதியதோர் பொங்கலுண்டாகியது. தேசியத்திலே பொங்கல்; அரசியலிலே பொங்கல்; சமூகத்திலே பொங்கல்; கலையிலே பொங்கல்; அறிவிலே பொங்கல்; அன்பிலே பொங்கல்; உள்ளத்திலே பொங்கல்; உணர்ச்சியிலே பொங்கல்; எளியோர் வாழ்விலே பொங்கல். மூந்நூறு கோடி மக்கள் வரலாற்றிலே என்றுமில்லாத பெரும் பொங்கல்.

தைப்பொங்கலை ஏழைகள், பணக்காரர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் எல்லோரும் நம் தென்னாட்டிலே கொண்டாடுகிறார்கள். தேசத்திலே எங்கும் மங்களம் பொங்க வேண்டுமென்றால் எல்லாருக்கும் உணவு கொடுக்கும் உழவரும் பசுக்களும் போற்றப்பட வேண்டும். நன்றாகப் போஷிக்கப்பட்டு, போற்றப்பட வேண்டும். இவை இரண்டும் சரியாக இருந்தால்தான், பயிர்த் தொழிலும் வாணிபமும் கைத் தொழிலும் கலைகளும் செழித்து ஓங்கும். அதை உத்தேசித்துத்தான் மகாத்மா காந்தி கிராம முன்னேற்றத்துக்காகப் பதினெட்டுத் திட்டங்களை வகுத்து நடைமுறையில் கொண்டு வரப் பிரயத்தனப்பட்டார். அதை நாம் சரியாகக் கடைப்பிடித்து நடைமுறையில் எவ்வளவு ஊக்கத்துடன் கொண்டு வருகிறோமோ அதைப் பொறுத்திருக்கிறது சமூகத்தின் முன்னேற்றம். சமூகச் செழிப்புத்தான் பொங்கும் மங்களம் ஆகிறது.

சூரியன் தன்னுடைய கிரணங்களால் ஜலாதாரங்களை மேக ரூபமாக்கி, மலை காடு நாடு பூராவும் மழையை வருஷித்து, அதன் மூலமாகப் பயிர் பச்சைகளையுண்டாக்கக் காரணபூதமாயிருக்கிறான். அதனால் அப்பயிர் பச்சைகளின் முதல் பலனைச் சூரியனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டுமென்று நம் பெரியோர்கள் ஒரு சம்பிரதாயத்தை ஏற்படுத்தினார்கள். உலக வாழ்வை அளிக்கும் சூரியனை வணங்குகிற பொங்கல் திருநாளிலே தேச மனைத்துக்கும் இறவாப் பெருவாழ்வை அளித்த அந்த ஞான சூரியனையும் நினைந்து நினைந்து வணங்குவோமாக. மகான் போட்ட அணைமீது மீண்டும் வெள்ளம் வந்து மோதுகிறது. தூக்கமிலாக் கண் விழிப்போடு அதைக் காப்போமாக. அடிகள் காட்டிய வழியிற் சென்று அனைத்துலகும் நலன் பெறுமாக.

காந்திஜியின் திரு லிகிதம்

(21-ம் பக்கத்தில் வெளியாகியுள்ள கடிதத்தின் மொழி பெயர்ப்பு)

11—8—47

என் அன்புள்ள அமீயா,

உங்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தைக் குறித்து நான் வருந்துகிறேன். உண்மையாகப் பார்க்கப் போனால், அது ஒரு கஷ்டமே அல்ல. மரணம் என்பது ஒரு தூக்கம். அதுவும் எப்பேர்ப்பட்ட தூக்கம்? இந்த ஸ்தூல தேகமானது மீண்டும் விழித்து எழ வேண்டிய அவசியமே இல்லாத ஆனந்தமான தூக்கம். இவ்வுலகத்து ஏரபகம் என்னும் சஞ்சித கர்மச் சுமையை மரணத்தின் மூலம் உதறித் தள்ளி விடுகிறோம். மரணத்துக்குப் பிறகு, இந்த உலகத்தில் சந்திப்பது போல நாம் சந்திப்பதில்லை. தனித்தனித் துளிகள் சமுத்திரத்தில் சேர்ந்து பெருமையடைவது போல நாமும் பரம்பொருளுடன் இரண்டறக் கலந்து மகிமை பெறுகிறோம். தனித் துளிகள் மறைகின்றன; மகா சமுத்திரத்தில் ஒன்று சேருகின்றன. உங்களுக்கு ஆறுதல் அளிக்கக் கூடிய முறையில் நான் தெளிவாக எழுதியிருக்கிறேனோ என்னவோ, தெரியவில்லை.


அன்புள்ள

மோ. க. காந்தி



இ கிராமபோன் கம்பெனி, லிமிடெட்

டம்டம் - பம்பாய் - மதராஸ் - டில்லி



காந்திஜி பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிப்பதற்கு பிரிட்டனுக்குப் போக விரும்பியபோது, அவருடைய அன்னை "மகனே, லண்டன் இங்கிருந்து எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கிறது; நீ நமது குல ஆசாரத்துக்கு விரோதமாக மதுவையோ மாமிசத்தையோ உண்டு கெட்டுப் போய்விட்டால் என்ன செய்வது?" என்று வருத்தப்பட்டார். காந்திஜி, "தாயே, அத்தகைய தீய பழக்கங்களுக்கு நான் ஒரு நாளும் உள்ளாக மாட்டேன்" என்று தம்முடைய அன்னைக்குச் சத்தியம் செய்து கொடுத்து விட்டு லண்டனுக்குப் புறப்பட்டார்.









காந்திஜி தென்னாப்பிரிக்காவில் இந்தியரின் உரிமைக்காகச் சத்தியாக்கிரஹப் போர் நடத்திவந்தபோது போயர் யுத்தம் ஏற்பட்டது. மகாத்மா உடனே சத்தியாக்கிரஹத்தை நிறுத்தியதோடல்லாமல் வைத்திய உதவிப் படையை அமைத்துப் போர்க்களத்தில் காயம் பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்து பல ஆங்கிலேயரின் உயிரைக் காப்பாற்றினர்.



லண்டன்மா நகரில் நடந்த இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டுக்குக் காங்கிரஸ் மகாசபையின் ஏக பிரதிநிதியாக காந்திஜி சென்றார். ஆடம்பரமும் மிடுக்கும் படாடோபமும் மிகுந்த பல பெரிய பெரிய பெரிய ராஜதந்திரிகளுக்கு மத்தியில் காந்திஜி எளிய உடை தரித்து அமர்ந்திருந்தார். அதே உடையிலேதான் அரண்மனைக்குச் சென்று அரசரையும் சந்தித்தார்.







காந்திஜி 1921-ம் ஆண்டில் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்திருந்தபோது, ஒரு அரசியல் பிரமுகரை "ஏன் கதர் அணிவதில்லை?" என்று கேட்டார். "கதர் கிடைக்கவில்லையே?" என்று அப்பிரமுகர் பதில் சொன்னார். பிறகு ரயில் பிரயாணத்தின்போது, இடுப்பில் மாத்திரம் முழத்துண்டு அணிந்த குடியானவர்கள் வயல்களில் வேலை செய்வதைக் கண்டார். இந்த இரண்டு சம்பவங்களும் அவருடைய உள்ளத்தில் பதிந்தன. அன்றிருந்து சட்டை தலைப்பாகை முதலியவற்றைக் களைந்துவிட்டு, இடுப்பில் மட்டும் துணி அணியத் தீர்மானித்திருப்பதாக அறிவித்தார்.




காந்திஜி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் நடத்திய மாபெரும் போராட்டங்களில் 1930-ம் வருஷத்து உப்பு சத்தியாக்கிரஹ இயக்கமும் ஒன்றாகும். சரித்திரப் புகழ்பெற்ற அந்த மாபெரும் போராட்டத்திற்கு துவஜா ரோகணமாக விளங்கியது தண்டி யாத்திரை. மகாத்மாஜி தொண்டர் கூட்டத்துடன் கால்நடையாக ஏறக்குறைய இருநூறு மைல் நடந்து சென்று தண்டியின் சட்டத்தை மீறி உப்பு எடுத்தார்.








தீனர்களின் தெய்வமான காந்தி மகாத்மா நோயாளிகளுக்குத் தாமே பணிவிடை செய்வதில் ஆர்வம் கொண்டவர். மற்றவர்கள் கண்ணாலே பார்ப்பதற்குக்கூட விருப்பம் கொள்ளாத குஷ்ட ரோகிகளை, காந்தி மகாத்மா தம்முடைய தெய்வத் திருக் கரங்களால் தடவிக் கொடுத்து, அவர்களுக்குப் பணிவிடை செய்வதுண்டு. சேவாக்கிராம ஆசிரமத்தில் நிகழ்ந்த அத்தகைய காட்சி ஒன்றை மேலே காணலாம்.



கிழக்கு வங்காளத்தில் மக்கள் பயங்கரமான கொலைக்கும் கொடுமைக்கும் உள்ளாகிச் சொல்லொணாத வேதனையடைந்தபோது, காந்தி மகான் அவர்களுக்கு அபயம் அளிக்க விரைந்து சென்றார். நவகாளி ஜில்லா கிராமம் கிராமமாகக் கால்வலிக்க நடந்தார். அங்குள்ள மக்களைக் கண்டு, அவர்களுடைய துயரத்தை நேரில் கேட்டு, ஆறுதல் கூறினார்.





காந்திஜி சென்ற வருஷம் ஜனவரி 30உ தம்முடைய பேத்திகளுடன் டில்லியில் பிர்லா மாளிகைத் தோட்டத்தில் பிரார்த்தனை இடத்துக்குப் போய்க்கொண் டிருந்தபோது, கூட்டத்திலிருந்த வஞ்சகன் ஒருவன் அவரைக் கைகுவித்து வணங்கினான். காந்தி மகானும் பதிலுக்குக் கைகுவித்து வணங்கினார். துவேஷ வெறிகொண்ட அந்தப் பாதகன் கையில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து 'பட்' 'பட்' டென்று சுட்டான். காந்திஜி குவித்த கைகளுடன் "ஹே! ராம்!" என்று சொல்லிக் கொண்டு கீழே சாய்ந்தார். காந்தி மகாத்மா தெய்வ மகாத்மாவானார்.

ஆறு வருஷம் சிறைவாசம்

இந்தியாவின் விடுதலைக்காகக் காந்தி மகாத்மா ஆரம்பித்த முதலாவது பேரியக்கம் ஒத்துழையாமை இயக்கம். 1921-ம் வருஷம் இந்தியா தேசமெங்கும் அந்த இயக்கம் தீவிரமாக நடந்தது. அதையொட்டி 1922-ம் வருஷம் மார்ச் மாதத்தில் மகாத்மா காந்தி குஜராத் மாகாணத்தைச் சேர்ந்த பர்தோலியில் வரிகொடா இயக்கத்தை ஆரம்பிக்கத் திட்டம் போட்டிருந்தார். ஆனால் பிப்ரவரியில் ஐக்ய மாகாணத்திலுள்ள சௌரி - சௌரா என்னுமிடத்தில் ஜனங்கள் கட்டுமீறிக் கிளம்பிப் போலீஸ் ஸ்டேஷனைத் தாக்கிப் பலாத்காரச் செயல் புரிந்துவிட்டார்கள். இது காரணமாக, இந்திய மக்கள் இன்னும் அஹிம்சைப் போருக்குத் தகுதியடையவில்லை என்று தீர்மானித்துக் காந்தி மகாத்மா வரிகொடா இயக்கத்தை நிறுத்தி விட்டார்.

இவ்விதம் சொல்லிச் சில தினங்களுக்குப் பிறகு, 1922 மார்ச் 10உ இந்திய சர்க்காரின் உத்தரவுப்படி மகாத்மாஜி கைது செய்யப்பட்டார்.

ஆமதாபாத் ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீ புரூம்பீல்டு என்னும் ஆங்கிலேயரின் முன்னிலையில் விசாரணை நடந்தது.

மகாத்மா தமது வாக்கு மூலத்தில் இராஜாங்கத் துவேஷக் குற்றத்தை ஒப்புக் கொண்டார். இந்தியாவில் அப்போது இருந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின்மீது துவேஷத்தை உண்டு பண்ணுவது இந்திய தேசபக்தன் ஒவ்வொருவனுக்கும் ஏற்பட்ட கடமை என்று சொன்னார். நீதிபதிகளையும் அஸெஸர்களையும் பார்த்து, ''நான் குற்றவாளி என்று கருதினால் எனக்கு சட்டப்படி ஏற்பட்ட முழுத் தண்டனையையும் கொடுங்கள். நான் குற்றமற்றவன் என்று கருதினால் உங்களுடைய உத்தியோகத்தையும் பதவிகளையும் ராஜினாமாச் செய்யுங்கள்!'' என்று வேண்டிக் கொண்டு வாக்கு மூலத்தை முடித்தார்.

இந்த வழக்கில் நீதிபதி புரூம்பீல்டு கூறிய தீர்ப்பு சரித்திரப் பிரசித்தி பெற்றதாகும். அந்தத் தீர்ப்பின் சாரமான பகுதிகள் பின்வருமாறு :—

''ஸ்ரீ காந்தி! நீங்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் மூலம் என்னுடைய வேலையைச் சுலபமாக்கிவிட்டீர்கள். ஆயினும், உங்களுக்கு என்ன தண்டனை கொடுப்பது என்பது மிகவும் கடினமான விஷயம். இதைக் காட்டிலும் கடினமான பிரச்னை இந்த நாட்டில் வேறு எந்த நீதிபதிக்கும் ஏற்பட்டிருக்க முடியாது.

கோடிக்கணக்கான இந்திய மக்கள் உங்களை ஒரு மாபெரும் தேசபக்தராகவும் தனிப்பெருந் தலைவராகவும் கருதுகிறார்கள். அரசியலில் உங்களுடைய கருத்தை ஒப்புக் கொள்ளாதவர்கள் கூட, உங்களை உன்னத லட்சியங்கள் கொண்டவராகவும் உத்தம வாழ்க்கையை மேற்கொண்டவராகவும் மதிக்கிறார்கள். ஆனால் நான் ஒரே ஒரு முறையிலேயே இந்த வழக்கை விசாரித்துத் தீர்ப்புக் கூறவேண்டும். சட்டத்துக்குக் கட்டுப்பட்ட ஒரு பிரஜை அந்தச் சட்டத்தை மீறிவிட்டார் என்ற முறையில் உங்களை விசாரிக்க வேண்டியதுதான் என்னுடைய கடமை.

நீங்கள் பலாத்காரத்தை எதிர்த்து இடைவிடாமல் பிரசாரம் செய்து வந்திருக்கிறீர்கள் என்பதை நான் மறந்துவிடவில்லை. ஆனால் தங்களுடைய அரசியல் உபதேசத்தின் போக்கையும், அதை நீங்கள் யாருக்கு உபதேசம் செய்தீர்களோ அவர்களுடைய மனநிலையையும் கவனித்துப் பார்க்கும்போது, தேசத்தில் பலாத்காரம் ஏற்படாது என்று நீங்கள் எப்படி நம்பினீர்களோ, விளங்கவில்லை. உங்களைச் சுதந்திரமாக விட்டு வைப்பதற்கு முடியாதபடி நீங்கள் செய்துவிட்டீர்கள்.

உங்களுக்கு நான் நீதி வழங்கவும் வேண்டும்; அதே சமயத்தில் பொதுஜன நலனுக்கு உகந்த கடமையையும் நான் நிறைவேற்ற வேண்டும். பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் இதே 124-ஏ பிரிவின்படி கைது செய்யப்பட்ட ஸ்ரீ பால கங்காதர திலகருக்கு என்ன தண்டனை கொடுக்கப்பட்டதோ அதே தண்டனையை உங்களுக்கும் கொடுப்பதென்று உத்தேசித்திருக்கிறேன். ஸ்ரீ பால கங்காதர திலகருக்கு ஆறு வருஷ வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. ஆறு வருஷ சிறைவாச தண்டனை உங்களுக்கும் விதிக்கிறேன். சர்க்கார் இந்தத் தண்டனையை ரத்து செய்து உங்களை விடுதலை செய்யும்படியான சந்தர்ப்பம் நிகழுமானால், அதைக் குறித்து நான் பெருமகிழ்ச்சியடைவேன்.''

அலை ஓசை

கல்கி

பதினாறாம் அத்தியாயம்

சீதாபஹரணம்

அடையாளம் கண்டு பிடிக்க முடியாமல் ஒரேமாதிரி குறுகலாயும் அசுத்தம் நிறைந்துமிருந்த சந்துகள் வீதிகள் வழியாகச் சூரியாவை முஸ்லிம் லீக் தொண்டர் அழைத்துச் சென்று சற்றுத் தூரத்தில் ஜும்மா மசூதி தெரியும் இடம் வந்ததும், "அதோ! ஜும்மா மசூதி! இனிப் போய்விடுவீர் அல்லவா?" என்றார். "வந்தனம்; இவ்வளவு தூரம்கூட நீங்கள் வந்திருக்க வேண்டியதில்லை" என்று சொல்லி விட்டுச் சூரியா மைதானத்தை நோக்கி நடந்தான். நடக்கும்போதே அவனுடைய கால்கள் தடுமாறின. டில்லி நகரமே அவனைச் சுற்றிச் சுழல்வதுபோலிருந்தது. தாரிணி ஒரு முஸ்லிம் மௌல்வியைத் தன்னுடைய தகப்பனார் என்று சொன்னது அவ்வளவு தூரம் அவனுக்கு அதிர்ச்சி உண்டு பண்ணி விட்டது. அந்தச் செய்தியினால் அவனுடைய ஆகாசக் கோட்டைகள் பல தகர்ந்து இடிந்து அவன் தலை மீது விழுந்து கொண்டிருந்தன. ஆம்; அந்தச் செய்தி உண்மையானால் அவனுடைய வாழ்க்கையின் போக்கே மாற வேண்டியதுதான். ஒரு முஸ்லிம் பெண்ணை மணந்து கொள்ள வேண்டுமானால் தானும் ஒரு முஸ்லிம் ஆக வேண்டும். அதற்கு அவன் தயாராயில்லை. ஆயிரமாயிரம் வருஷங்களாக நிலைபெற்று உலகத்துக்கெல்லாம் வழிகாட்டும் ஜோதியாக விளங்கும் சநாதன ஹிந்து தர்மத்தைத் துறந்து விட அவன் தயாராயில்லை. அதற்குத் தயாராக இல்லையென்றால், தாரிணிக்கும் தனக்கும் தர்மத்துக்கு மாறுபடாத சம்பந்தம் என்ன இருக்க முடியும்?

"ஒருவேளை பொய்யாயிருக்குமோ? நமக்குப் போக்குக் காட்டுவதற்காக அப்படிச் சொல்லியிருப்பாளோ?" என்ற எண்ணம் தோன்றியவுடனே, இன்னொரு விதமான சிந்தனைப் போக்கில் அவன் உள்ளம் ஆழ்ந்தது. ஆகா! அந்தப் பெண்ணை எந்த விதத்திலும் நம்புவதற்கில்லை. ஒரு பக்கத்தில் புரட்சிக்காரர்களுக்கு மத்தியில் தீவிர புரட்சிக்காரியாக விளங்குகிறாள். இன்னொரு பக்கத்தில் பெரிய பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடன் சிநேகம் வைத்துக் கொண்டிருக்கிறாள். ஆங்கில நவீனங்களிலே யுத்த காலத்தில் அழகு வாய்ந்த பெண்கள் ஒற்று வேலை செய்வதைப் பற்றிப் படித்திருக்கிறோமல்லவா? அவர்கள் எந்தக் கட்சிக்காக ஒற்று வேலை செய்கிறார்கள் என்பதைக் கடைசி வரையில் கண்டு பிடிக்க முடிகிறதில்லை. இந்தத் தாரிணியையும் அந்த ரகத்திலே சேர்க்க வேண்டியதுதான். "என்னைப் பிடித்துக் கொடுத்து விட்டு ஒரு லட்சம் ரூபாய் பெற்றுக் கொள்ளுங்கள்!" என்று எவ்வளவு சர்வ சகஜமாகக் கூறினாள்? வைஸ்ராய் நிர்வாக சபை அங்கத்தினர்களுடன் சாதாரணமாகப் பழகக் கூடியவள் தன்னைப் போன்ற ஏழை வாலிபனிடம் அன்பு கொண்டிருப்பதாகச் சொல்லுவதை எப்படி நம்புவது? சௌந்தரராகவனிடம் அவளுக்கிருக்கும் செல்வாக்கைப் பற்றி நினைத்தாலும் பலவித சந்தேகங்களுக்கு இடம் ஏற்படுகிறது. சீதா விஷயத்தில் அவளுடைய உண்மையான மனப்பான்மைதான் என்ன? சீதாவின் க்ஷேமத்தில் அவள் அக்கறை கொண்டிருப்பதாகச் சொன்னதெல்லாம்

ஏதோ ஒரு அந்தரங்க நோக்கத்துடனிருக்குமோ? அப்படியானால் அந்த நோக்கம் கெடுதலான நோக்கமாய்த் தானிருக்க வேண்டும்.

ஆகா! அந்தப் பேதைப் பெண் சீதாவை இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து ஏறக்குறையப் பைத்தியமாக அடித்து விட்டார்கள்! தாரிணியின் வார்த்தையை நம்பி அந்த அநாதையைக் கை விட்டு விட்டுத் தான் கல்கத்தாவுக்குப் போய் விடுவது சரியான காரியமா? அவளுடைய தகப்பனாரின் தற்போதைய கதி என்னவாகத்தான் இருக்கும்? அதை விவரமாகத் தாரிணியிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளாமற் போனோமே?

இவ்விதமெல்லாம் யோசனை செய்து கொண்டே ஜும்மா மசூதியைத் தாண்டி அப்பால் வெள்ளி வீதிக்குள் சூரியா பிரவேசித்தான். டவுன் ஹாலை அடைந்ததும் அங்கே வீதி ஓரத்தில் சீதா தன்னந்தனியாக நிற்பதைக் கண்டான். விரைந்து அவளிடம் சென்று "சீதா! நீ இங்கே வந்து ரொம்ப நேரமாகி விட்டதா?" என்றான்.

"கால் மணி நேரந்தான் ஆயிற்று. ஆனாலும் சாலையில் போகிறவர்கள் எல்லாரும் என்னை உற்று உற்றுப் பார்த்து விட்டுப் போவது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. இன்னும் ஐந்து நிமிஷத்துக்குள் நீ வராவிட்டால் வீட்டுக்குத் திரும்பிப் போய்விடுவது என்று எண்ணிக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக நீ வந்து விட்டாய்!" என்றாள் சீதா.

சூரியாவின் மனதில் ஒரு கணம் 'ஐந்து நிமிஷம் கழித்து வராமல் போனோமே!' என்று தோன்றியது. அப்படித் தாமதித்திருந்தால் சீதா திரும்பிப் போயிருப்பாள். தனக்குப் பொறுப்பு ஒன்றும் இல்லாமல் போயிருக்கும். மறுகணம் சூரியாவுக்குத் தன்னுடைய சுயநல எண்ணம் வெட்கத்தை அளித்தது. அநாதை சீதாவுக்கு யாருமே சிநேகம் இல்லை; அநுதாபத்துடன் அவளுக்கு உதவி செய்வாரும் கிடையாது. நாமும் இப்படி அவளைக் கைவிட எண்ணினால்?......

இருவரும் டவுன் ஹாலுக்குப் பின்புறமுள்ள சாலையின் வழியாகக் காந்தி மைதானத்தை நோக்கி நடந்தார்கள். முதல் நாள் தாரிணியுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த அதே மரத்தடிக்குச் சூரியா சீதாவை அழைத்துச் சென்றான். வழியில் அவர்கள் ஒன்றுமே பேசவில்லை. ஏனெனில் நடக்கும்போது சூரியாவின் மனம் சீதாவின் விஷயத்தில் தன்னுடைய கடமை என்ன என்பதைப் பற்றி மிகத் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தது.

மரத்தடியில் சென்று உட்கார்ந்ததும் சீதா அக்கம் பக்கம் பார்த்து விட்டு, "அம்மாஞ்சி! நீ உடனே இந்த ஊரை விட்டுப் போய் விடு! உன்னைப் போலீஸார் பிடிப்பதற்குத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். டெலிபோனில் உன் மாதிரி பேசி என்னிடம் விஷயம் தெரிந்து கொள்ள முயன்றவர்கள் போலீஸார்தான். இதை எப்படியாவது உன்னிடம் சொல்லி விட்டுப் போகத்தான் நான் முக்கியமாக இங்கே வந்தேன். டெலிபோனில் சொல்லுவதற்கும் பயமாயிருந்தது. நடுவில் யாராவது டெலிபோன் பேச்சை ஒட்டுக் கேட்டாலும் கேட்கக்கூடுமல்லவா? ஸி. ஐ. டி. போலீஸாருக்கு அப்படிப்பட்ட அதிகாரம் உண்டு என்று சொல்கிறார்களே? நீ இன்றைக்கு ராத்திரியே புறப்பட்டுப் போய்விடு, சூரியா!" என்று படபடவென்று பேசினாள்.

"அத்தங்கா! என்னைப் பற்றி உனக்கு ஏன் இவ்வளவு கவலை? போலீஸார் என்னைப் பிடித்து விட்டால்தான் என்ன? எந்த நிமிஷமும் கைதியாகிச் சிறைக்குப் போவதற்கு நான் தயாராகத்தான் இருக்கிறேன். உன்னுடைய விஷயத்தைப் பற்றிப் பேசு, சீதா! நேற்றிரவு நான் வாசலில் போவதாகப் போக்குக் காட்டிவிட்டுத் தோட்டத்திற்குள் திரும்பி வந்து ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். உன்னை ராகவன் கை நீட்டி அடித்ததைப் பார்த்த போது எனக்கு இரத்தம் கொதித்தது. கைத்துப்பாக்கியால் சுட்டு விடலாம் என்று கூட எண்ணினேன். உன்னை உத்தேசித்துப் பொறுத்துக் கொண்டிருந்தேன். நீ உன் அகத்துக்காரர் மீது புகார் சொன்னபோது எனக்கு அவ்

வளவு நம்பிக்கை உண்டாகவில்லை. ஸ்திரீகளுடைய சுபாவமே புகார் சொல்வது தான் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டேன். ஆனால் ராகவன் உன்னை நடத்திய விதத்தைப் பார்த்த பிறகு சந்தேகமில்லாமல் போய்விட்டது. இப்படிப்பட்ட ராட்சதன் உனக்குப் புருஷனாய் வாய்த்தானே, நான் அதற்குக் காரணமாயிருந்தேனே என்று எண்ணி எண்ணி நேற்று இரவெல்லாம் நான் தூங்கவில்லை. இப்போது நீ என்ன சொல்கிறாயோ, அதன்படி கேட்கிறேன். இப்படிப்பட்ட புருஷனை விட்டு விட்டு நீ ஓடிப்போக எண்ணினால் நான் உன் பேரில் குற்றம் சொல்ல மாட்டேன். நானே உன்னை அழைத்துப் போகத் தயாராயிருக்கிறேன். இன்றைக்கே, இப்போதே வருவதாக இருந்தால் சொல்லு. கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப் போவோம். அமரநாத்தின் வீட்டில் உன்னை ஒப்புவித்து விட்டுப் பிறகு நான் என் காரியத்தைப் பார்க்கிறேன். அமரநாத்தும் அவன் மனைவி சித்ராவும் எனக்காக எது வேண்டுமானாலும் செய்வார்கள். உன்னை வைத்துக் காப்பாற்றுவார்கள்..."

இவ்வளவு நேரம் அரைமனதாகக் கேட்டுக் கொண்டிருந்த சீதா இப்போது குறுக்கிட்டு, "சூரியா! அந்த யோசனையெல்லாம் இனி வேண்டாம். நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்!" என்று சொன்னாள்.

"அத்தங்கா! அந்த மாதிரி முடிவு செய்ய வேண்டாம். நீ எதற்காக உயிரை விட வேண்டும்? ராகவனைப் போன்ற ஈவிரக்கமில்லாத கிராதகனுக்காகவா? என்னுடைய உடம்பில் மூச்சு உள்ள வரையில் உன்னை நான் சம்ரக்ஷிப்பேன். இந்த உலகமெல்லாம் உனக்கு விரோதமாயிருந்தாலும் நான் உன்னுடைய கட்சியில் இருப்பேன். ஏதாவது கெட்ட பெயர் வருகிறதாயிருந்தால் அந்தக் கெட்ட பெயரை நான் உன்னுடன் பகிர்ந்து கொள்கிறேன். உயிரை விடுகிற எண்ணத்தை மட்டும் நீ விட்டு விட வேண்டும்!" என்று சூரியா உணர்ச்சி பொங்கக் கூறினான்.

"சூரியா! உயிரை விடுவது பற்றி யார் பேசினார்கள்? உயிரை விடும் உத்தேசம், என் அகத்துக்காரரை விட்டுப் போகும் உத்தேசம் இரண்டையும் நான் கைவிட்டு விட்டேன். அவருடைய மனம் போல் நடந்து அவருடைய திருப்தியைச் சம்பாதித்துக் கொள்வது என்று முடிவு செய்து விட்டேன். உனக்கு ஒருவேளை வியப்பாயிருக்கும். நேற்று ராத்திரி சம்பவத்துக்குப் பிறகு இத்தகைய தீர்மானம் நான் எப்படிச் செய்தேன் என்று ஆச்சரியப்படுவாய். ஒருவேளை நம்பக்கூட மாட்டாய். ஆனாலும் நான் சொல்வது உண்மை. இன்றைக்கு மத்தியானம் ஒரு பத்திரிகையில் கஸ்தூரிபாய் காந்தியின் சரித்திரத்தை வாசித்தேன், சூரியா! அது தான் என் மனத்தை மாற்றிவிட்டது. கஸ்தூரிபாய் காந்தி எப்படியெல்லாம் கஷ்டப் பட்டிருக்கிறாள், தெரியுமா? எழுபதாவது வயதில் ஜெயிலுக்குப் போயிருக்கிறாள்! அவள் அல்லவா உத்தமி? நானும் என் கணவர் இஷ்டப்படி இனிமேல் நடந்து கொள்கிறது என்று தீர்மானித்திருக்கிறேன்."

சூரியாவின் தலையிலிருந்து ஒரு பெரிய பாரம் நீங்கியது போலிருந்தது. சீதாவின் முடிவு அவனுடைய இருதயத்துக்கு உகந்ததாயிருந்தது. ஆனால் அவனுடைய அறிவு அந்த முடிவை ஆட்சேபித்தது. சீதாவைப் பார்த்து அவன் கூறியதாவது:—"ஸ்திரீகளின் மனதைக் கண்டு பிடிக்கவே முடியாது என்கிறார்களே, அது வாஸ்தவமாகத் தானிருக்கிறது. பெண்களின் சஞ்சல புத்தியைப் பற்றிப் பெரியோர்கள் சொல்லியிருப்பதிலும் தவறில்லை. இரண்டுக்கும் நீயே உதாரணமாயிருக்கிறாய். நேற்று இரவு எப்படிப் பேசினாய்? இன்றைக்கு எப்படிப் பேசுகிறாய்? புருஷன் என்ன கொடுமை செய்தாலும் மனைவி பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்னும் கட்சியை நான் ஒப்புக்கொள்ள முடியாது. அதெல்லாம் பழைய காலம். பெண்களை அடிமைப்படுத்தப் புருஷர்கள் எழுதி வைத்த சாஸ்திரங்கள் சொல்லும் கடமை. 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம்' என்பது இந்தக் காலத்துத் தர்மம். கஸ்தூரிபாய் காந்தியைப் பற்றிக் கூறுகிறாயே? கஸ்தூரிபாயின் கண



வர் உலகம் போற்றும் உத்தமர். மகாத்மா காந்தியோடு மற்றவர்களை இணை சொல்ல முடியுமா?"

"சூரியா! காந்தியின் இஷ்டத்தைப் போல் கஸ்தூரிபாய் நடந்து கொள்ள ஆரம்பித்த போது அவர் மகாத்மா ஆகியிருந்தாரா? இல்லையே? ரொம்ப சாதாரண மனிதராகத்தானே இருந்தார்? அப்போது முதல் கஸ்தூரிபாய் கணவரைத் தெய்வம் என்று நினைத்து நடந்தபடியால்தான் காந்திஜி மகாத்மா ஆனார். பெண்களின் சுதந்திரத்தைப் பற்றியும் நான் யோசித்துப் பார்த்தேன், சூரியா! எனக்கு இவர் எல்லா விதமான சுதந்திரமும் கொடுத்துத்தான் இருந்தார்! நான் எங்கே போனாலும் ஏன் போனாய் என்று கேட்பதில்லை. யாரோடு பேசினாலும் ஏன் பேசினாய் என்று கேட்பதில்லை. நான் தான் அவரை அப்படி பொல்லாம் கேட்டு அவருடைய வாழ்க்கையை நாசமாக்கினேன். எனக்கு அவர் பூரண சுதந்திரம் கொடுத்திருந்தார். நான் அவருக்கு எந்தவிதமான சுதந்திரமும் கொடுக்கவில்லை. இன்று மத்தியானத்திலிருந்து யோசிக்க யோசிக்கத் தப்பெல்லாம் என் பேரில் தான் என்று உணர்கிறேன். என்னுடைய மூளை எப்படியோ கெட்டுப் போயிருந்தது. இப்போது நிச்சயமாக முடிவு செய்து விட்டேன், சூரியா! இனிமேல் நீ என் மனதை மாற்ற முயல்வதில் பயனில்லை!" என்றாள் சீதா.

சூரியா திகைத்துப் போய்விட்டான். "ரொம்ப சந்தோஷம், சீதா! நான் உன் மனதை மாற்ற முயலவேயில்லை. எப்படியாவது நீ ராகவனுக்கு உகந்த மாதிரி நடந்து அவனைச் சீர்திருத்தினால் சரிதான். நீயும் ராகவனும் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தினால் அதைக்காட்டிலும் எனக்குச் சந்தோஷம் வேறில்லை. புறப்படு, போகலாம்! இருட்டிவிட்டது. உன்னை உன்னுடைய வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டு நான் என் காரியத்தைப் பார்க்கப் போகிறேன்" என்றான்.

"நீ என்னுடன் வரவேண்டாம். ஒரு டாக்ஸி பிடித்து என்னை அதில் ஏற்றி விட்டால் போதும். இல்லாவிடில் நானே பிடித்துக் கொள்கிறேன்!" என்று சீதா சொன்னாள்.

"அது மாத்திரம் முடியாது, சீதா! என்னுடைய கடமையை நான் செய்தே தீருவேன். இப்போதெல்லாம் டில்லியில் எங்கே பார்த்தாலும் அபாயம் அதிகமாகி வருகிறது. ஸ்திரீகள் தனியாகப் போவது உசிதமல்ல. அதிலும் இருட்டிய பிறகு கூடவே கூடாது."

"எனக்கு என்ன அபாயம் வந்துவிடும். சூரியா! நீ எதற்காக என்னைப் பற்றி வீணில் பயப்படுகிறாய்?"

"உனக்குத் தெரியாது, சீதா! நேற்றுச் சாயங்காலம் தாரிணியும் நானும் இதே மரத்தடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம்..."

"தாரிணியோடு இந்த இடத்திலேயே பேசிக்கொண்டிருந்தாயா? என்னிடம் சொல்லவேயில்லையே?" என்று கேட்ட சீதாவின் குரலில் இத்தனை நேரமும் இல்லாத கருமை தொனித்தது.

"சந்தர்ப்பம் ஏற்படாத படியால் சொல்லவில்லை. அதனால் என்ன?"

"அதனால் என்ன? ஒன்றுமில்லை. நீயும் தாரிணியும் எதைப்பற்றிப்பேசிக் கொண்டிருந்தீர்கள்? இந்த மரத்தின் அடிக்கு எதற்காக வந்தீர்கள்?"

"தனியாகப் பேசவேண்டியிருந்தது; அதனால்தான் வந்தோம். இன்றைக்கு நாம் இருவரும் வரவில்லையா?"

"தனியாக நீங்கள் என்ன பேசினீர்கள் என்று கேட்டேன்."

"பல விஷயங்களைப் பற்றியும் பேசினோம். முக்கியமாக, புரட்சி இயக்கத்தை மேலே நடத்துவது பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். உன்னைப் பற்றியும் பேசினோம்."

"என்னைப் பற்றி என்ன பேசினீர்கள்? தாரிணியுடன் நீ என்னைப் பற்றிப் பேசுவதற்கு அவசியம் என்ன?" என்று சீதா கேட்டாள்.

"உன்னுடைய உடல் நிலையும் உள்ளத்தின் நிலையும் சரியாயில்லாதது பற்றிப் பேசினோம். உனக்கு எப்படி உதவிசெய்வது என்று யோசித்தோம்."

"எனக்கு ஒரு உதவியும் தேவையில்லை. தாரிணியை மறுபடியும் பார்த்தால் என்னுடைய உடல் நிலையும் மன நிலையும் சரியாய்த்தான் இருக்கிறது என்று சொல்லி விடு!"

"தாரிணியை நான் மறுபடியும் பார்க்க மாட்டேன். இன்று இரவே நான் கல்கத்தா போகிறேன்."

"அப்படியானால் சரி; என்னமோ சொல்ல வந்தாயே, அதைச் சொல்! நீயும் தாரிணியும் இங்கே பேசிக் கொண்டிருந்தீர்கள். அப்புறம்?"

"தாரிணி போன பிறகு நான் உட்கார்ந்திருந்த இடத்துக்கு மூன்று ஆசாமிகள் வந்தார்கள். வந்து ஷோகாபிராமமாகக் கொஞ்ச நேரம் பேசினார்கள். பிறகு தங்கள் நோக்கத்தை வெளியிட்டார்கள். அதாவது தாரிணியை அவர்கள் கைப் பற்றிக் கொண்டு போவதற்கு நான் உதவி செய்தால் எனக்கு லட்சம் ரூபாய் தருவதாகச் சொன்னார்கள்!"

"இது என்ன அநியாயம்? அப்படிப்பட்ட மனிதர்கள் யாரா யிருக்கும்? உனக்குத் தெரியுமா, சூரியா?"

"எப்படித் தெரியும்? ஏதோ ஒரு சுதேச சமஸ்தானத்து ஆட்கள் என்று தோன்றியது. யாராயிருந்தால் என்ன? இந்த 1943-ம் வருஷத்தில் வைஸ்ராய் வேவலின் ஆட்சியின் கீழ் டில்லி நிலைமை இப்படி இருக்கிறது. இருட்டிலே உன்னைத் தனியாக அனுப்ப எப்படி எனக்கு மனம் வரும்?"

"சூரியா! என் விஷயத்தில் அந்த மாதிரி கவலை உனக்கு வேண்டாம். தாரிணியைப் போன்ற அழகிக்கு லட்சம் ரூபாய் தருவதாகச் சொன்னால், எனக்கும் அப்படிச் சொல்வார்களா? என் மூஞ்சி இருக்கிற இலட்சணத்துக்கு என்னை ஏலம் போட்டாலும் ஒரு லட்சம் பைசாக்கூட யாரும் கொடுக்கமாட்டார்கள். என் அகத்துக்காரர் தாரிணியை வேண்டாம் என்று சொல்லிவிட்டு என்னை இஷ்டப்பட்டுக் கலியாணம் செய்து கொண்டாரே, அதை நினைத்தால் அவருக்கு

எவ்வளவோ நான் நன்றியோடிருக்க வேண்டும். இல்லையா?"

"அப்படி நீ யிருப்பதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. இன்று ஒரு நாளைக்கு உன்னை உன் வீட்டுக்குக் கொண்டுபோய் விட்டு விடுகிறேன். அது என்னுடைய கடமை. இல்லாவிட்டால் என் மனது அடித்துக்கொண்டே யிருக்கும்."

"சூரியா! உன்னை வர வேண்டாம் என்று நான் சொல்லுவது உனக்காகத் தான். எங்கள் வீட்டுக்கருகில் போலீஸார் வட்டமிட்டுக் கொண்டிருப்பதாக எனக்குச் சந்தேகம். நீ அவ்விடம் வந்தால் உடனே உன்னை அரெஸ்டு செய்து விடுவது என்று காத்திருக் கிறார்கள். ஆகையினால் தான்..."

"அரெஸ்டைப் பற்றி எனக்குக் கொஞ்சமும் கவலையில்லை என்று தான் முன்னமே சொன்னேனே?"

"உனக்குக் கவலையில்லை என்பது சரிதான். நீ எப்போது கைதியாவோம், ஜெயிலுக்குப் போய் நிம்மதியாயிருப் போம் என்று எண்ணக் கொண்டி ருக்கிறாய். ஆனால் என் அகத்துக்கா ரர் சர்க்கார் உத்தியோகஸ்தர் என் பதை நீ கவனித்தாயா? எங்களுடைய வீட்டில் உன்னைக் கைது செய்யும்படி நேர்ந்தால் அவருடைய நிலைமை என்ன ஆகும்? அவருடைய உத்தியோகத் துக்கு ஆபத்து வராதா?"

சூரியா ஒரு நிமிஷம் திகைத்து ஸ்தம்பித்துப் போய் விட்டான். பிறகு "மன்னிக்க வேண்டும், சீதா! அந்த விஷயத்தை நான் எண்ணிப் பார்க் கவேயில்லை. போகட்டும். நான் உன் வீடு வரையில் வரவில்லை. வீட்டுக்குக் கொஞ்சதூரம் வரையில் வருகிறேன். அப்புறம் நீ தனியே போய் விடு. இவ்வளவாவது செய்தால்தான் என் மனது நிம்மதியடையும்."

"நல்லது; அப்படியே செய். உன் மனது நிம்மதி அடையட்டும்" என்று சீதா சம்மதித்தாள்.

இருவரும் அந்த மரத்தடியிலிருந்து புறப்பட்டார்கள். மைதானத்திலிருந்து வெள்ளி வீதிக்குப் போகும் சாலை ஜன நடமாட்டம் இல்லாமலிருந்தது. அந்தச் சாலையில் ஓரிடத்தில் ஒரு பெரிய மோட்டார் நின்று கொண் டிருந்தது. அதனுடைய பின் புறத்தி லிருந்த 1111 என்னும் நம்பர் சூரியா வின் மனதில் பதிந்தது. வண்டிக்குள் இரண்டு பேர் இருந்தார்கள். வண் டிக்கு வெளியில் சாலை ஓரத்து வேலிக் கருகில் நின்று இருவர் சுருட்டுப் பிடித் துக் கொண்டிருந்தார்கள். வண்டியைத் தாண்டிச் சென்றபோது சூரியாவின் மனதில் ஒரு சிறு சந்தேகம் உதித்தது. ஆனால் அதைத் தீர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பம் அதுவல்ல என்பதை உணர்ந்தான். பின்னர் கொஞ்சம் வேகமாகவே நடந்தான்.

சூரியாவும் சீதாவும் வெள்ளி வீதியை அடைந்து மணிக்கூண்டுக்கு அருகில் ஒரு டாக்ஸியைப் பிடித் தார்கள். அதில் ஏறி உட்கார்ந்ததும், "புது டில்லி சலோ!" என்றான் சூரியா. வண்டி போய்க் கொண்டிருந்தது.

அவர்கள் ஏறிய டாக்ஸியைப் பின் னால் ஒரு மோட்டார் வண்டி தொடர்ந்து வருகிறதோ என்று சூரியா சந்தேகித்தான். அதை நிச்சயம் செய்து கொள்ள முடியவில்லை! புது டில்லிச் சாலையில் மோட்டார் வண்டிகள் முன் னும் பின்னும் போகாமலா இருக்கும்? வண்டி வேகமாய்ச் சென்றது. ஜந்தர் மந்தர் என்னும் பழைய காலத்து வான சாஸ்திர ஆராய்ச்சிக் கூடத் தைக் கடந்ததும் சீதா, "இங்கேயே வண்டியை நிறுத்திவிடலாம். எங்க ளுடைய வீடு இன்னும் கொஞ்ச தூரந்தான் இருக்கிறது" என்றாள்.

"சரி" என்று சொல்லிச் சூரியா வண்டியை நிறுத்தச் செய்தான்

"நான் இவ்விடம் இறங்கிக் கொள் ளட்டுமா? நீ வீட்டுக்குப் போய் வண்டியை அனுப்பிவிடுகிறாயா?"

"வேண்டாம்! டாக்ஸிக் காரில் போய் இறங்கினால் வேலைக்காரர்கள் ஏதாவது நினைத்துக் கொள்வார்கள். நடந்து போனால் வழக்கம் போல் உலாவப் போய் வருவதாக நினைத்துக் கொள்வார்கள். இங்கிருந்து நடந்தே போய்விடுகிறேன். இரண்டு பர்லாங்கு தூரம் கூட இராது."

"சரி" என்றான் சூரியா.

சீதா வண்டியிலிருந்து இறங்ியதும் இன்று "இராத்திரியே கல்கத்தா

போகப் போகிறாயல்லவா? கட்டாயம் போய் விடு. சூரியா!" என்றாள்.

"போகத்தான் போகிறேன், சீதா!"

"நாம் மறுபடியும் எப்போது சந்திக்கிறோமோ என்னமோ? ஆனால் என்னிடம் உனக்குள்ள அபிமானத்தையும் நீ எனக்குச் செய்திருக்கும் உதவியையும் ஒரு நாளும் நான் மறக்கமாட்டேன்" என்றாள் சீதா.

"நானும் உன்னை ஒருநாளும் மறக்க முடியாது, அத்தங்கா!"

சீதா சாலையில் நடந்து போய்க் கொண்டிருந்தாள். சூரியா வண்டியிலிருந்து இறங்கி அவள் போவதையே பார்த்துக்கொண்டு நின்றான்.

வெண்ணிலா துல்லியமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. பக்கத்து வீடுகளின் தோட்டங்களிலிருந்து இரவு பூக்கும் மலர்களின் சுகந்தம் வந்து கொண்டிருந்தது. காற்று மிருதுவாக வீசிற்று. பக்கத்து வீடு ஒன்றிலிருந்து "ஸோஜா ராஜ குமாரீ! ஸோஜா!" என்னும் கிராமபோன் கீதம் கேட்டுக் கொண்டிருந்தது.

இத்தகைய சூழ்நிலையால் சீதா மேலே மேலே அந்தச் சாலையில் தன்னந்தனியாகப் போய்க் கொண்டிருந்தது ஏதோ ஒரு சினிமாப் படத்தில் வரும் காட்சியைப் போல் தோன்றியது.

"சீதாவின் வருங்கால பாக்கியம் எப்படியோ? அவளுடைய மன மாறுதலைப் பற்றி அவள் சொன்னதெல்லாம் உண்மைதானா? அல்லது நம்மிடம் அவ்விதம் சொல்லி விட்டுச் சென்று விஷத்லை அருந்திச் சாகப் போகிறாளா? அப்படி நேர்ந்தால் அந்தச் சாவில் நமக்குப் பொறுப்பு இல்லை மற்போகுமா?" என்று சூரியா எண்ணமிட்டுக் கொண்டிருந்தான்.

பின்னால் தொடர்ந்து வந்து கொண்டிருந்த கார் சூரியாவைத் தாண்டிப் போயிற்று. அதனுடைய நம்பர் 1111 என்பது மறுபடியும் அவனுடைய கண்ணில் பட்டுக் கவனத்தில் பதிந்தது.

வேகமாய்ச் சென்ற அந்த மோட்டார் கார் சட்டென்று பிரேக் போடப் பட்டுச் சீதாவின் அருகில் நின்றது. வண்டியிலிருந்து இரண்டு பேர் குதித்தார்கள். சீதாவைப் பலவந்தமாகக் காருக்குள் தள்ளினார்கள். தாங்களும் ஏறிக் கொண்டார்கள். கதவு சாத்தப் பட்டது. வண்டி 'கிர்' என்ற சத்தத்துடன் திரும்பி சூரியா நின்ற வழியாகவே மறுபடியும் வரத் தொடங்கியது.

இவ்வளவும் சுமார் அரை நிமிஷத்துக்குக் குறைவான நேரத்தில் நடந்து விட்டது. சூரியாவின் மூளை சற்று நேரம் செயலிழந்து போயிருந்தது. ஆனால் அந்த வண்டி அவன் நின்ற இடத்தைத் தாண்டிச் சென்றபோது மூளை வேலை செய்ய ஆரம்பித்தது. வண்டிக்குள்ளிருந்து 'அம்மாஞ்சி!' என்ற தீனக்குரல் வந்தது போலத் தோன்றியது. சூரியா தன் கால் சட்டைப் பையிலேயே வைத்திருந்த கைத் துப்பாக்கியை எடுத்து அந்த வண்டியின் டயர்களை நோக்கிச் சுட்டான். டயர் மீது குண்டு படவில்லை. சட்டென்று பக்கத்தில் நின்ற டாக்ஸிக்குள் ஏறிக் கொண்டு, "பாயி! அதோ அந்த வண்டிக்குப் பின்னால் விடு! உனக்கு வேண்டியதைத் தருகிறேன்! இல்லாவிட்டால் உன்னைச் சுட்டுக் கொன்று விடுவேன்!" என்றான்.

"பெட்ரோல் குறைவாக இருக்கிறது, சாகிப்!" என்றான் டிரைவர்.

"அதனால் பரவாயில்லை. பெட்ரோல் இருக்கிறவரையில் வண்டியை ஓட்டு சீக்கிரம்!" என்றான்.

இந்தச் சமயம் பார்த்து ஒரு போலீஸ்காரன் அங்கே வந்து "சுட்டது நீதானா? அந்தத் துப்பாக்கியை இப்படிக் கொடு!" என்று கேட்டான்.

சூரியா அந்தப் போலீஸ்காரனைப் பிடித்து வேகமாக ஒரு தள்ளுத் தள்ளினான். போலீஸ்காரன் தூரப் போய் விழுந்தான். "ஜாவ்! ஜாவ்!" என்று சூரியா அதட்டினான். டாக்ஸி டிரைவரும் மூளை குழம்பிப் போய் வண்டியை அதிவேகமாக விட்டுச் சென்றான்.

சற்று நேரத்துக்கெல்லாம் விழுந்த போலீஸ்காரன் எழுந்து மூன்று தடவை விஸில் ஊதினான். சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு ஜீப் வண்டி வந்தது. அதில் நாலு போலீஸ்காரர்கள் இருந்தார்கள். இந்தப் போலீஸ்காரனும் அதில் ஏறிக் கொண்டு ஏதோ சொன்னான். ஜீப் வண்டி முன் இரண்டு வண்டிகளைத் தொடர்ந்து அதிவேகமாகச் சென்றது.

கண்கண்ட தெய்வம்



நாமக்கல் கவிஞர்

1. காந்திக்கு நிகர்வேறும் உண்டோ—மக்கள்
கண்கண்ட ஒருதெய்வம் அன்றோ
சாந்திக்கும் புகழ்தந்த சாந்தன்—உலகில்
சன்மார்க்க வாழ்க்கைக்கு வேந்தன் (காந்தி)

2. மரணத்தை இனிதாக்கும் ஐயன்—என்றும்
மனதுன்ளும் சினமற்ற மெய்யன்
இரணத்தை எய்யாத வீரன்—காந்தி
இணையற்ற மெஞ்ஞான தீரன் (காந்தி)

3. உயிருள்ள உடலங்கள் எல்லாம்—ஈசன்
உறைவென்று பணிகின்ற நல்லோன்
துயருற்ற எவருக்கும் துணையாம்—காந்தி
தொடர்பன்றி எதுவாழ்வின் புணையாம்? (காந்தி)

4. வையத்தை வாழ்விக்க வந்தான்—மக்கள்
வானத்தின் சக்திபெறத் தந்தான்
தெய்வத்தின் பெயர்தியாக ராசன்—என்று
தெரிவிக்க உயிர்தந்த நேசன் (காந்தி)

5. பகவானைத் தரிசிக்க என்று—நாமும்
பலவான ஊர்தேடிச் சென்று
மிகவாக வாடிடுதல் வேண்டாம்—காந்தி
மெய்வாழ்வு பாடிடுதல் பூண்டால் (காந்தி)

6. தானங்கள் வெவ்வேறு செய்து—நல்ல
தவமென்று ஆகுதிகள் பெய்து
மோனங்கள் தருகின்ற யாவும்—காந்தி
முறைதந்த வழிவாழ மேவும் (காந்தி)



மகாத்மாவின் மணிமொழிகள்



பெண்களுக்கு ஆடை ஆபரணத்தினால் அழகு கிடையாது. பிறருக்குச் சேவை செய்வதிலேதான் பரிமளிக்கத் தக்க அழகு இருக்கிறது.

★

சுதந்திரம் பெற்று விட்டோம் என்று நாம் எல்லாக் காரியங்களுக்குமே அரசாங்கத்தாரின் உதவியை நாடுவது என்பது கூடாது. அப்படி நாடுவோமானால் நாம் சுதந்திரத்துக்குக் கொஞ்சமும் லாயக்கற்றவர்களாகி விடுவோம்.

★

சாவுக்கு மத்தியிலே வாழ்வு நிலைத்திருக்கிறது. பொய்க்கு நடுவே உண்மை நிலைத்திருக்கிறது. இருளின் மத்தியிலே ஒளி நிலைத்திருக்கிறது. அதைப்போலவே கடவுள் உயிரும் உண்மையும் ஒளியுமா யிருக்கிறார்.

★

ஒழுக்கத்தையும் சத்தியத்தையும் அன்பையும் அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மனிதனும் வாழ வேண்டும். ஒழுக்கமே மிக உன்னதமான தர்மம் என்று நம்ப வேண்டும். சத்தியத்துக்கும் அன்புக்கும் மாறுபட்ட சான்றுகளை எல்லாம் வெறுத்து உதறித் தள்ள வேண்டும்.

★

சந்தோஷமாகச் செய்கிற தியாகத்துக்குத்தான் மதிப்பு உண்டு. முகத்தைத் தொங்க விட்டுக்கொண்டு தியாகம் செய்வதில் அர்த்தமேயில்லை. தன்னுடைய தியாகத்திற்கு எவனொருவன் அனுதாபத்தையும் புகழையும் எதிர்பார்க்கிறானோ அவன் வெகு சாதாரணமான மனிதன்.

★

நீங்கள் தேசபக்தர்களாகத் திகழ வேண்டுமானால், ஏழைகளின் நலத்துக்குப் பாடுபடவேண்டுமானால், முதலில் உங்களை நீங்களே தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

★

மனிதத்தன்மை யென்பது வீண் பேச்சுக்களிலோ, அதிகார தோரணைகளிலோ இல்லை. சமுதாயத் துறையிலோ பிற துறைகளிலோ, எது சரியென்று தோன்றுகிறதோ அதை, அதன் பலாபலன்களை எதிர்பாராமல் செய்கிற துணிவிலேதான் இருக்கிறது.

★

மற்றவர்களிடத்தில் நீ அன்பு செலுத்துகிறாய் என்றால் அதை நீ எப்படிக் காட்ட வேண்டும்? அவர்களைப் புகழ்வதினால் அல்ல; அவர்களுக்குத் தொண்டு செய்வதினால்தான்.

★

விழித்துக் கொண்டிருக்கிறவர்களுக்குத்தான் சுயராஜ்யம். தூங்குகிறவர்களுக்கும் அறியாமையில் மூழ்கிக் கிடப்பவர்களுக்கும் அல்ல.

★

மனிதனுக்கு முதல் தேவை உணவு. இரண்டாவது உடை. பிறகுதான் அறிவு ஆத்மா முதலியன வெல்லாம். உலகத்துக்கு உணவை வழங்குகிறவன் விவசாயி; உடையை வழங்குகிறவன் நெசவுத் தொழிலாளி. முன்னவன் பட்டினியைப் போக்குகிறான்; பின்னவன் மானத்தை மூடுகிறான். இவை இரண்டுந்தான் அடிமை நாற்றமே வீசாத புனிதமான தொழில்கள்.

★

எவன் தனக்குத்தானே சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்கிறானோ அவனே சுதந்திர புருஷன்.

★

சுயராஜ்யம் கோழைகளுக்கும் சோம்பேறிகளுக்கும் அல்ல; சிரித்துக் கொண்டே தூக்கு மேடையில் ஏறத் தயாராக இருப்பவர்களுக்குத்தான்.

★

ஏழை எளியவர்களுடன் சேர்ந்து வாழ்ந்து அவர்களுடைய கஷ்ட நிஷ்டூரங்களை உணர்ந்து அவர்களுக்கு உண்மையான ஊழியம் புரிவதுதான் கடவுளிடம் காட்டும் சிறந்த பக்தி.

★

முள் நிறைந்த செடியிலேதான் அழகும் வாசனையும் தருகின்ற ரோஜா பூக்கின்றது. அது போலவே சொல்ல முடியாத கஷ்டத்துக்கும் தாங்க முடியாத எதிர்ப்புக்கும் மத்தியிலேதான் உண்மை மலர்கிறது.

மகத்தான 6-வது வாரம்

பிரதி தினமும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இடமின்றி திரும்புகின்றனர்



- ★ திருக்கைலாயம்
- ★ மீனாட்சி கோவில்
- ★ பாண்டியன் தர்பார்
- ★ பொற்றாமரைக் குளம்
- ★ சங்க மண்டபம்
- ★ தாமரைத் தடாகம்

முதலிய அற்புத காட்சிகள்!!

எமது அடுத்த நாடகம் "முள்ளில் ரோஜா"



அகௌன்டென்ட் தலை வலியால் தாக்கப்பட்டார்



அதன் காரணத்தை க்ருஷன் ஸால்ட் விலக்கியது

சர்மா ஒரு நல்ல கணக்கர் — அவர் தலை நோயால் கஷ்டப்படவிருக்கும் வரையில் அவர் வேலை செய்யவும் முடியாத அளவுக்கு நோவு மிக மோசமாயிது. மானேஜர் அவரது வேக மின்மையைக் குறித்து புகார் செய்தபோது சர்மா தனது நோயின் காரணம்தான் என்பதை விளக்கினார். பின்பு மானேஜர் அவருக்குக் கீழ்க் கண்டவாறு யோசனை சொன்னார்: ''காலை உண்டிக்கு முன் தினமும் 'க்ருஷன்' சாப்பிடுங்கள்.''

இரண்டே வாரங்களுள் சர்மா புதிய மனிதராகி விட்டார்—தன் வேலையில் ஊக்கம், கவனம் முதலியவைகளுடன், ஆறு மாதங்கள் தலைவலி ஓர் மறைந்த நினைவைப்போல் உத்தியோக உயர்வும் அதிக சம்பளமும் அடையப் பெற்றார்.

கோளாறு கொண்டுள்ள வயிறு அல்லது வயிற்றில் தங்கிக்கொண்டு ரத்தத்தை நச்சாக்கும் மலங்களினாலேதான் தலைவலி ஏற்படக் காரணமாகும். இவ்விஷத்தை அப்புறப் படுத்துங்கள் — மறுபடி சேர விடாதீர்கள் — பின் நீங்கள் கவலை கொள்ளவே வேண்டாம். அவ்வாறு தான் 'க்ருஷன் ஸால்ட்' விரைவாகவும் எப்போதும் தலைவலியினின்று காப்பாற்றுகிறது. இவ்வாதம் மற்றும் பல நோய்களை உண்டாக்கும் விஷம்கெடுநிலை விளைவிக்கும் அமிலங்கள் இவற்றை அப்புறப் படுத்த 'க்ருஷன்' இயற்கைக்கு உதவுகிறது. இன்றே க்ருஷன் வாங்குங்கள். கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் எங்கும் கிடைக்கும். விலை ரூ. 1-10 (மஞ்சள் பெட்டியில்.)



நீங்கள் கூட அந்த க்ருஷன் உணர்ச்சியை அடையலாம்

தேசாய் கண்ட காந்திஜி

எஸ்.எஸ்.

முப்பது வருஷ காலத்துக்கு மேலாக மகாத்மா காந்தியின் காரியதரிசியாக இருந்து இடைவிடாது தொண்டு புரிந்து வந்த ஸ்ரீ மகாதேவ தேசாய் குஜராத்தி பாஷையில் காந்தி மகானைப் பற்றித் தமது ஞாபகங்கள் சிலவற்றை எழுதி வைத்துள்ளார். எரவாடா சிறையில் எழுதப்பட்ட அந்தக் குறிப்புகளில் சில பின் வருமாறு:—

எல்லையற்ற பேராசையில் பாபுவைத் தோற்கடிக்க யாராலும் முடியாது. அவருடைய பேராசையை யாரும் அறிந்து கொள்ளவும் முடியாது. தேசத் தொண்டில் அவருக்குள்ள பேராசையையே குறிப்பிடுகிறேன். கைகளில் வலி ஏற்பட்டிருக்கிறது. நூற்கக்கூடாது என்று டாக்டர்களும் சொல்லுகிறார்கள். கைகளில் உள்ள வலிக்கும் நூற்பதற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறார் பாபு. இன்று அவர் 405 சுற்றுகள் நூற்றார்.

* * *

யோகிகள் செய்து காட்டும் சில அற்புத சாகஸங்கள் காந்திஜிக்குப் பிடிப்பதில்லை. ஒரு யோகி செய்துவரும் ஆச்சரியகரமான காரியங்களைப் பற்றிப் பத்திரிகைகள் பிரமாதமாகப் பிரசுரித்திருந்தன. அவற்றைக் கண்டு காந்திஜியால் சகிக்க முடியவில்லை. உடனே அவர் "இந்தியன் சோஷல் ரிபார்மர்" பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ நடராஜனுக்குக் கீழ் வருமாறு ஒரு கடிதம் எழுதினார்:

"கோகுலதாஸ் தேஜ்பால் ஆஸ்பத்திரியிலே ஒரு ஜனக்கூட்டத்தின் முன்னிலையில் யோகி ஒருவர் தம்முடைய சாகஸ வேலைகளைக் காட்டியதன் சம்பந்தமான விவரங்களை நீங்கள் பத்திரிகைகளில் வாசித்திருப்பீர்கள். அந்த யோகி உயிருள்ள ஒரு ஸர்ப்பத்தின் தலை, ஆணிகள், நெருப்புத் திராவகம் முதலியவற்றை விழுங்கியதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. மேற்படி ஜனக்கூட்டத்தில் பிரதம நீதிபதியும் அவருடைய மனைவியும் கூட இருந்தார்களாம். ஸர்ப்பத்தின் தலையை விழுங்கிய யோகியின் செய்கையைக் கண்டு அருவருப்பு அடைந்த ஒரு பெண்மணி பாதியிலே எழுந்து சென்று விட்டார் என்றும் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

"அத்தகைய அருவருக்கத் தக்க காட்சிகளைப் பற்றி உங்களுடைய கருத்து என்னவோ, எனக்குத் தெரியாது. ஆனால் என்னுடைய அபிப்பிராயம் என்னவெனில், அத்தகைய காட்சிகள் காட்டுவோரையும் பார்ப்போரையும் இழிவு படுத்துகின்றன என்பது தான். வெறுக்கத்தக்க அவ்வித காரியங்களால் மானிட வர்க்கத்துக்கோ அல்லது விஞ்ஞான சாஸ்திரத்துக்கோ என்ன லாபம்? ஹடயோகிகள் தங்களுடைய யோக சித்திகளைப் பகிரங்கமாகக் காட்டுவதோ, சொந்த லாபத்துக்காக அவற்றை உபயோகிப்பதோ கூடாதென்று ஹடயோக நூல்கள் சந்தேகத்துக்கு இடமின்றிக் கட்டளையிடுகின்றன. நான் கூறுவதை நீங்கள் அங்கீகரிக்கும் பட்சத்தில், அத்தகைய கொடிய காட்சிகளைத் தடுக்க முயற்சி செய்யக் கூடாதா?"

காந்திஜியின் கடிதத்துக்கு ஸ்ரீ. நடராஜன் எழுதிய பதில்:

"அத்தகைய காட்சிகள் வெறுக்கத் தக்கவை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அவற்றால் எவ்வித பலனும் இல்லை. பொதுஜனங்களுடைய கண்டனத்தின் மூலம் தான் அவற்றைத் தடுக்க வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய உபதேசம் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. 'நீரின் மேல் நடக்க முடியுமா?' என்று யாரோ ஒருவர் ஸ்ரீ பரமஹம்ஸரைக் கேட்டாராம். 'பேஷாக நடக்கலாம். ஆனால் பகுத்தறிவுள்ளவர்கள் படகுக்காரனுக்குக் காசு கொடுத்துத்தான் தண்ணீரைக் கடந்து செல்லுகிறார்கள்' என்று அந்த மகான் பதில் அளித்தாராம்."

* * *

ஒரு சமயம் சிறை வாழ்க்கையைப் பற்றிப் பேச்சு எழுந்த போது காந்திஜி கூறியதாவது:—

"இந்தியச் சிறைகளில் என்ன கஷ்டம்? என்னுடைய உண்மையான சிறை அனுபவம் தென்னாப்பிரிக்காவில் தான் ஏற்

பட்டது. அங்கு என்னைத் தூஷித்தார்கள்; அடித்தார்கள். எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டிருந்தேன்.''

"உங்களை அடித்தார்களா?'' என்று நான் மனோ வேதனையுடன் கேட்டேன்.

"ஆமாம். ஆனால் சிறை அதிகாரிகள் அடிக்கவில்லை. சிறையில் என்னை ஸுலு ஜாதிக் கைதிகளுடன் வைத்திருந்தார்கள். ஒரு ஸுலு என்னை அடித்துக் கீழே தள்ளி விட்டான். அவன் என்னைத் தலையில் அடித்திருந்தால் நிச்சயமாக இரத்தக் காயம் ஏற்பட்டிருக்கும்.''

மேலும் காந்திஜி கூறியதாவது:—

"நான் இருந்த சிறையில் பல்வேறு குற்றங்களுக்காகத் தண்டனை அடைந்தவர்களும் இருந்தனர். ஒரு கைதி மூப்பதாவது தடவையாக தண்டனை பெற்று அங்கு வந்திருந்தான். கைதிகளின் சட்டைகளுக்குப் பைகளை வெட்டிக் கொடுப்பது தான் சிறையில் எனக்குக் கொடுக்கப் பட்டிருந்த வேலையாகும். மற்றவர்கள் அவற்றைத் தைப்பார்கள். ஸுலுக்களிடம் கத்தரிக்கோல்களைக் கொடுப்பது ஆபத்தாகும் என்றே அதிகாரிகள் எனக்கு அந்த வேலையைக் கொடுத்தனர். பிறகு கந்தல் துணிகளால் தலையணைகள் தைக்கும் வேலையையும் எனக்குக் கொடுத்தார்கள்.

"கட்டாந் தரையை மண் வெட்டிகளால் கொத்தும் வேலையையும் நாங்கள் சில நாட்கள் வரையில் செய்தோம். பிறகு மூனிசிபல் தண்ணீர் டாங்கிகளிலும் வேலை செய்தோம். அவ்வாறு வேலை செய்து கொண்டிருந்த போது, எங்களுடன் கூட இருந்த ஜீனபாய் தேசாய் என்பவர் ஒரு சமயம் மூர்ச்சையாகி விழுந்து விட்டார்.

"அப்போது என் தேக நிறை மிக மிகக் குறைந்து விட்டது. எனினும் அச்சமயம் அதை யெல்லாம் நாங்கள் சிறிதும் பொருட்படுத்தவில்லை.''

* * *

சிறையில் அடிக்கடி அரசியலைப் பற்றியும் அரசியல் வாதிகளைப் பற்றியும் நாங்கள் பேச வேண்டிய அவசியம் ஏற்படாமல் இருப்பதில்லை. அப்போது தேசத்தில் பிரிட்டிஷ் சர்க்காரின் அடக்குமுறை வெகு உக்ரமாக இருந்தது. அதிகாரிகள் செய்யும் கொடுமைகளைப் பற்றிச் செய்தி வரும்போதெல்லாம் சர்தார் பட்டேலுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வரும். அவர் அதிகாரிகளை மிகவும் கடுமையாகக் கண்டிப்பார். ஆனால் காந்திஜி எப்போதும் சாந்தமாகவே தான் இருப்பார். "ஆட்சி முறையைத்தான் கண்டிக்க வேண்டுமே யன்றி, தனிப்பட்ட அதிகாரிகளைக் கண்டிக்கக் கூடாது'' என்று கூறுவார்.

அதற்குப் பட்டேல், "எப்போதும் நீங்கள் இப்படித்தான் வேதாந்தம் பேசிக் கொண்டிருப்பீர்கள்'' என்பார்.

டொராண்டோ என்ற விடத்தில் மாஜி வைஸ்ராய் லார்டு இர்வின் ஒரு பிரசங்கம் செய்தார். அதில் அவர் இந்தியாவில் காங்கிரஸ் இயக்கத்தைக் கடுமையாகக் கண்டித்து ஏதோ குறிப்பிட்டிருந்தார். அதைப் பார்த்ததும் சர்தார் பட்டேலின் கண்களில் தீப்பொறி பறந்தது. "பாருங்கள், இவர்கள்தான் உங்களுடைய நண்பர்கள்'' என்றார் பட்டேல்.

அதற்குக் காந்திஜி, "ஆமாம், லார்டு இர்வின் என்னுடைய நண்பர்தான். அவருடைய பிரசங்கம் முழுவதையும் பார்த்தாலன்றி நான் அவருக்கு விரோதமாக எதுவும் சொல்ல முடியாது'' என்று சாந்தமாகப் பதில் கூறினார்.

பாப்பா பத்திரிகையை அப்பா படித்துக் காட்டிய பலன்!



வைத்தியர் காந்தி

வி. ஜி.

ஒரு கதை; காந்தி மகான் சொல்லும் கதை. அந்தக் கதையிலே ஒரு டாக்டர் வருகிறார். அந்த டாக்டரிடம் அஜீரணத்தினால் கஷ்டப்படும் ஒருவன் சிகிச்சை செய்து கொள்ள வருகிறான்.

டாக்டர் என்ன சொல்லுகிறார்?— "தினந்தோறும் நீங்கள் கொஞ்ச தூரமாவது நடக்க வேண்டும்; நடந்தால் உடம்பு சரியாய்ப் போய்விடும்" என்கிறார். "நடப்பதற்கு என்னுடைய உடம்பில் சக்தியில்லையே!" என்கிறான் நோயாளி.

> "வைத்திய சாஸ்திரமே அரைகுறையான அறிவை ஆதாரமாகக் கொண்டதுதான்; அந்த அரைகுறை அறிவிலும் பெரும் பாகம் அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டதாகும்."
>
> —காந்திஜி.

டாக்டர் தம்முடைய மாட்டு வண்டியைக் கொண்டுவந்து, அந்த வண்டியில் அவனை ஏற்றிக் கொள்ளுகிறார். போக்குவரத்துச் சாதனங்கள் ஒன்றும் கிடைக்காத ரஸ்தாவில் வெகுதூரம் போன பிறகு, அவர் தம் கையிலிருந்த சாட்டையைக் கீழே நழுவ விடுகிறார். அதை எடுப்பதற்காக அஜீரணக்காரன் இறங்குகிறான்.

அவ்வளவுதான்; வண்டி அவனுக்காக நிற்கவில்லை; எடுக்கிறது ஓட்டம்!

அந்த வண்டியைத் தொடர்ந்து நோயாளியும் இரைக்க இரைக்க ஓடுகிறான்!

போதுமான அளவு அவன் ஓட்டமும் நடையுமாக நடந்த பிறகு, டாக்டர் வண்டியை நிறுத்தி, அதில் அவனை ஏற்றிக் கொண்டு திரும்புகிறார்.

அத்தனை நாளும் அன்னமே இறங்காமலிருந்த அந்த நோயாளி அன்றிரவு வீடு திரும்பியதும் நன்றாகச் சாப்பிடுகிறான்!

நாமும் சில சமயம் அஜீரணத்தினால் கஷ்டப்படுகிறோம்; டாக்டரைத் தேடிக் கொண்டு போகிறோம்.

டாக்டர் என்ன சொல்லுகிறார்? ஒன்றுமே சொல்லாமல் ஒரு துண்டுக் காகிதத்தை எடுக்கிறார்; அதில் ஒரு மருந்தின் பெயரை எழுதிக் கொடுக்கிறார். அந்த மருந்தை வாங்கிக்கொண்டு நாம் வீடு திரும்புகிறோம்.

மருந்தைச் சாப்பிடுவதோடு, நாம் மனதுக்குப் பிடித்ததை யெல்லாம் சாப்பிடுகிறோம்; நாவுக்கு ருசித்ததை யெல்லாம் சாப்பிடுகிறோம்.

அதாவது, நாம் உடம்புக்கு எஜமானனு யிருப்பதற்குப் பதிலாக நமக்கு உடம்பை எஜமானனுக்கிக்கொண்டு விடுகிறோம்!

இதனால் நம்முடைய வாழ்நாளில் நாம் மருந்துக்கும் முடிவு காண்பதில்லை; வியாதிகளுக்கும் முடிவு காண்பதில்லை.

மக்களின் இத்தகைய பரிதாப நிலையைக் கண்டு காந்தி மகான் மனமுருகினார். "மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதற்கு வழி என்ன?" என்பதைப் பற்றி ஆராய்ந்தார்; அதற்காகப் பல நூல்களைப் படித்தார்; பல உண்மைகளைக் கண்டார்.

அந்த உண்மைகளை அப்படியே உலகத்துக்கு எடுத்துச் சொல்லி விட்டாரா? இல்லை; அந்த உண்மைகள் அத்தனையையும் ஒன்று விடாமல் சோதித்தார்.

யாரை வைத்துச் சோதித்தார்? உங்களையும் என்னையும் வைத்தா சோதித்தார்?— இல்லை; தம்மையே வைத்துச் சோதித்துக் கொண்டார்! தமக்குச் 'சரி' என்று தோன்றியவற்றை மட்டும் எடுத்துச் சொன்னார்!

மகான்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்!

***

புலனடக்கத்துக்காகப் பால் அல்லது பாலினால் செய்யப்படும் பட்சணங்கள் எதையும் சாப்பிடுவதில்லை என்று காந்தி மகான் விரதம் பூண்டிருந்த காலம். அன்று ஏதோ பண்டிகை. "இன்று நான் ஒன்றும் சாப்பிடப் போவதில்லை" என்றார் காந்திஜி.

"பாலைக் கொண்டு பட்சணம் செய்தால் தானே சாப்பிட மாட்டீர்கள்? நெய்கூட இல்லாமல் வெறும் எண்ணெயில் கோதுமை ஹல்வாவும் காராமணிச் சுண்டலும் செய்து வைத்திருக்கிறேன் — சாப்பிடுங்கள்!" என்றார் கஸ்தூரி பா.

இரண்டும் காந்திஜிக்குப் பிரியமானவை; தம்மால் முடிந்த மட்டும் அவற்றைச் சாப்

பிட்டார். அதன் பலனாக வயிற்றுப்போக்கு ஆரம்பித்து விட்டது. தினசரி முப்பது, நாற்பது தடவைக்கு மேல் போயிற்று. பக்கத்திலிருந்த பட்டேல் டாக்டரை வரவழைத்தார். டாக்டர் வந்து பார்த்து விட்டு, 'இஞ்ஜெக்ஷன்' செய்வதாகக் கூறினார். காந்திஜி அதற்கு இணங்கவில்லை.

"முட்டை சாப்பிடலாம். அதற்கு நம் இந்து தர்ம சாஸ்திரங்கூட இடங் கொடுக்கிறது!" என்றார் ஒரு பிரகஸ்பதி.

"சாஸ்திரம் இடங் கொடுத்தால் கொடுத்துவிட்டுப் போகட்டும். அதற்கு என் மனம் இடங்கொடுக்கவில்லை!" என்று மறுத்துவிட்டார் காந்திஜி.

வயிற்றுப் போக்கோ நிற்கவில்லை. அருகிலிருந்தவர்கள் ஒரே துக்கத்தில் மூழ்கினர். காந்தி மகானும் தமக்கு அந்தியகாலம் நெருங்கி விட்டதென்றே நினைத்தார்.

இத்தகைய அபாயகரமான நிலையிலும் காந்திஜி என்ன செய்தார்? ஜெர்மன் டாக்டரான லூயி கூனுடைய ஜல சிகிச்சையைத் தம்முடைய உடம்பில் பிரயோகித்துச் சோதனை செய்தார்!

ஒரு சமயம் தம்முடைய மனைவி நோய்வாய்ப்பட் டிருந்தபோதும், இன்னொரு சமயம் தம்முடைய மகன் நோய்வாய்ப்பட் டிருந்தபோதும் காந்திஜி மேற்படி ஜல சிகிச்சையைச் செய்து சோதனை நடத்தி வெற்றி அடைந்திருந்தார். அதே சோதனைக்குத்தான் இப்பொழுது தம்மையும் ஆளாக்கிக் கொண்டு விட்டார்!

இம்முறையும் காந்திஜி அந்தச் சோதனையில் தோல்வி யடைந்து விடவில்லை; வெற்றியே அடைந்தார்!

●●●

தீராத வியாதிகள் சில வீடு மாற்றினால் தீர்ந்து விடுகின்றன. இதற்குக் காரணம் என்னவென்கிறோம்? — ஏற்கெனவே இருந்த வீட்டில் ஏதோ "தோஷம்" இருந்ததென்கிறோம். உண்மையில் அந்த வீட்டில் எந்தவிதமான தோஷமும் இல்லை; அதிலிருந்த காற்றுத்தான் கெட்டுப்போயிருந்தது. வேறு வீட்டுக்குச் சென்றதும் நல்ல காற்று கிடைத்தது; அதன் பயனாக வியாதி தீர்ந்தது. இதிலிருந்தே நல்ல காற்றைக் கொண்டு பல வியாதிகளைத் தீர்த்துவிடலாம் என்று தெரியவில்லையா? —இதைத்தான் காந்திஜியும் சொல்லுகிறார்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களினாலான நம் உடல் நோய்வாய்ப்படும்போது, அந்த நோய்களை மேற்படி பஞ்ச பூதங்களைக் கொண்டே நிவர்த்தி செய்துவிடலாமென்பது காந்திஜியின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையை அடிக்கடி சோதித்துத் தாம் அடைந்த அனுபவ ஞானத்தைக் கொண்டுதான் மகாத்மா நோயுற்றிருந்த எத்தனையோ அனாதைகளைத் தம் ஆசிரமத்துக்குக் கொண்டு வந்து சிகிச்சை செய்தார்.

ஒருநாள் காந்திமகானைப் பார்ப்பதற்காக டாக்டர் ஒருவர் ஆசிரமத்துக்கு வந்திருந்தார். அப்போது மகாத்மா ஒரு குஷ்டரோகிக்கு மண் சிகிச்சை செய்து கொண்டிருந்தார். அந்தக் குஷ்டரோகியைக் கண்டதும் டாக்டர் திடுக்கிட்டு, "இது என்ன, குஷ்டரோகியைத் தொட்டுச் சிகிச்சை செய்கிறீரே!" என்று கேட்டார்.

ஜீனர்களின் பந்துவான தெய்வமகாத்மா சொன்னார்:—

"இந்த அனாதை, குஷ்டரோகி என்பதற்காகத் தன்னுடைய மனைவியால் கைவிடப் பட்டான்; மக்களால் கைவிடப்பட்டான். என்னால் இவனை எப்படிக் கைவிடமுடியும்?"

ஆம், பிறரைக் கைவிடுவது சாதாரண மனித சுபாவம்; மகாத்மாவிடம் அந்தச் சுபாவம் எப்படி இருக்க முடியும்?

தங்க மோதிரம்

★ ★ ★ 1931-ம் வருஷம் காந்திஜீ எரவாடா சிறையிலிருந்து விடுதலையான சமயம் ஒரு பொதுக் கூட்டத்துக்குப் போயிருந்தார். அப்போது, ஒரு காங்கிரஸ் தொண்டர் தேங்காய் மட்டையால் அழகான மோதிரத்தைச் செய்து கொண்டு வந்து அதைக் காந்திஜீக்குப் பரிசாகக் கொடுத்தார்.

காந்திஜீ வழக்கம்போல அதை ஏலத்துக்கு விட எடுத்தபோது, மற்றொருவர் ஒரு தங்க மோதிரத்தைக் கொண்டு வந்து காந்திஜீக்குப் பரிசாகக் கொடுத்தார். காந்திஜீ சற்று நேரம் வரை அந்த மோதிரத்தை உற்றுப் பார்த்துவிட்டு, "நான் இந்தத் தங்க மோதிரத்தை எப்படிப் போட்டுக் கொள்வது? போட்டுக் கொண்டால் இன்னொரு தடவை கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமே!— அவ்வாறு கல்யாணம் செய்து கொண்டால் எரவாடா சிறையில் இருக்கிறாளே ஒரு கிழவி — அவளுக்கு நான் என்ன பதில் சொல்வது?" என்றார். ★ ★ ★

உண்மைக்கு அழிவில்லை!

மாலு

சுமார் இருபது வருஷங்களுக்கு முன்னால் ஒருதரம் காந்தி மகாத்மா தென்னிந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்தார். அந்தச் சமயம் சென்னையில் அவர் தங்கியிருந்தபோது அவரை தரிசிப்பதற்காக ஏராளமான ஜனங்கள் ஆண்களும் பெண்களுமாகச் சென்றனர். சரஸ்வதியும் தன் குழந்தை பங்கஜத்தை அழைத்துக்கொண்டு சென்றாள். பங்கஜம் தன் வீட்டுக்கோ பள்ளிக்கூடத்துக்கோ யாராவது பெரிய மனிதர்கள் வந்தால் அவர்களுடைய கையெழுத்தை வாங்கிச் சேகரித்து வைத்துக் கொள்வாள். காந்தி மகாத்மாவைப் பார்க்கப் போகும்போதும் மறந்துவிடாமல் கையெழுத்து வாங்கும் நோட்டுப் புத்தகத்தைக் கையுடன் எடுத்துக் கொண்டு வந்திருந்தாள்.

பிரபல ஹரிஜன சேவகி ஒருவருடைய தயவால் காந்திமகானை அவர் அருகில் சென்று தரிசித்து ஆசி பெறும் பாக்கியம் சரஸ்வதி அம்மாளுக்கும் அவள் குழந்தை பங்கஜத்துக்கும் கிடைத்தது. எல்லையற்ற ஆவலோடு காந்தி மகானை வணங்கிய பங்கஜம் பயபக்தியுடன் தன்னுடைய கையெழுத்து வாங்கும் நோட்டுப் புத்தகத்தை எடுத்து காந்தி மகாத்மாவிடம் நீட்டி, "தயவு செய்து தங்கள் கையெழுத்தை இதில் போட்டுக் கொடுக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள். காந்தி மகான் தமக்கே சொந்தமான மோகனப் புன்னகையுடன் பங்கஜத்தின் கழுத்தில் கிடந்த சங்கிலியைத் தொட்டுக் காண்பித்து, "இந்தச் சங்கிலியை ஏழை ஹரிஜனங்களின உதவிக்காக நான் சேகரித்து வரும் ஹரிஜன நிதிக்குக் கொடு; கொடுத்தால், கை யெழுத்துப் போட்டுத் தருகிறேன்" என்று அன்பு கனியச் சொன்னார்.

பங்கஜம் எந்தவிதமான பதிலும் சொல்லாமல் தன் கழுத்தில் கிடந்த சங்கிலியைக் காந்தி மகானின் ஹரிஜன நிதிக்குக் காணிக்கையாகக் கொடுத்து விட்டாள்.

சங்கிலியைப் பெற்றுக்கொண்ட காந்தி மகான் பங்கஜத்தின் சின்னஞ் சிறு கன்னத்தை லேசாகக் கிள்ளிவிட்டுத் தம்முடைய புனிதமான கையெழுத்தைப் போட்டுக் கொடுத்தார். அந்தப் புண்ணிய மூர்த்தியின் கையெழுத்தைப் பெற்ற பங்கஜம் எல்லையற்ற சந்தோஷத்தோடு வீட்டுக்குச் சென்றாள்.

பங்கஜத்தின் தயாளகுணம் அவளைப் பத்துமாதம் சுமந்து பெற்ற தாயாருக்கும் பெருமை அளித்தது. சரஸ்வதி அம்மாளின் சிநேகிதிகள் எல்லாம் சரஸ்வதியிடம் சென்று பங்கஜத்தைப் பற்றிப் பாராட்டிக் கூறும்போது அவள் பெற்ற மனசு குளிர்ந்தது.

மறுநாள் தினப் பத்திரிகைகளில், "பத்து வயதுச் சிறுமி பங்கஜத்தின் தாராளம்! காந்தி மகாத்மாவின் ஹரிஜன நிதிக்குத் தன்னுடைய பத்துப் பவுன் தங்கச் சங்கிலியைக் கொடுத்தாள்!" என்று கொட்டை எழுத்துக்களில் செய்தி பிரசுரமாயிற்று. அந்தச் செய்தியைப் படித்தவுடன் ஏராளமான பெரிய மனிதர்கள் ஹரிஜன நிதிக்குத் தாராளமாக உதவிப் பெருமை யடைந்தனர்.

காந்தி மகான் சென்னை நகரை விட்டுச் செல்லு முன் ஒரு நாள் மாலை தமக்கு வாசித்தளித்த உபசாரப் பத்திரங்களையும் கொடுத்த அன்பளிப்புகளையும் ஹரிஜனங்களின் நிதிக்காக ஏலம் போட்டார்.

மகாத்மாவின் புகழ் பாடி வாசித்தளித்த உபசாரப் பத்திரம் என்பதற்காக அந்த உபசாரப் பத்திரங்களை நாற்பது ஐம்பது என்று போட்டி போட்டுப் பலர் வாங்கிக் கொண்டார்கள். இப்படி எல்லாவற்றையும் ஏலம் விட்ட பிறகு பங்கஜம் கொடுத்த தங்கச் சங்கிலியையும் மகாத்மா காந்தி ஏலம் போட்டார். அதை மகாதேவன் இருநூறு ரூபாய்க்கு ஏலம் எடுத்துக் கொண்டார்.

★

மகாதேவன் சாதாரணப் பேர்வழி அல்ல; காரியவாதி. சங்கிலி குறைந்தது பத்துப் பவுனாவது பெறுமானம் இருக்கும்; இருநூறு ரூபாய்க்கு ஏலம் எடுத்தால் குறைந்தது ஐம்பது ரூபாயாவது நமக்கு லாபம் கிடைக்கும்; காந்தி மகான் ஏலம் போட்டதை எடுத்தோம் என்ற பெருமையும் உண்டு; நம்முடைய ரூபாயும் ஹரிஜன நிதிக்குப் போய்ச் சேருகிறதால் அந்தப் புண்ணியமும் நம்மை வந்து அடையும்; தினம் சங்கிலி, சங்கிலி என்று தொந்தரவு செய்யும் தன் மனைவிக்கும் ஒரு சங்கிலி வாங்கிக் கொடுத்தது போலாகும் என்று நினைத்துத் தான் அந்தச் சங்கிலியை ஏலம் எடுத்தான்.



சத்திய சந்தரான காந்தி மகான் இதையெல்லாம் கண்டாரா? இருநூறு ரூபாய்க்கு மேல் ஒருவரும் ஏலம் கேட்காமற் போகவே சங்கிலியை மகாதேவனிடமே கொடுத்து விட்டார். மகாதேவனே தன்னுடைய சாமார்த்தியத்தைத் தானே புகழ்ந்துகொண்டு தங்கச் சங்கிலியைத் தன் மனைவி சரஸ்வதியிடம் கொடுத்தான். அதைப் பார்த்த சரஸ்வதிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. "சங்கிலி ரொம்ப நன்றாக இருக்கிறதே! எங்கே வாங்கினீர்கள்? எத்தனை பவுன்?" என்று கேள்வி மேல் கேள்வியைப் போட்டு மகாதேவனைத் திணற அடித்தாள்.

"இந்த மாதிரி கடையில் செய்து விற்பானா? உனக்காக வேண்டி 'ஸ்பெஷலாக' ஆர்டர் கொடுத்துச் செய்யச் சொன்னேன். பத்துப் பவுனுக்கும்!" என்றான் மகாதேவன்.

அந்தச் சமயம் பார்த்து அங்கு வந்த குழந்தை பங்கஜம் தான் காந்தி மகாத்மாவிடம் சங்கிலியைக் கொடுத்து விட்டு அவர் கையெழுத்தைப் பெற்ற பெருமையைச் சொல்லிக் கொண்டாள்.

"சங்கிலியா! உனக்கு ஏது?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் மகாதேவன்.

சரஸ்வதியைக் காண்பித்து, "அம்மா தான் வாங்கிக் கொடுத்தாள்!" என்று சொல்லிவிட்டு, வீதிப் பக்கம் விளையாடப் போய்விட்டாள் பங்கஜம்.

"குழந்தைக்கு ஏது சங்கிலி? நீ எங்கிருந்து வாங்கிப் போட்டாய்?" என்று சரஸ்வதியைப் பார்த்துக் கேட்டான் மகாதேவன்.

"யாரிடமும் சொல்லி விடாதீர்கள். மானம் போய்விடும். உண்மைக்கு உழைப்பவரை, சத்தியசந்தரை ஏமாற்றி விட்டேன் என்று ஏசுவார்கள்" என்ற பீடிகையுடன் சரஸ்வதி சொன்னாள் :—

"குழந்தை தினமும் எனக்குச் சங்கிலி வாங்கிக்கொடு, சங்கிலி வாங்கிக்கொடு என்று அழுதாள். நேற்றுத் தள்ளுவண்டிக்காரன் தெருவுக்கு வந்தான். அவனிடம் ஒரு ரோல்டு கோல்டு சங்கிலி இருந்தது. பார்த்தால் தங்கச் சங்கிலி போலவே பளபள வென்று மின்னிக்கொண்டு இருந்தது. அந்தச் சங்கிலியைமூன்று ரூபாய் கொடுத்து வாங்கி அவள் கழுத்தில் போட்டேன். காந்தி மகானிடம் அதைக் கொடுத்து விட்டு அவள் அவருடைய கையெழுத்தை வாங்கிக் கொண்டாள். பத்திரிகைகள் எல்லாம் பத்துப் பவுன் சங்கிலியை ஹரிஜன நிதிக்குக் கொடுத்து விட்டதாகப் பங்கஜத்தைப் பாராட்டியிருந்தன. அதை நீங்கள் பார்க்கவில்லையா?" என்று கேட்கும்போது சரஸ்வதியின் முகத்தில் பெருமிதம் குடிகொண்டது.

"உண்மைக்கு உழைக்கும் புண்ணிய மூர்த்தியான காந்தி மகானை ஏமாற்றி விட்டால் அந்தப் பாவம் சும்மா விடுமா? நீ கழுத்தில் போட்டிருக்கிறாயே, அது மகாத்மா காந்தி ஏலம் விட்ட சங்கிலி தான்! பத்துப் பவுன் மதிப்பு இருக்கும் என்று நினைத்து இருநூறு ரூபாய் கொடுத்து வாங்கிவந்தேன்!" என்று சொன்னான் மகாதேவன்.

சரஸ்வதி அம்மாளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவசரம் அவசரமாகக் கழுத்தில் கிடந்த சங்கிலியைக் கழற்றிப் பார்த்தாள். தள்ளுவண்டிக்காரனிடம் மூன்று ரூபாய் கொடுத்து வாங்கிய ரோல்டு கோல்டு சங்கிலிதான் அது என்று தெரிந்ததும் அவள் கண்களில் நீர் வழிந்தோடியது. அந்தச் சமயத்திலே வீதியில் விளையாடிக் கொண்டிருந்த பங்கஜம் "மகாத்மா காந்திக்கு ஜே!" என்று போட்ட ஜயகோஷம் சரஸ்வதி அம்மாளின் காதில் விழுந்தது.

> ஒரு நல்ல குடும்பத்தைப் போன்ற பள்ளிக்கூடம் வேறு இல்லை; ஒழுக்கம் மிக்க பெற்றோர்களைப் போன்ற உபாத்தியாயர்களும் இல்லை. —காந்திஜி.

ரமணி
பேபி கிரைப்

குழந்தைகளுக்கேற்படும் கோளாறுகளுக்கு





குழந்தை சீறிது சிணுங்கி னாலும் விஷயம் தெரிந்த தாயார் உடனே ரமணி "பேபி கிரைப்"பைக் குழந்தைக்குக் கொடுப்பாள். உடனே அது குணமளிக்கும். மலபந்தம், கடுப்பு, வயிற்றுப்போக்கு, வயிறு உப்புதல் போன்ற வயிற்றுக் கோளாறுகளுக்கு கைகண்ட ஔஷதம்.

தயாரிப்பவர்கள்:

ஸௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி,
மதுரை

ஏஜண்டுகள்: மெஸர்ஸ். சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ் ஏஜென்ஸீஸ், பெஜவாடா; செகந்திராபாத் & பெரம்பூர்: ஸ்ரீ கிரிஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி. மெஸர்ஸ். ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், மதராஸ்

உரோமத்தை உதிர்த்து

உருவைக் குலைக்கும்
சரும வியாதிகளை

உலகப் புகழ் பெற்ற ஜாம்பக் சொஸ்தமாக்கும்



உரோமம் உதிர்க்து உருக்குலைக்கும் சரும வியாதிகளால் அவதியுறுவானேன்? சரிவர ஜாம்பக் உபயோகித்து வந்தால் அந்த ரோகங்களைப் போக்கி உங்கள் சருமத்திற்கு ஆரோக்கியமளிக்கிறது. ஜாம்பக்கிலுள்ள அபூர்வமான மூலிகை மருந்து சத்துக்கள் சருமத்தின் ஊடே சென்று விடுகின்றன. அதனால்தான், ஜாம்பக் வெகு விரைவில் - கமைச்சல் வேக்காடுகளை ஆற்றி, சருமத்திலேற்படும் கசிவைத் தடுத்து வியாதிக் கிருமிகளைக் கொன்று, புண்பட்ட சருமத்தைப் பண்படுத்துகிறது. மிருகக் கொழுப்பு கலப்பற்றது என்பதற்கு உத்தரவாதம்.




எப்பொழுதும் உபயோகியுங்கள்

Zam-Buk

No. 4

ஆறுதலளித்து குணமாக்கும் க்ருமிநாசனக் களிம்பு

ஆசிரியர் காந்தி



எம். எஸ். எஸ்

ஒருமுறை ஒரு பிரிட்டிஷ் பத்திராதி ர் காந்திஜியைப் பேட்டி கண்டு அவரு ன் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்.

புறப்படப் போகும்போது அவர் ாந்திஜியைப் பார்த்து, "எனக்கு எப் பாதும் ஞாபகத்தில் இருக்கும்படி ாகத் தாங்கள் ஏதாவது ஒரு செய்தி யயோ உபதேசத்தையோ எழுதிக் காடுக்க வேண்டும்" என்றார்.

"ஓ! அதற்கென்ன கொடுக்கிறேன்!" ன்று சொல்லிவிட்டு, காந்திஜி அந்தப் த்திராதிபருக்கு ஒரு செய்தியை எழு க் கொடுத்தார்.

காந்திஜி எழுதிக் கொடுத்த அந்தச் சய்தி மிகவும் சுருக்கமானது. இரண்டே ரண்டு வார்த்தைகள்தான் கொண்டது.

"உண்மையைக் கடைப்பிடிக்கவும்" என் நுதான் அந்தச் செய்தி — உபதேசம்.

அந்தப் பத்திராதிபர் காந்திஜி எழுதிக் காடுத்த உபதேசத்தைப் படித்துப் ார்த்தார். அவ்வளவுதான்; அப்படியே ரண்டு போய் விட்டார்.

ஏனெனில், அவர் தம்முடைய பத்தி கை வாழ்க்கையில் ஒரு முறையாவது ண்மையைக் கடைப்பிடித்ததே இல்லை!

* * *

அரசியல் உலகத்தைப் போலப் பத் ிகை யுலகத்திலும் சத்தியத்தை முற்றி ம் கடைப்பிடிப்பது என்பது சுலப ல்லை.

பத்திரிகைத் துறையிலே பிரமாத ாக முன்னேற்ற மடைந்திருக்கும் மேல் ட்டுப் பத்திரிகைகளில் உண்மை எங்கே ருக்கிறது என்பதை பூதக் கண்ணாடியை வைத்துத்தான் பார்க்கவேண்டும்.

இந்தக் கஷ்டமான சோதனையில், க்கினி பரீட்சையில், யாராவது ஒரு சிரியர் இதுவரை வெற்றிகரமாகத் தேறியிருக்கிறார் என்றால், அவர் ஆசிரியர் எம். கே. காந்திதான்.

ஆசிரியர் எம். கே. காந்தி சத்தியத்தை தல் முதலாகப் பத்திரிகையுலகத்தில் நத்தினார். அதன் மூலம் பத்திரிகை லகத்தில் இதுவரை யாரும் சாதிக் த பல அபூர்வ காரியங்களை காந்தி ாத்மா சாதித்திருக்கிறார்.

காந்திஜி நடத்திய பல பத்திரிகைகளில் "யங் இந்தியா" உலகப் பிரசித்தி பெற்றதாகும்.

அப்போது 1919-ம் வருஷம்.

மகாத்மாஜி எப்படி எளிய வாழ்க்கையில் பற்றுக் கொண்டிருந்தாரோ அதைப் போல அவர் நடத்திய "யங் இந்தியா"வும் ஆடம்பரம் கொஞ்சங்கூட இல்லாமல் மிக்க எளிய முறையில் வெளிவந்தது.

"யங் இந்தியா" ஒரு தடவையாவது ஒரு அட்டையுடன் வெளிவந்ததில்லை. கறுப்பு மையைத் தவிர வேறு வர்ணம் எதையும் அதில் பார்க்கமுடியாது. எழுத்தும் ஏறக்குறைய ஒரே மாதிரி எழுத்தாகவே இருக்கும்.

எல்லாவற்றையும் விட ஒரு முக்கிய விசேஷம், அதில் ஒரு விளம்பரம் கூடக் கிடையாது!

இப்படி ஒரு அட்டை இல்லாமல், ஒரு படம் இல்லாமல், ஒரு வர்ணங்கூட இல்லாமல், ஒரு விளம்பரமும் இல்லாமல் வெளிவந்த பத்திரிகைக்குத்தான் உலகத்தில் என்ன மதிப்பு, என்ன செல்வாக்கு!

மகாராஜாக்களும் கவர்னர்களும் வைஸ்ராய்களும் கோடீஸ்வரர்களும் உலகத்துப் பெரும் ராஜதந்திரிகளும் "'யங் இந்தியா' எங்கே, எங்கே?" என்று அதைத் தேடிப் பிடித்துப் படித்தார்கள்.

வட துருவத்தின் ஒரு கோடியிலிருந்து தென் துருவத்தின் ஒரு கோடி வரையிலும், சான் பிரான்ஸிஸ்கோவின் ஒரு மூலையிலிருந்து விளாடிவாஸ்டாக் வரையிலும் அது உலவியது.

"காந்திஜி என்ன எழுதியிருக்கிறார்? இந்த வாரம் 'யங் இந்தியா'வில் என்ன வெளிவந்திருக்கிறது?" என்பதே தேசமெங்கும் பேச்சாக இருக்கும்.

> "எதை எழுதினாலும் தெளிவாக எழுத வேண்டும். எழுத்து நேரடியாக ஜனங்கள் மனதில் தைக்கும்படியாக இருக்க வேண்டும். சுற்றி வளைத்துக் குழப்பக் கூடாது." —காந்திஜி.

காந்திஜி முதல் முதலாக நடத்திய பத்திரிகை "இந்தியன் ஒபீனிய"னாகும். அது தென்னாப்பிரிக்காவில் நடந்தது.

காந்திஜி அரசியல் உலகத்தில் பிரபலமடைவதற்கு தென்னாப்பிரிக்கா எப்படி ஒரு பயிற்சிக்கூடமாக விளங்கியதோ, அதைப் போலப் பத்திரிகைத் தொழிலில் பிரபலமடைவதற்கும் தென்னாப்பிரிக்கா ஒரு பயிற்சிக்கூடமாக விளங்கியது.

காந்திஜி அப்போது பத்திரிகை நடத்துவதை ஒரு கஷ்டமாகக் கருதவில்லை. "எழுதுவதை யோசித்து ஜாக்கிரதையாக எழுதினால் போதும்!" என்று நினைத்தார். "இந்தியன் ஒபீனியன்" ஆரம்பமாகி, சில இதழ்கள் தான் வெளி வந்திருக்கும். அதற்குள் அந்தப் பொல்லாத பத்திரிகை காந்திஜியின் 'கையைக் கடிக்க'த் தொடங்கியது.

அப்போது தான் காந்திஜி, "ஓ! பத்திரிகை நடத்துவதற்குப் பணமும் தேவையாக அல்லவா இருக்கிறது!" என்பதை உணர்ந்தார்.

"இந்தியன் ஒபீனியன்" என்ற அந்தப் பத்திரிகை மாதம் ஒன்றுக்கு காந்திஜியின் எளிய வருமானத்திலிருந்து எழுபத்தைந்து பவுன் சாப்பிட்டு வந்தது. ஆனால் இந்த நிலைமை வெகு காலம் நீடிக்கவில்லை. விரைவில் அதை லாபம் தரக்கூடிய பத்திரிகையாக மாற்றி விட்டார் காந்திஜி.

* * *

தேச சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்காக காந்திஜி பல வீரப்போராட்டங்களை நடத்தியது போலப் பத்திரிகைச் சுதந்திரத்தை நிலை நாட்டுவதற்காகவும் அவர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் வீரப் போர் நிகழ்த்தியுள்ளார்.

1930-ம் வருஷம் சட்ட மறுப்பு இயக்கம் தேச முழுவதும் வெகு தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. இந்திய சர்க்கார் பத்திரிகைகளின் சுதந்திரத்தை அடக்குவதற்காக அவசரச் சட்டத்துக்கு மேல் அவசரச்சட்டத்தைப் பிரயோகித்தார்கள். அதற்கு "யங் இந்தியா" பலியாயிற்று.

"கொண்டு வா ஜாமீனை!" என்றார்கள் இந்திய சர்க்கார்.

"முடியவே முடியாது!" என்று சொல்லி விட்டார் காந்திஜி அழுத்தந்திருத்தமாக.

கடைசியில் இந்திய சர்க்கார் "யங் இந்தியா"வைப் பறிமுதல் செய்து விட்டார்கள். ஆனால் அவசரச்சட்டங்களுக்கு அடிபணிவதில்லை என்று காந்திஜி பூண்டிருந்த சுதந்திர வைராக்கியத்தை அவர்கள் பறி முதல் செய்ய முடியவில்லை.

* * *

காந்திஜி எதை எழுதினாலும் தெளிவாக எழுதுவார். அவருடைய நடை மிகவும் எளியது. பெரிய வார்த்தைகளையோ சொற்றொடர்களையோ போட்டுத் திண்டாட வைக்கமாட்டார்.

காந்திஜி எழுத்தின் மூலம் அநாவசியமாக யாருடைய மனதையும் புண்படுத்தியதில்லை. எதையும் மேல் போக்காக எழுதியதுமில்லை.

நண்பர்கள் என்பதற்காக அவர்களைக் கண்டிக்காமல் இருந்ததில்லை. அரசியல் விரோதிகள் என்பதற்காக அவர்களைத் தாக்கியதுமில்லை.

காந்திஜி தம் கரத்தில் பிடித்த பேனா தெய்வத் தன்மை வாய்ந்தது.

அது என்ன நகை? ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

காந்திஜி மலையாளத்துக்குப் போயிருந்தபோது, ஒரு யுவதி தான் அணிந்திருந்த எல்லா நகைகளையும் காந்திஜிக்குக் கழற்றிக் கொடுத்தாள்.

காந்திஜி அந்த யுவதியை நோக்கி, "இதற்கு உன்னுடைய பெற்றோர்களிடமிருந்து அனுமதி பெற்றுக் கொண்டாயா, அம்மா?" என்று கேட்டார்.

அந்த யுவதி பதில் சொல்லாமல் நகைகளை மட்டும் கழற்றிக் கொடுத்தாள்.

காந்திஜி மிக்க மகிழ்ச்சியுடன், "நீ இந்த நகைகளை மறுபடி போட்டுக் கொள்ளவே கூடாது" என்றார்.

அவள் அதற்கு ஒப்புக்கொண்டு காந்திஜியிடம் கையெழுத்துக் கேட்டாள்.

காந்திஜியும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார். அந்தக் கையெழுத்துக்குப் பக்கத்திலே, "நீ இப்போது கழற்றிக் கொடுத்த நகைகள் எல்லாவற்றையும்விட மிக உயர்ந்த ஒரு ஆபரணத்தை நீ இன்னும் அணிந்திருக்கிறாய். அதுவே உன் தியாகம்" என்று ஒரு சிறு குறிப்பும் எழுதிக் கொடுத்தார்.

கணவர் காந்தி

ஸோமாஸ்

பகல் போஜனம் முடிந்துவிட்டது. ஆசிரம ஊழியர்களெல்லாம் சாப்பிட்டு முடிந்து, ஆசிரமம் திருநாள் முடிந்த ஆலயம்போல் அமைதியாக இருந்தது. சமையல்காரன் சமையல் அறையைப் பூட்டிக்கொண்டு புறப்பட ஆயத்தமானான்.

"அப்பா, கொஞ்சம் இரு! சமையல் அறையில் வேலை இருக்கிறது. சில முக்கியமான விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள்!" என்றார் ஆசிரமத் தலைவர்.

சமையற்காரன் கொஞ்சம் தயங்கிய வண்ணம் ஆசிரமத் தலைவிவிருந்த அறைக்கு ஓடினான்.

"அம்மாளுக்குத் தொந்தரவு கொடுக்காதே! நீயே கொஞ்சம் சிரமத்தைப் பாராமல் வந்தவர்களுக்கு உணவு தயார் செய். நானும் வேண்டுமானால் உனக்கு ஒத்தாசை செய்கிறேன்!" என்றார் ஆசிரமத் தலைவர்.

சமையற்காரன் என்ன செய்வான்? உடனே கதவைத் திறந்து சமையலுக்கு ஆயத்தம் செய்தான். ஆசிரமத் தலைவரும் அவனுடன் கலந்து கொண்டார். கொஞ்சங் கூடச் சத்தம் செய்யாமல் அடிமேல் அடியெடுத்து வைத்து இருவரும் காரியங்களைக் கவனித்தார்கள். ஆனால் மேலே இருந்து சமையற்காரன் கரண்டியை எடுத்தபோது, அது தவறிக் கீழே யிருந்த தாம்பாளத்தில் விழுந்து 'டணார்' என்று ஒலித்தது.

அவ்வளவுதான்; ஆசிரமத் தலைவி உடனே அங்கு வந்துவிட்டார்.

"என்னை ஏன் கூப்பிடாமல் நீங்களே இந்த வேலையில் இறங்கி விட்டீர்கள்? விருந்தினர் வந்து விட்டார்கள் என்றால் நான் அவர்களைக் கவனிக்க மாட்டேனா?" என்று தம் கணவரைப் பார்த்துக் கேட்டார் ஆசிரமத் தலைவி.

பிறகு விருந்தோம்பல் உற்சாகமாய் நடந்தது.



ஆதிகாலத்தில் அரிச்சந்திரன் சத்தியத்தைக் காக்கும் பொருட்டு, சந்திரமதியைச் சொல்லவும் விளக்கவும் கூசும் துன்பங்களுக்கு உள்ளாக்கித் தானும் பல துன்பங்களுக்கு உள்ளானான்.

இந்த நூற்றாண்டில் காந்திமகான் சத்திய சோதனை வேள்வியைத் தொடங்கி, கஸ்தூரி பாயைச் சொல்லொணா வேதனைக்கு உள்ளாக்கினார்.

ஏட்டுக் கல்வி அதிகம் கல்லாதவராயினும் கஸ்தூரிபாய் நம் பாரத நாட்டுப் பழம் பெரும் கேள்விச் செல்வம் கை வரப் பெற்றவர். அதனாலேதான் காந்தி மகானின் உன்னத லக்ஷ்ய வாழ்க்கையில் அவர் மனங்கோணாமல் பங்கெடுத்துக் கொள்ள முடிந்தது.

காந்திஜி – கஸ்தூரிபாய் இல் வாழ்க்கைப் பாதையில் தன்னலத் தியாகமும் பொது நலச் சேவையுமே தீபங்களாய் இலங்கின. சாதாரண மக்களின் குடும்ப வாழ்க்கையில் காணப்படும் சொத்து சேர்க்கும் வேட்கை அவர்களுடைய வாழ்க்கையில் இடம் பெறவில்லை. இத்தகைய தூய வாழ்க்கைக்கு ஒரு சமயம் சோதனை ஏற்பட்டது. தென்னாப்பிரிக்காவில் இருந்து வருஷங்கள் தங்கிவிட்டு காந்திஜி இந்தியாவுக்குப் புறப்பட்டபோது தென்னாப்பிரிக்க இந்தியர்கள் தங்க நகைகளையும் வெள்ளிச் சாமான்களையும் வைர ஆபரணங்களையும் காந்திஜிக்குப் பரிசாக அளித்தனர். காந்திஜிக்கு அந்தப் பரிசுப் பொருள்களை ஏற்க விருப்பமில்லை.

தம்முடைய விருப்பத்தைக் கஸ்தூரி பாயிடம் பிரஸ்தாபித்தார்.

"அவர்கள் நம் மீது கொண்ட அன்பினால் தானே அவற்றைக் கொடுக்கிறார்கள்! இதை வாங்கிக் கொள்ளுவதில் தவறு என்ன இருக்கிறது? உங்களுக்கு நகை வேண்டாம், பணம் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். ஆனால் நம் வீட்டுக்கு வரும் மருமக்கள்மாருக்குக் கூட ஒன்றும் வேண்டாமா?" என்று கஸ்தூரி பாய் கண்களில் நீர் மல்கக் கேட்டார்.

ஆனால் காந்திஜியின் பிடிவாதமான கொள்கை பத்தினியின் கண்ணீரைக் கண்டு கொஞ்சமும் தளரவில்லை. கஸ்தூரிபாயுடன் வெகு நேரம் வாதாடி அவ

நல்ல கணக்கு!



உபாத்தியாயர்:— முதலில் உன்னுடைய வீட்டுக்கு நான் இரண்டு பூனைகள் அனுப்புகிறேன்; மறுபடியும் இரண்டு பூனைகள் அனுப்புகிறேன்; மொத்தம் எத்தனை பூனைகள் ஆச்சு, சொல்லு?

பையன்:— மொத்தம் ஆறு பூனைகள், ஸார்!

உபாத்தியாயர்:— அது எப்படி ஆறு ஆகும்?

பையன்:— முன்னாலேயே எங்கள் வீட்டில் இரண்டு பூனைகள் இருக்கின்றன!

யையும் தம் வழிக்குக் கொணர்ந்து அந்தப் பரிசுப் பொருள்களை யெல்லாம் வாங்கி அவைகளைப் பொது சேவை ஸ்தாபனத்துக்கு என்று எழுதி வைத்து விட்டார்.

* * *

மகாத்மா ஒரு சமயம் இலங்கைக்குச் சென்றிருந்த போது கஸ்தூரிபாயைப் பற்றிக் கூறியதாவது:

"நான் செய்யும் தேச சேவையின் தத்துவத்தை உணர்ந்தோ உணராமலோ அதில் கஸ்தூரிபாயும் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறாள். 'சத்தியசோதனை என்னும் கரடுமுரடான பாதையில் நீயும் என்னைப் பின்பற்றி என் பல துன்பங்களை வருவித்துக் கொள்ளுகிறாய்? நீ வீட்டிலேயே இரு' என்று நான் சொன்னபோது அவள் அதற்கு இணங்கவில்லை. ராமன் இருக்கும் இடத்தை அயோத்தியாகக் கருதி அவரைப் பின் தொடர்ந்த சீதாதேவியைப் போல் என்னுடன் அவள் நிழல் மாதிரி வந்திருக்கிறாள். என் சேவைக்கு ஏதாவது பலன் உண்டு என்றால் அது கஸ்தூரிபாயைத்தான் சேரும்."

இவ்வாறு, காந்தி மகான் ஒரு முறையல்ல, பல முறை கஸ்தூரிபாயைப் பற்றிக் கூறியிருக்கிறார். எந்தக் கணவனும் தன் பத்தினியின் உயர்ந்த பண்பைப் பற்றி அவரைப் போல் அழகாக எடுத்துச் சொன்னதில்லை.

"என்னுடைய மனைவியை என் சொற்படி நடக்கும்படி நிர்ப்பந்திக்க ஆரம்பித்த பொழுதுதான் நான் அவளிடமிருந்து அஹிம்சா தர்மத்தைக் கற்றுக் கொண்டேன். நான் இழைத்த துன்பங்களையெல்லாம் அவள் மௌனமாக அனுபவித்து வந்தாள். இதையெல்லாம் பார்த்து முடிவில் நானே வெட்கம் அடைந்தேன். அவளை ஆளப் பிறந்தவன் என்று நான் எண்ணிக் கொண்டிருந்த மூடத்தனம் என்னைவிட்டு நீங்கியது. இறுதியில் அவளே எனக்கு அஹிம்சையை போதிக்கும் ஆசிரியையானாள்!" என்று காந்தி மகான் கூறியிருப்பதிலிருந்தே அவர் கஸ்தூரிபாயிடம் எத்தகைய பேரன்பும் பெருமதிப்பும் வைத்திருந்தார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

காந்தி மகான் பாரிஸ்டராயிருந்தபோது கஸ்தூரிபாயும் நவ நாகரிகமான பாரிஸ்டரின் மனைவியாயிருந்தார். காந்திஜி சத்திய சோதனையில் ஈடுபட்டுச் சத்தியாக்கிரகியானபோது, கஸ்தூரிபாயும் சத்தியாக்கிரகியானார். பாரிஸ்டர் காந்தி பங்களா வாழ்க்கையைத் துறந்து ஆசிரம வாழ்க்கையை மேற்கொண்ட போது கஸ்தூரிபாயும் முகங்கோணாமல் ஆசிரம வாழ்க்கையை ஏற்றார். காந்தி மகான் பல முறை சிறை செல்ல நேர்ந்தபோது கஸ்தூரிபாயும் பதியுடன் சிறைவாசம் செய்தார்.

மகாத்மா, 'க்விட் இந்தியா' என்ற கோஷத்தைக் கிளப்பி 1942-ம் வருஷம் ஆகாகான் அரண்மனையில் சிறையிருந்தார். இச்சமயமும் கஸ்தூரிபாய் பதியை விட்டுப் பிரியவில்லை. இரண்டு ஆண்டுகள் சிறைவாசம் செய்த பிறகு கஸ்தூரிபாயின் உடல் நிலை பாதிக்கப்பட்டது. கடைசியில் பதியின் மடியில் தலை வைத்தபடி அன்னை கஸ்தூரிபாயின் கடைசி மூச்சு நின்றது.

எதற்கும் கண்ணீர் விட்டே அறியாத காந்திமகான் அப்போதுதான் முதன்முறையாகவும் கடைசி முறையாகவும் கண்ணீர் விட்டார்!

சீதை, தமயந்தி, சந்திரமதி முதலிய பத்தினித் தெய்வங்களோடு சேர்த்து எண்ணும் பேறு பெற்ற கஸ்தூரிபாயும் காந்திஜியும் நடத்திய இல்வாழ்க்கை வானமும் வையமும் உள்ள வரையில் நம் அனைவருக்கும் எடுத்துக் காட்டாய் இலங்கும்.



மாங்கருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

62. வள்ளியம்மை

டிரான்ஸ்வால் மாகாணத்தி லிருந்த ...ல்ஸ்டாய் பண்ணையிலும், நேட்டால் ...மாகாணத்தி லிருந்த போனிக்ஸ் ஆசிர...த்திலும் வசித்த பெண்கள் எல்...லாரும் சத்தியாக்கிரஹப் போரில் ஈடு...பட ஆயத்தமாகி விட்டார்கள். ஆனால் ...ந்த முறையில் சத்தியாக்கிரஹம் செய்...து?—இது முக்கியமான பிரச்னை ...யிற்று. ஏனென்றால், சத்தியாக்கிரஹத்...ன் இயல்பை அறிந்த பிறகு தென்னாப்...ரிக்கா சர்க்கார் காந்திமகானைச் சேர்ந்த...ர்களைக் கைது செய்வதில்லையென்று ...ண்டித்தனம் செய்தார்கள். சாதாரண ...ந்தியர்கள் சட்டத்திலிருந்து அணு...வவு வழுவி நடந்தாலும் கைது செய்யப்...பட்டார்கள். ஆனால் மகாத்மாவின் சத்தி...யாக்கிரஹப் படையைச் சேர்ந்தவர்கள் ...ன்னதான் சட்டத்தை மீறி நடந்தாலும் ...கைது செய்யப்படுவதில்லை.

...டால்ஸ்டாய் பண்ணையைச் சேர்ந்த ...சகோதரிகள் லைஸென்ஸ் சட்டத்தை ...மீறித் தெருத் தெருவாகப் பண்டங்களைக் ...கொண்டுபோய் விற்றார்கள். ஆனாலும் ...அவர்களைக் கைது செய்யவில்லை.

இதன் பேரில் மகாத்மா காந்தி நீர்க்க...க ஆலோசித்துச் சத்தியாக்கிரஹத்...துக்கு ஒரு திட்டம் வகுத்தார்.

...ஆசியாக்காரர் சட்டத்தின்படி ஒரு ...மாகாணத்திலுள்ள இந்தியர்கள் இன்...னொரு மாகாணத்துக்கு அனுமதிச் சீட்டு ...இல்லாமல் போகக் கூடாதல்லவா? ...ஆகையால் டால்ஸ்டாய் பண்ணையைச் ...சேர்ந்த சகோதரிகளைப் பார்த்து "நீங்கள் ...டிரான்ஸ்வால் எல்லையைத் தாண்டி நேட்...டால் மாகாணத்துக்குள் பிரவேசியுங்கள். ...எல்லையில் உங்கள் பெயர்களைக் கேட்டால் ...சொல்லவேண்டாம். அப்படியும் உங்க...ளைக் கைது செய்யாவிட்டால் நேட்டால் மாகாணத்துக்குள் இருக்கும் 'நியூ காஸில்' என்னும் பட்டணத்தை நோக்கிச் செல்லுங்கள். நியூ காஸில் பட்டணத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களில் இந்தியத் தொழிலாளிகள் ஆயிரக்கணக்கானவர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் மூன்று பவுன் தலைவரியினால் பாதிக்கப் பட்டவர்கள்; பெரும்பாலோர் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். நீங்கள் நியூ காஸில் பட்டணத்தை அடைந்து அங்கேயுள்ள தொழிலாளிகளிடம் வேலை நிறுத்தம் செய்யும்படி கேட்டுக் கொள்ளுங்கள். அதற்குமேலே என்ன நடக்கிற தென்று பார்த்துக்கொண்டு நிலைமைக்குத் தக்கபடி யோசனை சொல்கிறேன்!" என்று காந்திஜி யோசனை கூறினார்.

அதன்படியே டால்ஸ்டாய் பண்ணையைச் சேர்ந்த தமிழ்ப் பெண்மணிகள் நியூ காஸிலை நோக்கி யாத்திரை கிளம்பினார்கள்.

அதே சமயத்தில் காந்திஜியின் யோசனைப்படி போனிக்ஸ் ஆசிரமப் பெண்மணிகள் டிரான்ஸ்வாலை நோக்கிப் புறப்பட்டார்கள். அவர்கள் நேட்டால் எல்லையைத் தாண்டும் சமயத்தில் அதிகாரிகள் அவர்களிடம் "அனுமதிச் சீட்டு எங்கே?" என்று கேட்டார்கள்.

போனிக்ஸ் சகோதரிகள் "அனுமதிச் சீட்டு இல்லை" என்றார்கள்.

"உங்கள் பெயர் என்ன?" என்று அதிகாரிகள் கேட்டார்கள். அதற்கும் பதில் சொல்ல அந்தச் சகோதரிகள் மறுத்தார்கள். அந்தப் பெண்மணிகள் காந்தி மகானைச் சேர்ந்த சத்தியாக்கிரஹிகள் என்று அதிகாரிகளுக்குத் தெரியாது. எனவே, அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். கோர்ட்டில் விசாரணையும் நடந்தது. தலைக்கு மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனையடைந்தவர்களில் ஸ்ரீமதி

கஸ்தூரிபாயும் ஒருவர். 1913௵ செப்டம்பர்௴ 23௳ இச்சம்பவம் நடந்தது.

ஆனால் டால்ஸ்டாய் ஆசிரமப் பெண்மணிகளுக்கு அவ்வளவு சுலபத்தில் அதிர்ஷ்டம் கிட்டவில்லை. அவர்கள் சத்தியாக்கிரஹிகள் என்பதை அதிகாரிகள் தெரிந்து கொண்டு கைது செய்யாமல் விட்டார்கள். எனவே அவர்கள் மகாத்மாவின் யோசனைப்படி நியூகாஸிலில் பட்டணத்துக்குச் சென்றார்கள். நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்த இந்தியத் தொழிலாளிகளிடம் மூன்று பவுன் தலைவரி, கலியாண ரத்துத் தீர்ப்பு, ஆசியாக்காரர் தடை முதலிய அநீதிகளைப் பற்றிச் சொல்லி வேலை நிறுத்தம் செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள் மேற்கூறிய அநீதிகளினால் ஏற்கெனவே உள்ளம் கொதித்துக் கொண்டிருந்த இந்தியத் தொழிலாளிகள் மேற்படி சகோதரிகளின் வார்த்தைகளினால் உணர்ச்சி வசப்பட்டு வேலை நிறுத்தம் செய்தார்கள். ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தபடியினால் சுரங்கங்களில் வேலை அடியோடு நின்று விட்டது. இந்த விபரீதத்தைக் கண்டதும் அதிகாரிகள் விழித்துக் கொண்டார்கள். டால்ஸ்டாய் பண்ணைப் பெண்மணிகளைச் சும்மா விட்டது தவறு என்று உணர்ந்து அவர்களைக் கைது செய்தார்கள். அவர்களுக்கும் கோர்ட்டில் மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. 1913-ம் வருஷம் அக்டோபர் 21-ந் தேதி இது நடந்தது.

இவ்விதமாகப் பெண்மணிகள் சிறை புகுந்த சம்பவம் தென்னாப்பிரிக்காவிலிருந்த சகல இந்தியர்களின் உணர்ச்சியையும் எழுப்பி விட்டது. தாய் நாடாகிய இந்தியாவிலும் பெரும் பரபரப்பை உண்டாக்கியது இது வரையில் தென்னாப்பிரிக்கா விஷயமாகச் சிரத்தை காட்டாதவர்கள் எல்லாம் இப்போது சிரத்தை கொண்டார்கள். ஸர் பிரோஸிஷா மேத்தா 1901-ம் வருஷத்தில் காந்திஜியிடம் "நீர் தென்னாப்பிரிக்காவுக்குப் போக வேண்டாம்!" என்று புத்திமதி கூறினார். "இந்தியா சுதந்திரம் அடையாதவரையில் தென்னாப்பிரிக்கா இந்தியருக்கு நாம் என்ன உதவி செய்ய முடியும்?" என்று சொன்னார். இதுவரையில் தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹத்தில் அவர் அநுதாபமே காட்டவில்லை. ஆனால் பெண்கள் சிறை புகுந்த செய்தி அவர் மனதைக் கலக்கிவிட்டது. பம்பாய் டவுன் ஹாலில் நடந்த பொதுக் கூட்டத்தில் அவர் பேசும்போது, "உத்தமிகளான இந்திய சகோதரிகள் கொலைகாரர்களும் திருடர்களும் அடைக்கப்படும் சிறையில் கிடந்து வாடுகிறார்கள் என்பதை எண்ணினால் என் இரத்தம் கொதிக்கிறது!" என்று அலறினார்.



ஸ்ரீமதி வள்ளியம்மை

தண்டனை விதிக்கப்பட்ட எல்லாப் பெண்மணிகளும் மாரிட்ஸ்பர்க் சிறையில் வைக்கப்பட்டார்கள். அவர்கள் சிறையில் பட்ட கஷ்டங்களை விவரித்தால் கல்லும் உருகிவிடும். அவர்களுக்குக் கொடுத்த உணவு வாயில் வைக்க முடியாதது. சிறைக் கைதிகளின் துணி வெளுக்கும் வேலை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. சிறை புகுந்த பெண்களில் அநேகர் வெளியில் வரும்போது எலும்பும் தோலுமாக வந்தார்கள்.

முதற் படையில் சேர்ந்த பெண்மணிகளைத் தவிர வேறு சிலரும் பிற்பாடு சேர்ந்தார்கள் இவர்களில் குமாரி வள்ளியம்மை பதினாறு பிராயத்து இளம் பெண். மூன்று மாதம் சிறையிலிருந்துவிட்டு வெளிவந்தபோது வள்ளியம்மை மிக மெலிந்து எலும்புக் கூடாகக் காட்சி தந்தாள். காந்தி மகாத்மா அந்த வீரத் தமிழ்ப் பெண்ணைப் பார்ப்பதற்காக வந்தார்.

வள்ளியம்மா! நீ சிறை சென்றது பற்றி வருத்தப்படுகிறாயா?" என்று மகாத்மா கேட்டார்.

"வருத்தமா? மறுபடியும் என்னைக் கைது செய்தால் சிறைக்குப் போகத் தயார்!" என்றாள் வள்ளியம்மாள்.

"ஒருவேளை உன் உயிருக்கு ஆபத்து வரலாம் என்பதை யோசித்துப் பார்த்தாயா?" என்று காந்திஜி கேட்டார்.

"வந்தால் வரட்டும். தாய்நாட்டின் மானத்தைக் காப்பதற்காக உயிர் தியாகம் செய்வது பெரிய பாக்கிய

"அல்லவா?" என்றாள் அந்தப் பதினாறு பிராயத்துப் பெண்.

இந்தச் சம்பாஷணை நடந்த சில நாளைக்கெல்லாம் வள்ளியம்மை இந்த மண்ணுலகை நீத்துச் சென்றாள். வள்ளியம்மையின் மகா தியாகத்தைப் பற்றியும் பொதுவாக இந்திய சகோதரிகளின் சிறைவாசத்தைப் பற்றியும் மகாத்மா காந்தி எழுதியிருப்பதாவது :—

"வள்ளியம்மையின் உடல் மறைந்துவிட்டது. ஆனால் வள்ளியம்மையின் பெயர் சிரஞ்சீவித்வம் பெற்றிருக்கிறது. வள்ளியம்மையின் ஞாபகம் இன்றைக்கும் அநேக இருதயங்களில் குடிகொண்டிருக்கிறது. இந்தியா தேசம் உள்ள அளவும் தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹத்தின் சரித்திரம் மறக்கப்பட மாட்டாது. தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹ சரித்திரம் உள்ளவரையில் வள்ளியம்மையின் புகழும் நிலை பெற்றிருக்கும்.

"தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹத்தில் ஈடுபட்ட சகோதரிகளின் தியாகத்தை எவ்வளவு பாராட்டினாலும் அது மிகைப்படுத்துவதாகாது. அந்தச் சகோதரிகளில் பலர் தாய்நாடாகிய இந்தியாவைப் பார்த்ததேயில்லை. அவர்களுக்கு இந்தியா என்பது ஒரு பெயர்தான். அவர்கள் பத்திரிகை படிப்பவர்களும் அல்ல. அவர்களுடைய தேச பக்தி நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இந்தியாவின் கௌரவத்துக்குப் பங்கம் இழைக்கப்படுகிறது என்பதை மட்டும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அந்த கௌரவத்தை நிலை நாட்டுவதற்காக எத்தகைய தியாகத்தையும் செய்ய முன் வந்தார்கள். அவர்கள் சிறை சென்றது மகா பரிசுத்தமான தியாகமாகும். அத்தகைய தூய்மையான தியாகமே கடவுளுக்கு உகந்தது. எனவே, அப்படிப்பட்ட தியாகம் ஒரு நாளும் வீண்போகாது. தென்னாப்பிரிக்கா சகோதரிகளின் தியாகம் சிறந்த பலன் அளித்தது என்பதில் சந்தேகமில்லை."

இவ்விதம் மகாத்மா காந்தி நம் தமிழ்நாட்டுச் சகோதரிகளின் தியாகத்தை வியந்து பாராட்டி எழுதியிருக்கிறார். அச் சகோதரிகளின் தியாகம் எந்த முறையில் பலன் அளித்தது என்பதை அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

வாக்கு மகிமை

ஒரு தடவை பீஹார் மாகாணத்துக் காங்கிரஸ் தலைவர் ஒருவர் காந்திஜியைக் காணச் சென்றார். காந்திஜி பேச்சு வாக்கில், "நாம் இப்பொழுது சத்தியாக்கிரஹம் ஆரம்பித்தால் பொது மக்கள் அதற்குத் தயாராயிருப்பார்களா?" என்று கேட்டார்.

"இப்பொழுது ஜனங்களிடம் அவ்வளவு உற்சாகம் இருப்பதாகத் தெரியவில்லையே!" என்றார் அந்தத் தலைவர்.

"அப்படியா!" என்று வியப்புடன் கேட்டார் காந்திஜி.

"ஆமாம். ஆனால்........." என்று தயங்கினார் தலைவர்.

"ஆனால் என்ன?" என்று கேட்டார் காந்திஜி.

"ஒரு கதை சொல்வது உண்டு. ஒரு சமயம் விஷ்ணு பகவானைப் பார்ப்பதற்காக நாரதர் போயிருந்தாராம். பகவான் அவரைப் பார்த்து 'என் நாரதரே! இன்று மழை பெய்யுமா?' என்று கேட்டாராம். 'இன்று மழை வராது' என்று பதில் அளித்தார் நாரதர். பிறகு சிறிது நேரம் வரை பகவானும் நாரதரும் பேசிக்கொண்டிருந்தார்கள். நாரதர் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்ட போது, நன்றாகப் போர்வையையும் இழுத்துப் போர்த்திக்கொண்டு குடையையும் பிரித்துக்கொண்டு புறப்பட்டார். அதைப் பார்த்த விஷ்ணு பகவான் அவரைக் கூப்பிட்டு 'என் நாரதரே! நீர் இப்பொழுதுதானே மழை வராது என்று திட்டமாகச் சொன்னீர்கள்! அப்புறம் எதற்காக இப்படிப் போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு, குடையையும் தயாராய்ப் பிரித்துப் பிடித்துக்கொண்டு தற்காப்புடன் புறப்படுகிறீர்கள்?' என்று கேட்டார். 'நான் சொன்னது என்னவோ வாஸ்தவம்தான். ஜோதிஷ சாஸ்திரப்படி கட்டாயம் மழை வருவதற்கில்லை. ஆனால் உங்கள் சித்தம் எப்படியோ? நீங்கள் வேண்டுமென்று மழையை வரவழைத்து விட்டால்? அதனால்தான் எதற்கும் முன் ஜாக்கிரதையாகக் குடையைப் பிடித்துக்கொண்டு புறப்பட்டேன்' என்றார் நாரதர்" என்று அந்தக் காங்கிரஸ் தலைவர் கதையை முடித்தார்.

காந்திஜி இதைக் கேட்டுவிட்டு, "இந்தக் கதையை இங்கே சொல்ல வேண்டிய அவசியம் என்ன?" என்று கேட்டார்.

"பொதுமக்கள் இப்பொழுது சத்தியாக்கிரகத்துக்குத் தயாராயில்லை என்று எனக்குத் தெரிகிறது. அதனை சொன்னேன். ஆனால் தங்கள் சித்தம் எப்படியோ? தாங்கள் சத்தியாக்கிரஹம் செய்துதான் ஆக வேண்டும் என்று சொல்லி விட்டால் பொது மக்கள் பேசாமல் உட்கார்ந்திருப்பார்களா? உடனே தங்களைத் தயாராக்கிக் கொண்டு விடுவார்கள்!" என்றார் அந்தத் தலைவர்.

"என்னை ஒரு நொடியில் விஷ்ணு பகவான் ஆக்கி விட்டீர்களே! பேஷ், பேஷ்!" என்று சொல்லிச் சிரித்தார் காந்திஜி.

தூரத்துப் பச்சை

பி. ராமமூர்த்தி

நான் கல்யாண் ரயில்வே ஸ்டேஷனில் காத்துக் கொண்டிருந்தேன். மாலை நேரம்; மார்கழி மாதம்; நல்ல குளிர்; அத்துடன் மழை வேறு பெய்ய ஆரம்பித்து விட்டது.

ஸ்டேஷன் என்னவோ முக்கியமானது தான். ஆயினும் அன்று கூட்டம் இல்லை. அங்கும் இங்குமாகச் சிலர் மட்டுமே குளிருக்கும் காற்றுக்கும் மழைக்கும் பயந்து முடங்கிக் கொண்டிருந்தனர்.

நான் இரண்டாம் வகுப்புப் பிரயாணிகள் தங்குமிடத்தில் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து எதிரில் இருந்த மேஜைமேல் காலைத் தூக்கிப் போட்டுக்கொண்டு பம்பாயிலிருந்து வரும் வண்டிக்காகக் காத்திருந்தேன்.

அப்போது ஒரு கூலி தன் தலையின்மேல் இரண்டு பெட்டிகள், அக்குளில் ஒரு பெரிய படுக்கை, இரண்டு கைகளிலும் இரு தூக்குக் கூடைகள்—இவ்வளவும் எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். வெகு லாகவமாய் ஒவ்வொன்றாய்க் கீழே வைத்து அடுக்கினான்.

சரி, நமது வண்டி வரும் வரையில் பேச்சுத் துணைக்கும், என்னையே நோக்கிப் படையெடுத்துச் சலித்துப்போன மூட்டைப் பூச்சிகளுக்கு இரண்டாவது முனையாகவும் ஓர் ஆத்மா வருகிறதே என்று சந்தோஷப்பட்டு வரும் ஆளை எதிர்பார்த்தேன்.

என்ன ஏமாற்றம்! நான் எதிர்பார்த்தது ஒரு கனவானை; வந்தது ஒரு வாலிபப் பெண்! நான் திடுக்கிட்டுப் போய் நாற்காலியை விட்டுத் துள்ளி எழுந்தேன்.

அந்தப் பெண் சிரித்தாள். "பரவாயில்லை; நீங்கள் உட்கார்ந்திருங்கள். நான் வெளியே போய்ப் பிளாட்பாரத்தில் இருக்கிறேன்" என்று மராட்டி பாஷையில் சொன்னாள்.

நான் பதில் சொல்ல வாயெடுத்தேன். அதற்கு அவள் காத்திராமல் பரபரவென்று பிளாட்பாரத்துக்குப் போய் விட்டாள்.

என் சிந்தனை அவளைச் சுற்றிக் கொண்டது. வாலிபப் பெண். அழகென்றால் சாதாரணமான அழகில்லை; தேவ கன்னிகை மாதிரி இருந்தாள்.

ஆஹா! புராணக் கதைகளிலே அப்ஸரஸ்களைப் பற்றியும், சரித்திரத்திலே நூர்ஜஹான், சம்யுக்தை இன்னும் பல பிரபல அழகிகளின் சாகசத்தையும் சக்தியையும் பற்றிப் படித்திருக்கிறோமே! இதோ, என் கண் முன்னே தோன்றிய இந்தப் பெண் அவர்களைவிட எந்தவிதத்தில் தாழ்ந்தவள்? இவளுடைய அழகுக்கு எத்தனை பேர் போட்டியிட்டிருப்பார்கள்? இவளைக் கல்யாணம் செய்து கொண்டவனே பாக்கியசாலி! அவன் வாழ்க்கையில் வேறு என்ன குறையிருந்தாலும் இவளை அடைந்த ஒரு பாக்கியமே போதுமே!

இப்படியாக நான் அவளைப் பற்றியும், அவளை அடைந்த புண்ணியசாலியைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தபோது தான் அந்தப் பாக்கியவான் என் கண்முன் தோன்றினான்.

அந்தப் பாக்கியசாலியைக் கண்டதும் என்னை இரண்டாவது முறையாகத் தூக்கிப் போட்டது. அதற்குக் காரணம் அந்த மகா புருஷன் எனக்கு முன்பே பரிச்சயமான ஓர் ஆசாமி என்பதே!

2

எதிர்பாராமல் சந்தித்த நானும் என் நண்பன் ருக்கர்ணியும் பரஸ்பரம் கைகுலுக்கிக் கொண்டோம். சில வருஷங்களுக்கு முன்பு நாங்கள் இருவரும் புனாவில் பல தடவைகள் சந்தித்திருக்கிறோம்; பேசிப் பழகியிருக்கிறோம். அவன் ஒரு பெரிய ஜவுளிக் கடை வைத்திருந்தான். நான் பம்பாயில் ஒரு மில்லின் ஊர் சுற்றும் ஏஜெண்டாக இருந்தேன். வியாபாரப் பழக்கம்.

ஏதேதோ பேசிவிட்டு நான் கடைசியில் சொன்னேன்:

"ருக்கர்ணி, சற்றுமுன் உள்ளே நுழையப் பார்த்த ஸ்திரீயா உன் மனைவி? அப்படியானால் உள்ளே வந்து உட்காரச் சொல்லேன்; நான் வெளியே போய் விடுகிறேன்."

அதற்கு அவன், "அவளுக்கென்ன? எல்லாம் வெளியேதான் கிடக்கட்டும்!" என்று அலட்சியமாய்ச் சொன்னான்.

அவன் மனைவியைப் பற்றிப் பேசுவதில் அவனுக்கு விருப்பம் இல்லையோ என்று சந்தேகித்த நான் 'சட்'டென்று பேச்சை வேறு புறம் திருப்பினேன்.

"இந்த மழையினால் எவ்வளவு உபத்திரவம்! உலகத்தில் விஞ்ஞானிகள் எத்தனையோ புதுமைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்களே! அவசியமில்லாத மழையை நிறுத்த ஏதாவது ஒரு உபாயம் கண்டு பிடிக்கக் கூடாதா?" என்றேன்.

"யார் கண்டது? அப்படியும் ஏதாவது கண்டு பிடித்தாலும் அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அந்தமாதிரி நூதன விஷயத்தை என் மாமனாரைப் போன்ற யாராவது கண்டுபிடித்தாலும் கண்டுபிடிப்பார்கள்!" என்றான்.

"ஏன், உங்கள் மாமனார் பெரிய விஞ்ஞானியோ?"

"இல்லை, இல்லை. உலகத்தில் இருக்கும் புத்திசாலிகள் எல்லாரைக் காட்டிலும் அவர் சிறந்த புத்திசாலியாயிருந்தார். அப்படியென்றுதான் அவர் எண்ணம்! அவர் கண்டு பிடித்த ஒரு புதுமையின் பலனாய்த்தான் நான் இதோ, இந்தச் சனியனைக் கட்டிக் கொண்டு மாரடிக்கிறேன்!" என்று தன் மனைவியைக் குறிப்பிட்டான் அவன்.

நான் ஒன்றும் பேசவில்லை. நான் எந்த விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டாம் என்று எண்ணினேனோ, அதிலேயே வந்து தொடருகிறதே பேச்சு!

குல்கர்னி மேலும் சொன்னான்:

"என் மாமனார் நான்கு வருஷங்களுக்கு முன்பு எனக்கு மாமாவாகத்தான் இருந்தார். மாமா என்றால் கம்ச மாமாவைப் போல் கிராதக நெஞ்சு படைத்த ஒரு மனுஷன். சுமார் இரண்டு லக்ஷ ரூபாய் சம்பாதித்தார். அவருக்கு ஒரே பெண். இதோ வெளியே உட்கார்ந்து ஒட்டுக் கேட்டுக்கொண்டிருக்கிறாளே. அந்த ஸ்ரீமதி சுசீலா தேவிதான். தன்னைப் பற்றி இளக்காரமாக வேறு புருஷன் ஒருவனிடம் பேசுகிறேனே என்று அவள் கறுவிக் கொண்டிருப்பாள். அப்படியாவது அவளுக்குப் புத்தி கித்தி ஏதாவது வருகிறதா என்று பார்ப்போம்!

"என் தாயாருடன் கூடப் பிறந்தவர் அவளுடைய தகப்பனார். அவருக்கு உலகத்தைச் சீர்திருத்துவதில் ஆசை அதிகம். தமது பணத்தையெல்லாம் போட்டு ஒரு பத்திரிகை ஆரம்பித்தார். தம்முடைய புதிய புதிய கொள்கைகளையும், அபிப்பிராயங்களையும் அதில் வெளியிட்டார். அந்தக் கொள்கைகளை உலகத்துக்கு எடுத்துச் சொல்லுவதோடு நின்றிருந்தால் பரவாயில்லை; தமது சொந்த வாழ்க்கையில்கூட அவற்றைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தார். அதன் பலன் என் தலையில் விபரீதமாய் வந்து விடிந்தது!

"கேளுங்கள்! தமது பெண் சுசீலாவை எனக்காவது என் தமையன் ஆத்மாராமுக்காவது கல்யாணம் செய்து கொடுப்பதாகவும், தமது சொத்தை மற்றவனுக்கு எழுதி வைப்பதாகவும் அவர் சொன்னார். சுசீலா பெரிய தோரணையில் நாகரிகமாக வளர்ந்தவளாம்; அவளைக் கல்யாணம் செய்து கொள்பவனுக்கே தமது சொத்தையும் கொடுத்தால் அது தமது கொள்கைக்கு ஒவ்வாதாம். அவ்வளவு அழகியவளை அடைய ஆசைப்படுகின்ற ஒருவன், ஒரு குறைவுமில்லாமல் அவளை வைத்துப் போஷிக்கத் தன் முயற்சியால் சம்பாதிக்க வேண்டுமாம்—இப்படியாக அவர் பல நிபந்தனைகளைப் போட்டார்.

"அந்தக் காலத்தில் சுசீலாவை நான் அடிக்கடி பார்த்ததில்லை. ஒருதரம் இரண்டு தரம் காலேஜில் லீவு விட்டதும் நாகபுரி போயிருக்கிறேன். அப்பொழுது நான் இவளுடைய அழகிலே மயங்கிப் போனேன். அவளுடைய அழகு மட்டும்தான் என் வாலிபக் கண்களுக்குத் தெரிந்தது. அவள் குணமும் மனப்போக்கும் தெரியவில்லை. தூரத்துப்பச்சை கண்ணுக்கு அழகு என்பார்களே, அதுபோல என் மாமாவின் பெண் புனாவிலிருந்த என் கண்களுக்கு ரம்பையாயிருந்தாள்.

"என் கூடப் பிறந்த ஆத்மாராமுக்கு மாமாவைக் கண்டாலே பிடிக்காது. அவருடைய கொள்கைகளை நெருப்பிலே போட்டுப் பொசுக்கவேண்டும் என்று தைரியமாய்ச் சொல்லுவான். சுசீலாவின் கல்யாண விஷயத்தில் அவனுடைய அபிப்பிராயத்தைக் கேட்டதும், அவன் தனக்குக் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டான். ஆத்மாராம் புத்திசாலி யென்பது எனக்கு இப்போதுதான் தெரிகிறது. மாமா இந்தச் சுசீலாவை எனக்குக் கல்யாணம் செய்து வைத்தார். அவன் பெயருக்குச் சொத்து பூராவும் எழுதி வைத்தார். அவன் இப்போது ஜோரா யிருக்கிறான். பெரிய பங்களா, கார், ஐரோப்பிய பிரயாணம் எல்லாம் ஒரே மோக்ஷமாக இருக்கிறான்!

"'பார்யா ரூபவதி சத்ரு' என்பார்களே, அது என் விஷயத்தில் நூற்றுக்கு நூறு பங்கு வாஸ்தவம். சுசீலா செல்வமாய் வளர்ந்தவள் என்று சொன்னேன் அல்லவா?

அதன் பலனும் அவளுக்கு முரட்டுப்பிடிவாதமும் துணிச்சலும் அதிகம். சமையல் செய்வது என்றால் என்ன என்று கேட்பாள். அவள் என்றாவது மனமிரங்கி டீ போட்டால் வேப்பிலைக் கஷாயம் மாதிரி இருக்கும். அதிகப் படிப்பும் கிடையாது. அசட்டுத்தனம் அதிகம். மாதத்துக்கு ஒரு வைரநகை வேண்டும். வாரத்துக்கு ஒரு பட்டுப் புடவை எடுக்கவேண்டும் வருஷத்துக்குக் குறைந்தபட்சம் ஆறு தடவையாவது வெளியூர் போகவேண்டும். இன்னும் செல்லமாய் வளர்ந்த ஒரு பெண்ணுக்கு எவ்வளவு கெட்ட குணங்கள் இருக்கவேண்டுமோ, அவ்வளவும் இருக்கின்றன! அப்பப்பா, அவளோடு நான் படும் அவஸ்தை இருக்கிறதே......!"

இந்த இடத்தில் அந்தப் பெண் எங்கள் அறையை எட்டிப் பார்த்தாள். "எல்லா ராமாயணமும் ஆகிவிட்டது அல்லவா?" என்று கேட்டாள்.

குல்கர்னி கடுகடுப்பான குரலில் "சுசீ, உன் வேலையை நீ பார்! என் ஜோலிக்கு வராதே!" என்றான்.

இதற்குள் தடதடவென்று புனே போகும் வண்டி வந்து நின்றது. கூலி மறுபடியும் வந்து என் நண்பனுடைய சாமான்களை வண்டியில் ஏற்றினான். குல்கர்னி என்னிடம் விடை பெற்றுக் கொண்டான்.

3

எனக்கு இன்னும் வண்டி வரவில்லை. மணியோ ஒன்பதடித்தது. ஸ்டேஷனில் கிடைத்த பூரியையும் பாஜியையும் விழுங்கி விட்டு மறுபடியும் பழைய இடத்துக்கு வந்தேன்.

வானம் சிறிது வெளுத்தது. மழை நின்றது; மின்னல் மறைந்தது; ஓரிரண்டு விண் மீன்கள்கூடத் தென்பட்டன.

என்ன ஆச்சரியம்! என்ன ஏமாற்றம்!

வாழ்க்கையில் சுகம் என்பது எங்கிருக்கிறது? எதை அடைந்தால் சுகம் கிடைக்கும்? அழகினால் சுகம் கிடைக்கும் என்று தானே அழகை அடையாத யாரும் எண்ணுகிறார்கள்? அது எவ்வளவு தூரம் உண்மை என்பது இப்போது தெரிகிறது அல்லவா?

இந்தக் குல்கர்னியின் வாழ்க்கையில் ஏன் இவ்வளவு குறை? அழகான மனைவி; நல்ல வரும்படியுள்ள வியாபாரம். வியாதி வெக்கை ஏதும் இல்லை. வேறு மனிதர்களால் பிடுங்கலும் கிடையாது. அப்படி இருந்தும் ஏன் அவனுடைய இவ்வாழ்க்கை இவ்வளவு தூரம் அவனுக்கு வெறுப்பை ஊட்டுகிறது?

இப்படியாக என் மனம் அவர்களிருவரையும் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் எனக்கு வேண்டிய வண்டி வந்தது. கைப்பெட்டியை ஒரு கையிலும் படுக்கையை இன்னொரு கையிலும் எடுத்துக்கொண்டு நான் இடம் பிடிக்க அலைந்தேன்.

நாலைந்து பெட்டிகள் தேடிய பிறகு ஒரு வண்டியில் ஏறினேன். வண்டியின் எல்லா ஜன்னல்களும் சாத்தப்பட்டிருந்தன. ஒரு விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது: வண்டியிலுள்ள எல்லா இடங்களும் காலியாயிருந்தன, ஒரு சீட்டைத் தவிர. அந்த இடத்தில் மட்டும் தலையிலிருந்து கால்வரை சால்வை ஒன்றைப் போர்த்திக் கொண்டு ஓர் உருவம் படுத்திருந்தது.

நான் பெட்டியைத் தலையண்டை வைத்து விட்டுப் படுக்கையை விரித்துப் படுத்தேன்.

எதிரே படுத்திருந்த உருவம் முனகிக் கொண்டே என் பக்கம



இந்தியாவில் காந்தி மகான் இரண்டு ஆசிரமங்களை ஸ்தாபித்தார். ஒன்று ஆமதாபாத்துக்கருகில் சபர்மதி ஆசிரமம். படத்தில் காண்பது சபர்மதி ஆசிரமத்தைச் சேர்ந்த பிரார்த்தனை நடத்தும் இடம். தூரத்தில் தெரிவது சபர்மதி பாலம்.

திரும்பியது. அந்த முகத்தைப் பார்த்ததும் எனக்கு மூன்றும் முறையாக காலு முழ உயரம் தூக்கிப் போட்டது!

இது என்ன அதிசயம்! இவ்வளவு நேரம் என்னுடன் பேசி விட்டுப் புனாவுக்கு வண்டியேறிய அந்தக் குல்கர்னி எப்படி இந்த வண்டியில் ஏறிக் கொண்டான்? அந்தப் பெண் எங்கே?



வர்தாவுக்கு அருகிலுள்ள சேவாக்கிராமத்தில் காந்தி மகான் வசித்து வேலை செய்த குடிசையின் உட்புறம். மூக்காலியின்மீது அரிக்கேன் விளக்கைக் கவனியுங்கள்.

நான் குழம்பிய மனத்துடன், "நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்? இப்போதுதானே புனாவுக்கு வண்டி ஏறினீர்கள்?" என்று கேட்டேன்.

"இல்லையே! நான் நேரே பம்பாயிலிருந்தல்லவா வருகிறேன்!" என்றான் அவன்.

எனக்கு ஆச்சரியம் அதிகமாய்ப் போய்விட்டது. "நீங்கள் குல்கர்னி தானே?" என்று கேட்டேன்.

"ஆமாம்."

"உங்கள் மனைவி எங்கே?"

"மனைவியா! ...... எனக்கு இன்னும் கல்யாணமே ஆகவில்லையே, ஸார்!"

"............!"

"ஓஹோ! நீங்கள் என் தம்பியைச் சொல்கிறீர்கள் போல் இருக்கிறது!"

"இல்லை, இல்லை; உங்களையேதான் சொல்கிறேன். நீங்களும் நானும் இத்தனை நேரம் ஸ்டேஷனில் பேசிக் கொண்டிருக்கவில்லையா?"

"இருக்கலாம்; நீங்கள் என் தம்பியைத்தான் சொல்லுகிறீர்கள்! நானும் அவனும் இரட்டைப் பிள்ளைகள். ஆள் வித்தியாசம் தெரியாது. என் பெயர் ஆத்மாராம் குல்கர்னி; அவன் பெயர் தத்தாத்ரேய குல்கர்னி!"

அப்பாடா!...அப்போதுதான் எனக்குப் பிரமை நீங்கியது!

படுக்கையை விரித்துத் தட்டிப் போட்டு உட்கார்ந்தேன்.

எனக்கு எதிர்ப்புறம் படுத்திருந்த அந்தக் குல்கர்னியும் சால்வையை வீசி எறிந்து விட்டு எழுந்து உட்கார்ந்து, "நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான்.

"நான் தேவலாலிக்குப் போகிறேன். உங்கள் தம்பியுடன் இவ்வளவு நேரம் கல்யாணில் பேசிக் கொண்டிருந்தேன். அவரை முன்னுடியே தெரியும். தனக்கு ஒரு அண்ணன் இருப்பதாகச் சொன்னாரே தவிர, தானும் தன் தமையனும் இரட்டைப் பிள்ளைகள் என்று அவர் சொல்லவில்லை!"

"அப்புறம்?" என்று ஒரு சென்வினைப் போட்டுவிட்டு, அவன் தன் ஜேபியிலிருந்து சிகரெட் ஒன்றை எடுத்துக் கொளுத்தினான்.

சிகரெட்டை ஒருதரம் கம்பீரமாய் இழுத்து ஒய்யாரமாய் உதட்டைக் குவித்துச் சக்கரவளையம்போல் புகையை வெளியே விட்டுவிட்டு என்னை நோக்கி, மறுபடியும் "அப்புறம்?" என்று கேட்டான்.

எனக்குத் தர்ம சங்கடமாகி விட்டது. அந்தக் குல்கர்னியோ என்னிடம் தனது சொந்த வாழ்க்கையின் விவரங்களை நான் கேட்காதபோதே படபடவென்று சொல்லி விட்டான். அதை எப்படி முன்பின் பழக்கமில்லாத இவனிடம் சொல்வது?

என் தயக்கத்தைப் பார்த்த அவன் மேலும் சொன்னான்:

"உங்களிடம் என்ன சொல்லியிருப்பான் என் தம்பி என்று எனக்குத் தெரியும்! இப்போதெல்லாம் அவனுக்குக் கொஞ்சம் புத்தி ஸ்வாதீனத்தில் இல்லை போல்

தோன்றுகிறது. ஏனென்றால் எனக்குத் தெரிந்த நண்பர்கள் சிலரிடம் கூட ஒரே மாதிரியான விஷயத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லி யிருக்கிறான்......நமக்கு எங்கள் மாமா பெரிய அநியாயம் செய்து விட்டதாகவும், அவர் பெண் சசிலாவைத் தெரியாத்தனமாகக் கல்யாணம் செய்து கொண்டு விட்டதாகவும் சொன்னானாம்! ஏன் உங்களிடம் கூட......"

நான் மௌனமாகத் தலையை அசைத்தேன்.

"இதைக் கேளுங்கள், ஸார்! அந்தக் காலத்தில் நானும் எங்கள் மாமாவைத் தூஷித்தது வாஸ்தவம். ஆனால் இப்போது தான் அவருடைய தீர்க்கதரிசனம் எனக்கு விளங்குகிறது. அவளுடைய பெண் சசிலாவை நீங்களும் கேவலமாகத்தான் நினைத் திருப்பீர்கள்."

"ஆம்; உங்கள் மாமாவின் பெண்ணை நான் பார்த்தேன். இப்போதுதான் கல்யாண் ஸ்டேஷனில் கண்டேன்."

"பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அப்ஸரஸ் மாதிரி இருப்பாள். அவளைக் கொடுத்துத் தம் பணத்தையும் கொடுத்தால் என் தம்பி சொத்தை விரயம் செய்துவிட்டுத் தம் பெண்ணையும் சரியான நிலையில் வைத்துக் கொள்ளமாட்டான் என்று என் மாமா நினைத்தார். அதில் என்ன தவறு இருக்கிறது? தம்முடைய பெண்ணை அடையும் ஒருவன் சுயமாய்ச் சம்பாதித்து அவளைப் போஷித்து அவளுடைய அன்பைப் பெற வேண்டும் என்று எண்ணினார்.

"அவளுடைய அருமை எனக்கு அந்த நாட்களில் தெரியவில்லை; என் தம்பிக்கு இந்த நாட்களில் தெரியவில்லை. சதா அவளைக் கொடுமைப் படுத்துகிறானும்; தூஷிக்கிறானும். என் மாமா எவ்வளவு செல்வமாக அவளை வளர்த்தார் என்பதை அவன் அறியவில்லை. என் துரதிர்ஷ்டம், என் மாமா இருந்தபோது முட்டாள்தனமாகப் பணமே பெரிதென்று அவர் சொத்தை அடைந்தேன். பணத்திலே என்ன சுகம் இருக்கிறது? பணம் நெருப்பைப் போன்றது. நெருப்பினால் நமக்கு உபயோகம் இருக்கிறது. ஆனால் அது கொஞ்சமாகவும் இருந்து நம்மைப் பீடிக்காமலும் இருந்தால்தான் க்ஷேமம். தீ பெரிதாகிவிட்டால் அதனால் அழிவு நிச்சயம். அதுபோல அதிகப் பணம் கவலையைத்தான் தருகிறது. சொத்தை கட்டிக் காப்பாற்ற வேண்டுமே என்கிற கவலைதான் பெரிதா யிருக்கிறது. இந்த மாதிரி தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டு தவிக்கிறேன்!

"என் தம்பிக்கென்ன? அப்ஸரஸ்மாதிரி ஒரு மனைவி. சுயமாய் நல்ல சம்பாத்தியம். பெண்டாட்டிக்கு மாதத்துக்கு ஒரு நகை. வாரத்துக்கு ஒரு பட்டுப் புடவை. இரண்டு மாதத்துக்கு ஒரு தடவை ஜோராய் உல்லாசப் பிரயாணம்! கொடுத்து வைத்தவன் அனுபவிக்கிறான். லக்ஷ லக்ஷமாய் அள்ளிக் கொடுத்தாலும் சசிலாவைப் போல் ஒரு பெண் கிடைப்பது அபூர்வம். அவளைக் கல்யாணம் செய்துகொண்ட அவனே பாக்கியவான்! இவ்வளவு பணம் இருக்கிறதே, எனக்கு வாழ்க்கையில் ஒரு சந்தோஷம் உண்டா.........?"

குல்கர்ணி பேசி முடித்து விட்டான். அவனுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு நான் ஆச்சரியமடைந்தேன் இது என்ன விசித்திரம்! ஒரே வயிற்றில், ஒரே சமயத்தில் பிறந்த இரு பிள்ளைகளின் உள்ளத்திலே இவ்வளவு பேதமா!

குல்கர்ணி தன்னுடைய பேச்சில் தானே லயித்து விட்டான் மறுபடியும் ஒரு சிகரெட் எடுத்துப் பற்ற வைத்தான். தன் கற்பனையைப் பறக்க விட்டான்.

நான், "இறந்த காலம் மறைந்த காலம். அதில் நாம் வாழ்ந்து விட்டோம் இனி வருங்காலம்தான் நாம் வாழப் போகும் காலம். அதைப் பற்றித்தான் யோசிக்க வேண்டும்!" என்றேன்.

அவனும், "ஆமாம். நீங்கள் சொல்வது வாஸ்தவம்!" என்று ஆமோதித்துவிட்டுப் படுத்துக் கொண்டான்.

நான் விளக்கை அணைத்தேன். வண்டி, 'கட கடா, கட கடா' என்று நள்ளிரவில் ஓடிக்கொண்டிருந்தது. வெளியே வானம் குமுறிக் கொண்டிருந்தது.

அந்தக் கருக்கிருட்டைக் கிழிக்கும் எஞ்சின் விளக்கின் பிரகாசத்தைப் போல என் நெஞ்சுக் குள்ளும் ஓர் உண்மை சுடர் விட்டுப் பிரகாசித்தது.

இந்த உலகில் இன்பம் என்பது வெளியே எங்கும் இல்லை. நமது உள்ளத்தில் ஊறும் ஊற்றுதான் அது. ஆயினும் இந்த மனமென்னும் குரங்கைக் கட்டிப் போடத் திருப்தி என்ற கயிறு எங்கே கிடைக்கிறது? அதைச் சபலம் என்னும் கோல் அல்லவா எப்போதும் ஆட்டிவைத்துக் கொண்டே இருக்கிறது!

புதல்வர் காந்தி

ரா. வீழிநாதன்

"அப்பா, நீ நினைப்பதுபோல் நான் மணம் செய்துகொள்வதற்காக வரவில்லை. என் தந்தையின் பொருட்டு உன் பெண்ணை யாசிக்கவே வந்தேன். உன்னுடைய நிபந்தனையின்படி ஹஸ்தினாபுர ராஜ்யத்தைத் தியாகம்செய்ய நான் சித்தமாயிருக்கிறேன். உன் பெண் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே அது கிடைக்கட்டும். உனக்கு நம்பிக்கை உண்டாவதற்காக இந்தச் சூரிய சந்திரர்களின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன் — எனக்கு இந்த ராஜ்யமே வேண்டாம்; சொன்ன சொல் பிறழ்ந்தால் எனக்கு யமவாதனை கிட்டட்டும்" என்று பிரதிக்ஞை செய்தான் தேவவிரதன்.

"ஆனால் இவருடைய வாரிசுகள், நம் பேரப் பிள்ளைகளுடன் சாம்ராஜ்யத்துக்காகச் சண்டைக்கு வரலாம் அல்லவா?" என்ற சந்தேகத்தை எழுப்பினாள், அவர்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த வலைஞர் தலைவனின் மனைவி.

வலைஞர் தலைவனுக்கு அவள் சொல்வது சரியென்றே பட்டது. "இதற்கு என்ன வழி சொல்கிறீர்கள்?" என்று கேட்பது போல அவன் தேவவிரதனைப் பார்த்து விழித்தான்.

"நான் கல்யாணம் செய்துகொண்டால் தானே நீங்கள் நினைக்கும் கஷ்டங்கள் எல்லாம் ஏற்படக்கூடும்' நான் கல்யாணமே செய்து கொள்வதில்லை என்று ஆண்டவன் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். இப்பொழுது உங்களுக்குச் சம்மதந்தானே?" என்று கேட்டான் தேவவிரதன்.

வலைஞர் தலைவன் வேறு வழியின்றித் தேவ விரதனின் தந்தைக்குத் தன் மகளை மணம் புரிந்து வைக்கச் சம்மதித்தான்.

தேவ விரதன் செய்த பயங்கரப் பிரதிக்ஞையின் காரணமாகவே அவனுக்கு 'பீஷ்மன்' என்ற நாமதேயம் ஏற்பட்டது.

இப்படியாக மகாபாரதக் கதை, தந்தையின் சுகத்தையே தன் சுகமாக பாவிக்கும் உத்தமப் புதல்வனாகவும், உயர் நோக்கம் கொண்ட மகா புருஷனாகவும், பிரும்மசரியத்தையும் சொன்ன சொல்லையும் காப்பாற்றும் விஷயத்தில் இணையற்ற வீரனாகவும் பீஷ்மரை நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது; கடமை, உண்மை, அன்பு இவற்றின் உருவமாகப் பீஷ்மரைச் சித்திரிக்கிறது.

அக்காலத்துப் பீஷ்மரின் பரம்பரையில் வந்தவர்தான் இக்காலத்துக் காந்திஜி.

தந்தை காலமான சிறிது காலத்துக்குப் பின், பாரிஸ்டர் படிப்புக்காகக் காந்திஜி மேல் நாடு செல்வதென்று முடிவாயிற்று. ஆனால் தாயாருக்குத் தன் தனயனை மேல் நாட்டுக்கு அனுப்பச் சிறிதும் மனமில்லை. ஒரு புறம் தாய்ப் பாசம் குறுக்கிட்டது. இன்னொரு புறம் மேல் நாடு போய் வந்திருந்தவர்களைப் பற்றி விதவிதமான செய்திகள் அவள் காதில் விழுந்திருந்தன. ஆகவே, அவள் காந்திஜியிடம், "வேண்டாம், குழந்தாய்! நீ அக்கரைச் சீமைக்குப் போய் ஒன்றும் படிக்க வேண்டாம். இங்கே படித்த வரை போதும்!" என்றாள்.

"ஏன் அம்மா, அப்படிச் சொல்லுகிறாய்?" என்று கேட்டார் காந்திஜி.

"அக்கரைச் சீமைக்குப் போய் வருகிறவர்களுக் கெல்லாம் சாராயம் குடிக்கும் கெட்ட பழக்கம் ஏற்பட்டு விடுகிறதாம்!"

இந்த மூதாட்டி காந்தி மகாத்மாவின் சகோதரி. ராஜ்கோட் ஸமஸ்தானத்தில் தற்சமயம் வசிக்கிறார். வயது 85.





ராஜகோட்டையில் காந்திஜியின் மூத்த சகோதரர் வீட்டில்
தாற்றல் யக்ஞம் நடைபெறுகிறது.

இதனை யெல்லாம் திட சித்தம் படைத்தவரான காந்திஜியின் பிரதிக்ஞை பங்கம் அடையவில்லை.

மேல்நாட்டு மாதர்களுடன் நெருங்கிப் பழகும் காலத்திலும் தாயாருக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காந்திஜி நினைவில் வைத்துக் கொண்டிருந்தார். விசுவாமித்திரரின் தவத்தைக் கலைக்க மேனகை வந்தது போல, அவருடைய வாழ்க்கையிலும் ஒருத்தி குறுக்கிட்டாள். அடக்கமே உருவெடுத்த காந்தி மகாத்மா தமது சுய சரிதையில் 'கடவுள்தான் அவளிடமிருந்து என்னைக் காப்பாற்றினார்!' என்று மிகவும் தன்னடக்கத்துடன் அந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்.

“எல்லோருக்குமே ஏற்பட்டு விடுமா, அம்மா?”

“ஏதோ, எல்லோரும் சொல்லிக் கொள்கிறார்களே! நான் என்னத்தைக் கண்டேன்! அப்புறம் அந்த ஊர்ச் சீதோஷ்ணஸ்திதிக்கு மாமிசம் சாப்பிடாமல் இருக்க முடியாதாம். இதெல்லாம் நம் தர்மத்துக்கு அடுக்குமா?”

“அம்மா! வீணாகக் கவலைப்பட வேண்டாம். நான் மாமிசமோ, சாராயமோ சாப்பிட மாட்டேன்.”

“இன்னொன்று கூடச் சொல்லிக் கொள்கிறார்கள். இங்கிருந்து போகிறவர்களில் எத்தனையோ பேர் அந்தப் பக்கத்துப் பெண்கள் மேல் மோகங்கொண்டு......”

“சிவ சிவா! நான் அம்மாதிரிக் காரியத்துக்கெல்லாம் போவேனா, அம்மா?”

“நீ சொல்வது சரி; இருந்தாலும் இந்தச் சகவாச தோஷம் இருக்கிறதே......”

“அந்தமாதிரி சகவாசமெல்லாம் நான் வைத்துக் கொள்ள மாட்டேன், அம்மா! நீ சொல்லும் இந்த மூன்று விஷயங்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றிக் கொள்வதாக நான் ஆண்டவன் மீது ஆணை வைத்துச் சொல்கிறேன்—போதுமா?”

இம்மாதிரியாகத் தம் தாயாருக்கு வாக்குறுதி அளித்தார் இக்காலத்து பீஷ்மரான காந்திஜி.

• • •

கப்பலேறிக் கொஞ்சதூரம் சென்றவுடனேயே 'லண்டனில் மாமிசம் சாப்பிடாமல் இருக்கமுடியாது; மது அருந்தாமல் இருக்க முடியாது' என்பது போன்ற உபதேசங்களைப் பலர் கூறத் தலைப்பட்டனர்.

இப்படிப் பலவிதத்திலும் தாய் தந்தையரின் மனம் கோணாமல் அவர்களுக்கு அளித்த வாக்கைப் பல சோதனைகளுக்கிடையே நிறைவேற்றிக் காட்டினார் உத்தம புதல்வர் காந்தி. அந்த உத்தமப் புதல்வரைப் பிள்ளையாகப் பெற்ற புத்லீ பாயும் காபா காந்தியும் கொடுத்து வைத்தவர்கள். அன்பு, அஹிம்சை, உண்மை என்ற மாபெரும் தத்துவங்களைப் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் உபதேசித்த மகான் காந்தி, அடிமைத் தளையில் கட்டுண்டிருந்த அன்னை பாரத தேவியைச் சுதந்திர தேவியாக்கிக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தார். பாரத மாதாவும் தன் மைந்தனின் பெருமையைக் கண்டு மனம் பூரித்தாள். மைந்தனின் மகிமையைக் கண்டு மகிழாத மாதாவும் உண்டோ?

நம் தாய் நாட்டின் தவப் புதல்வரான காந்திஜி 'தேசத்தின் தந்தை' என்று அழைக்கப்படலானார். 'தேசத்தின் தந்தை' என்று சொல்வதைக் காட்டிலும் 'உலகத்தின் தந்தை' என்று சொல்வதுதான் மிகவும் பொருந்தும். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பது முது மொழி. அணுசக்தியைக் கொண்டு உலகை ஆண்டு விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கும் நாடுகளும், படுகொலை மூலம் உலகில் பண்பாட்டைப் பாதுகாத்து விடலாம் என்று எண்ணும் பேதைகளும், பகை பூசல் இவற்றை மறந்து, அஹிம்சை, அன்பு, உண்மை என்னும் அரிய தத்துவங்களைக் கையாண்டு, ஆத்ம சக்தியின் மூலம் அமைதியை நிலை நாட்ட முன் வருவார்களானால் உலகம் போற்றும் உத்தமர் காந்தி மகானின் ஆத்மா சாந்தியடையும். வாழ்க மகாத்மா!


ஜுபிடர்
பிக்சர்ஸ் மகிழ்ச்சியுடன்
வெளியிடப்போகும்......
வேலைக்காரி
கதை, வசனம்: ஸி.என். அண்ணாதுரை · டைரக்ஷன்: ஏ.எஸ்.ஏ.சாமி
எம்.வி.ராஜம்மா · வி.என். ஜானகி · கே. ஆர்.ராமஸ்வாமி
டி.எஸ்.பாலையா நடித்தது · நடனங்கள் · லலிதா-பத்மினி
சீக்கிரமே வெளிவருகிறது


செட்டுகள்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI ஜனவரி 30, 1949 4 அணா


தன்னலமற்ற தியாகி
அசோகா சுகந்த பாக்குத்தூள்
No.1506
ASOKA

REGD. NO. M. 4392

